36 பக்கங்கள்

# உதயன்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

குரல் 28 கதிர் 086 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 08 புதன்கிழமை (20/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily

## மண்டபம் அகதி முகாம் பூட்டு: மக்கள் வெளிச் செல்லத் தடை

சென்னை,பெப். 20

கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் அகதிகள் முகாமில் இருந்து நாளை முதல் அகதிகள் வெளியே செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இராமநாதபுரம் பொலிஸ் அத்தியட்சகர் மயில்வாகனன் கூறியதாவது:

இம்மாதம் 24ஆம் திகதி நடைபெறும், கச்சதீவு விழாவுக்குச் செல்வோர் விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது.

பொலிஸ், புலனாய்வு, சுங்கம், இந்தியக் கடற்படை, மெரைன் பொலிஸார் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர். விழாவுக்குப், பயணிகளை ஏற்றிச் செல்லும் விசைப்படகுகள், நடுக்கடலில் விபத்து ஏற்படாத வகையில், பாதுகாப்பான, தரம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விழாவுக்கு, அகதிகள் யாரும் சென்று விடாதபடி கண்காணிக்கப்படுகிறது. நாளை முதல், மண்டபம் அகதிகள் முகாமில் இருந்து, அகதிகள் வெளியே செல்ல அனுமதி கொடுப்பது நிறுத்தப்படும். என்றார். (கு)

# பிரபாவின் மகன் படுகொலை வெளியானது புதிய ஆதாரம்

### ஜெனிவா மாநாடு நெருங்கும் வேளையில் சனல் – 4 அதிரடி; சர்வதேச நாடுகளும் மனித உரிமை அமைப்புகளும் அதிர்ச்சியில்







கொழும்பு, பெப்ரவரி 20

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன், இராணுவப் பதுங்குக்குழி போன்று காட்சியளிக்கும் ஓர் இடத்தில் உயிருடன் இருந்ததையும் பின்னர் அவர் சுட்டுக் கொல்லப்பட்டதையும் காட்டும் புகைப்படங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியாகியிருப்பது இலங்கையில் மட்டுமன்றி, சர்வதேச ரீதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதே சமயம், அரசியல் தலைவர்கள் பலரும் இது விடயத்தில் தமது கவலையையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஜெனிவா மாநாடு நெருங்கி வரும் சூழ்நிலையில் இந்தப் படங்கள் வெளிவந்திருப்பதானது இலங்கை அரசுக்கு மனித உரிமைகள் விடயத்தில் பெரும் அழுத்தங்களைக் கொடுக்கக்கூடுமென நம்பப்படுகிறது.

பாலச்சந்திரன், இலங்கைப் படையினரால்

பார்க்க பக்கம் 04

## இரத்தத்தை உறைய வைக்கும் பாலச்சந்திரனின் படுகொலை!

பிரிட்டன் ஊடகமான சனல்-4 இல் "இலங்கையின் கொலைக்களங்கள்" என்ற ஆவணப்படத்தை வெளியிட்டவரான இயக்குநர் கெலும் மக்ரே 'தி இன்டிப்பென்டன்ட்' என்ற பிரிட்டன் நாளேட்டில் நேற்று எழுதிய ஆக்கத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு இது.

இலங்கையின் இறுதிப்போர் தொடர்பில் "நோ பயர் சோன் (போர் தவிர்ப்பு வலயம்)" என்ற புதிய ஆவணப்படத்தை மார்ச் மாதத்தில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரின்போது இவர் வெளியிடவுள்ளார்.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் கடைசி வாரங்களில் கிடைக்கப்பெற்ற ஒளிப்படங்களுடன் ஒப்பிடும்போது கடைசியாக வந்திருக்கும் படங்கள் மிகப் பயங்கரமானவையாக இருக்கின்றன.

பார்க்க பக்கம் 04

## இதுவும் போலியானதாம்

### மறுக்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, பெப்.20

போர்க்குற்ற ஆதாரங்களாக சனல் 4 வெளியிட்ட புகைப்படங்கள் போலியானவை அல்ல எனப் புகழ்பெற்ற தடயவியல் நிபுணர் டெரிக் பவுண்டர் நிரூபித்துள்ள நிலையில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன், பாலச்சந்திரன் இராணுவத்தினரின் காவலில் இருந்தபோது படுகொலை செய்யப்பட்டுள்ளதாக சனல் 4 வெளியிட்டுள்ள புகைப்படங்கள் உண்மையானவை அல்ல என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய மறுத்துள்ளார்.

பார்க்க பக்கம் 04

## பாக். கடற்படை இலங்கை வருகை

கொழும்பு,பெப். 20

ஆறு நாள்கள் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் கடற்படையின் தூதுக்குழுவொன்று நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பை வந்தடைந்துள்ளது.

நான்கு பேர் கொண்ட

பார்க்க பக்கம் 04

## உண்ணக் கொடுத்துவிட்டு சிறுவனை சுட்டுக்கொல்வது மனிதாபிமானமா?

### இனியும் சர்வதேசம் தாமதிக்கக் கூடாது என்கிறது கூட்டமைப்பு

கொழும்பு,பெப். 20

"ஜெனிவா மாநாட்டில் இலங்கை அரசு புரிந்த போர்க்குற்றங்கள் தொடர்பாக ஒன்றரை மணித்தியாலங்கள் ஒளிபரப்பப்படவுள்ள காணொலியில் உள்ள ஒரு பகுதியே பாலச்சந்திரன் படுகொலை தொடர்பாகத் தற்போது வெளியாகியுள்ள புகைப்படங்கள். இதைவிட நெஞ்சை உலுக்கும் கொடூரமான சம்பவங்களும் வெளிவரக்கூடும். எனவே, இந்தியா உட்பட உலக நாடுகள் தாமதிக்காது இலங்கை அரசு மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளைத் துரிதப்படுத்தவேண்டும்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலி

பார்க்க பக்கம் 04

## இலங்கை அரசு மீது கடும் நடவடிக்கை

### 132 கிறிஸ்தவ குருமார் ஐ.நாவுக்குக் கடிதம்

ஜெனிவா,பெப் 20

அனைத்துலக சட்ட மீறல்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று கோரியும், இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் மன்னார் ஆயர் மற்றும் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 132 கிறிஸ்தவ குருமார் கையெழுத்திட்ட அறிக்கை ஒன்று, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்துத் தெளிவாக விளக்கியுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசியல்தீர்வு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் போனவர்கள் குறித்த விவகாரங்களைக் கையாளும் ஆணையாளரை நியமித்தல், இலங்கை இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவித்தல், ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள், இறந்தவர்கள், காணாமல் போனவர்களை நினைவு கூருதல் என்பன உள்ளிட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் முக்கியமான பரிந்துரைகள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதுடன், மீறப்படுகின்றன என்பதற்கு நாமும் சாட்சிகளாக இருக்கிறோம்.

கடந்த ஆண்டில், அனைத

பார்க்க பக்கம் 04

## நாளை முதல் கச்சதீவுக்கு செல்லலாம்

யாழ்ப்பாணம், பெப்.20

கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்கு நாளை வியாழக்கிழமை முதல் பக்தர்கள் செல்ல முடியுமென யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

மக்களுக்குரிய சகல வசதிகளும் அங்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கச்சதீவு அந்தோனியார் ஆலயத்திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த முறை திருவிழாவில் இலங்கையிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் 10 ஆயிரம் பக்தர்கள் வரை கலந்து கொள்ளவுள்ளனர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பார்க்க பக்கம் 04

## படையினரிடம் சரணடைந்த வீமனை காணாததால் நஞ்சருந்தினார் தாயார்

யாழ்ப்பாணம்,பெப்.20

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தளபதிகளில் ஒருவரான வீமனின் தாயார் சரணடைந்த தனது மகனைக் காணவில்லை என்ற மன அழுத்தத்தில் தற்கொலைக்கு முயற்சிசெய்து ஆபத்தான கட்டத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மிருசுவிலைச் சேர்ந்த ஏகாம்பரநாதன் இராஜேஸ்வரி (வயது 62) என்பவரே இவ்வாறு தற்கொலைக்கு முயன்று யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு போரின்

பார்க்க பக்கம் 04

# மீளக்குடியமர வேண்டியோர் விவரம் எம்மிடம் இல்லை

## அரச அதிபர் தெரிவித்தார்

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்கள் தொடர்பில் எந்தவொரு விவரமும் எம்மிடமில்லை. அத்துடன் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்கள் 28ஆயிரம் பேர் என்பது சரியான எண்ணிக்கையல்ல.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இன்னும் எத்தனை பேர் குடியமர்த்தப்படவுள்ளனர் என்று அரச அதிபரிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார்.

மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்கள் தொடர்பிலான விபரம் என்னிடமில்லை என்று அரச அதிபர் பதிலளித்தார்.

அப்படியானால் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 28 ஆயிரம் பேர் மீளக்குடியமர்வுக்காகப் பதிவு செய்துள்ளனரே என்று அரச அதிபரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

பதிவு செய்த எல்லோரும் இங்கில்லையே. அத்துடன் நாம் சில பிரதேசங்களை விடுவிக்கின்ற போது மீளக்குடியமர்வதற்கு பதிவு செய்த எல்லோரும் வருவதில்லை. எனவே 28 ஆயிரம் பேர் என்பது தவறானது. அது உத்தேசிக்கப்பட்ட மீளக்குடியமர்வு எண்ணிக்கைதான் என்று அரச அதிபர் பதிலளித்தார்.

மீளக்குடியமர்வுக்குப் பதிவு செய்தவர்கள் மீளக்குடியமர்வுக்கு வரவில்லையென்பதற்காக மீளக்குடியமர வேண்டியவர்கள் இல்லை என்று எவ்வாறு தெரிவிக்க முடியும். மீளக்குடியமர்வுக்காக பதிவு செய்த எவராவது உங்களுக்கு தாங்கள் அந்தப் பிரதேசத்தில் மீளக்குடியமரவில்லை என்று கடிதம் மூலம் அறிவித்துள்ளனரா? என்று அரச அதிபரிடம் மீண்டும் கேள்வி எழுப்பிய போது,

இதுவரை யாரும் கடிதம் தரவில்லை. இருப்பினும் மீளக்குடியமர்வுக்குப் பதிவு செய்த எல்லோரும் வருவார்கள் என்று நீங்கள் எப்பிடிக் கூறுவீர்கள் என்று பதில் கேள்வியெழுப்பினார்.

மீளக்குடியமர்வதற்குப் பதிவு செய்தவர்களை பதிவிலிருந்து எவ்வாறு நீக்குவீர்கள் எனக் கேட்டதற்கு அரச அதிபர் பதில் எதுவும் வழங்கவில்லை.

மேலும் 28 ஆயிரம் பேர் மீளக்குடியமர்வதற்கு பதிவு செய்துள்ளனர் என்ற போதும் அது உத்தேசப் பெறுமானம் எம்மிடம் சரியாக எவ்வளவு பேர் மீளக்குடியமர வேண்டியுள்ளனர் என்ற எந்தத்தரவும் இல்லை என்று அரச அதிபர் கூறினார்.

உடுவில் மற்றும் சுன்னாகம் பகுதியில் வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில், அவர்கள் தற்போது தங்கியுள்ள பிரதேச செயலர் பிரிவிலேயே நிரந்தர வதிவிட அட்டையைப் பெறுமாறு அரச அதிகாரிகளால் வற்புறுத்தப்பட்டு வருவதாக ஊடகவியலாளர்களால் அரச அதிபரிடம் கேள்யெழுப்பப்பட்டது.

இவ்வாறான முறைப்பாடு எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை. நான் அவ்வாறு எந்த அறிவித்தலும் விடுக்கவில்லை. முறைப்பாடு கிடைத்தால் ஆராயலாம் - என்றார். (த-5)

# திருப்பாடுகளின் நாடகம் இம்முறை 3 இடங்களில்

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்.திருமறைக்கலாமன்றத்தால் ஆண்டு தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் யேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பைச் சித்திரிக்கும் மாபெரும் அரங்க ஆற்றுகை நிகழ்வான திருப்பாடுகளின் நாடகம் 'காவிய நாயகன்' என்னும் பெயரில் இம்முறை மூன்று இடங்களில் மேடையேற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 21, 22, 23, 24 ஆகிய திகதிகளில் யாழ்.திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ள இவ் ஆற்றுகை, அதற்கு முன்பாக மார்ச் மாதம் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் கொழும்பு மறைமாவட்டத்தின் அனுசரணையுடன் கொட்டாஞ்சேனை புனித லூசியா தேவாலய முன்றிலிலும், 16 ஆம் திகதி இளவாலை திருமறைக்கலாமன்ற அரங்கிலும் மேடையேற்றப்படவுள்ளது.

அரங்கிலும், அரங்க பின்னணியிலுமாக பல நூற்றுக்கணக்கான கலைஞர்கள் பங்கேற்கின்ற இவ்வாற்றுகைக்கான ஒத்திகைகள் கடந்த ஜனவரி மாதம் 18 ஆம் திகதி இடம் பெற்ற பிரதி வழங்கும் வைபவத்தைத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவாகிய 'காவிய நாயகன்' ஆற்றுகை இதற்கு முன்பாக 2001, 2004, 2005 ஆகிய ஆண்டுகளில் மேடையேற்றப்பட்டு வரவேற்பைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# நிறுத்தல் கருவிகள் மூலம் சில சந்தைகளில் நிறை மோசடி

யாழ்ப்பாணத்திலுள்ள சில சந்தைகளில் நிறுத்தற் கருவிகள் முத்திரையிடாமல் பயன்படுத்தப்படுவதுடன் மோசடிகள் இடம்பெற்று வருவதாக மக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பதாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

மருதனார்மடம், சுன்னாகம், மானிப்பாய், இணுவில், சங்கானை ஆகிய சந்தைகளிலேயே மேற்படி மோசடிகள் இடம் பெற்று வருவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மேற்படி சந்தைகளில், முத்திரையிடப்படாத தராசுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் தராசுப்படிகளுக்குப் பதிலாகக் கல் மற்றும் சைக்கிள் சில் அச்சு என்பனவும் பயன்படுத்தப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் எமது உத்தியோகத்தர்களால் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டு சில வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் முத்திரையிடப்படாத தராசுகள் பயன்படுத்தப்படுவதோ அல்லது நிறுத்தல் மோசடிகளோ இடம் பெற்றால் உடனடியாக யாழ். மாவட்ட செயலகத்துக்கு அறிவிக்க வேண்டும் என்றார். (த)

# காலாவதியான பொருள் விற்பனை: அபராதம் செலுத்தினர் வர்த்தகர்கள்

யாழ்ப்பாணம்,பெப்.20

காலாவதியான பொருள்களை விற்பனை செய்தவர்கள் மற்றும் விளம்பரப் பலகைகளைக் காட்சிப் படுத்தாதவர்களுக்கு நீதிமன்றங்களினால் ஒரு இலட்சத்து 57 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை நீதிமன்றங்களில் குறித்த வியாபாரிகள் முன்னிலைப்படுத்தப்பட்டு அவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தினர்.

யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபை அதிகாரி எஸ்.சிவசீலன் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் 25 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் 21 பேருக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காலாவதியான பொருள்களை விற்பனை செய்த குற்றத்துக்காக ஒரு இலட்சத்து 29 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொருள்களின் விலைகளை விளம்பரப்பலகையில் காட்சிப்படுத்தாதவர்களுக்கு 8 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த மாதம் இதுவரையான காலப்பகுதியில் இந்தக் குற்றங்களுக்காக ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பாவனையாளர் நலன் தொடர்பில் வர்த்தகர்களுக்கு பலதடவை அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருந்தும் வர்த்தகர்கள் சிலர் தவறான நடவடிக்கைகளிலேயே ஈடுபகின்றனர். அவ்வாறு செயற்படும் வர்த்தகர்களுக்கு எதிராக தொடர்ந்து கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் சிவசீலன். (ஐ-4)

# விபத்தில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்.பண்ணைப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றது. சம்பவத்தில் கல்லூண்டாயைச் சேர்ந்த ராசேந்திரன் ரவீந்திரன் (வயது-26) என்பவரே காயமடைந்தார். (ஐ-4)

# பட்டப் பகலில் திருட்டு

கனகராயன்குளம்,பெப்.20

வவுனியா வடக்கு கனகராயன்குளம் பகுதியில் பட்டப் பகலில் வீடு புகுந்த திருடர்கள் வீட்டில் இருந்த 40 ஆயிரம் ரூபா பணம் மற்றும் நகைகளை களவாடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று பகல் வீட்டில் யாரும் இல்லாத வேளையில் திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

கனகராயன் குளம் மகா வித்தியாளயத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டுக்கு அருகில் சுமார் 300 மீற்றர் தொலைவில் கனகராயன்குளம் பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது. வீட்டை பூட்டி விட்டு ஆசிரியர்களான கணவனும் மனைவியும் பாடசாலை சென்ற வேளையில் வீட்டின் பின் வாயிலை உடைத்து திருடர்கள் பணத்தையும் நகைகளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கனகராயன் குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-422)

# அபிவிருத்திச் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் திருப்தி

## அமெரிக்கப் பிரதிநிதிகள் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் திருப்தியடைவதாக யாழ்.மாவட்டத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை வருகை தந்த அமெரிக்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்று அமெரிக்கத் தேசிய காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் உத்தியோக இயக்குநர் லிசா வில்லியம்ஸ் ஆகிய இருவரும் வருகை தந்தனர்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் இவர்கள் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை ஒரு மணி நேரம் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தினர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக யாழ்.அரச அதிபர் தெரிவித்தமை வருமாறு-

அமெரிக்கப் பிரதிநிதிகளின் யாழ்.வருகையின் முக்கிய நோக்கம் இந்தப் பகுதிகளில் எவ்வாறான வேலைகள், அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை ஆராய்வதே.

**அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை ஆராய்வதே நோக்கம்**

யாழ்.மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஒவ்வொரு துறைசார்பாகவும் எடுத்துக் கூறப்பட்டது.

ஏனைய மாவட்டங்களை விட யாழ்.மாவட்டத்துக்கு ஏன் அதிக நிதிஒதுக்கப்படுகின்றது என்று அவர்கள் என்னிடம் கேள்வியெழுப்பினர். நீண்டகாலப் போரின் காரணமாக இந்தப் பகுதிகளில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப் படவில்லை. அதனாலேயே தற்போது அதிகளவு நிதி ஒதுக்கப்படுகின்றது என்று பதில் கூறினேன்.

தற்போது இடம்பெற்று வரும் கட்டுமானப் பணிகள் தொடர்பிலும் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலும் அவர்கள் தமது திருப்தியை வெளியிட்டனர் என்றார். (த-5)

# அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் பார்வையாளர் மட்டுப்பாடு

## விலக்கக் கோருகின்றனர் உறவினர்

யாழ்ப்பாணம்.பெப், 20

யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கான பார்வையாளர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் நோயாளர்களது உறவினர்கள் இடையூறுகளை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 24 ஆம் விடுதியில் தனியொரு பிரிவாக அதிதீவிர சிகிச்சைப் பிரிவு இயங்கி வருகிறது.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள்,பலமான அடிகாயங்களுக்குள்ளானவர்கள், அதன் காரணமாக சத்திர சிகிச்சை செய்யப்பட்டவர்கள்,வேறு நோய் காரணமாக சத்திர சிகிச்சை செய்யப்பட்டு ஆபத்தான நிலையில் உள்ளவர்கள், விபத்துக்குள்ளாகி ஆபத்தான நிலையில் சிகிச்சை பெறுபவர்கள் போன்றவர்களுக்கு இந்த அதிதீவிர சத்திர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இவ்வாறு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெறுபவர்களது உறவினர்கள், நண்பர்கள் பலர் பார்வையிடுவதற்காக வைத்தியசாலைக்குச் செல்கின்றனர். இவ்வாறான நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு ஒருநாள் தாமதித்தாலும் சில வேளைகளில் உயிரற்ற உடலையே பார்க்க வேண்டிய நிலை ஏற்படுகிறது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏனைய விடுதிகளில் உள்ளவர்கள் பெரும்பாலும் சாதாரண நோயாளர்களே. உயிராபத்து இல்லாதவர்கள். அவர்களை பார்வையாளர் நேரத்தில் பலர் சென்று பார்வையிட முடிகிறது. ஆனால் ஆபத்தான நிலையில் அதிதீவிர சத்திர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்வையிட மூன்று பேருக்கு மாத்திரமே அனுமதியளிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் தூர இடங்களில் இருந்தும் வெளி மாவட்டங்களில் இருந்தும் பலர் வந்து ஆபத்தான நிலையிலுள்ளவர்களை ஒரு தடவையாவது பார்க்கத்துடிக்கின்றனர்.

பணத்தையும் செலவழித்து தமது வேலை நேரத்தையும் ஒதுக்கி அவர்கள் வைத்தியசாலைக்கு வருகின்றனர். ஆனால் ஒரு நோயாளியை இங்குள்ள உறவினரோ நண்பர்களோ மூன்று பேர் மாத்திரமே பார்வையிட அனுமதிக்கப்படுவதால், ஏனையவர்கள் வாசலிலேயே திரும்பிச் செல்லவேண்டிய நிலை ஏற்படுகிறது.

அதிதீவிர சத்திர சிகிச்சைப் பிரிவுக்குள் அதிக நேரம் அதிகளவான பார்வையாளர்கள் செல்வது சாத்தியமற்றது. எனினும் ஒருவர் 30 வினாடிகள் அல்லது ஒரு நிமிடமே நோயாளியைப் பார்வையிடுகிறார். எனவே பார்வையாளர் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோருகின்றனர்.

இது தொடர்பில் வைத்தியசாலை பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்த ராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

ஆபத்தான நிலையிலுள்ளவர்களே அந்தப்பிரிவில் வைத்து சிகிச்சையளிக்கப்படுகின்றனர். அந்தப் பிரிவினுள் அதிகம்பேர் நுழையும் போது நோய்த்தொற்று உட்பட சிகிச்சைக்கு இடையூறாகவே அமையும். ஆபத்திலுள்ள நோயாளர்களை அவர்களது உறவினர்கள் பார்வையிடுவதைவிட அவர்களுக்கான சிகிச்சையே முக்கியம். சில வைத்தியசாலைகளில் அத்தகைய பிரிவில் எவருமே அனுமதிக்கப்படுவதில்லை- என்றார். (ஐ-4)

# கிராம உத்தியோகத்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக

## யாழ். அரச அதிபருக்கு சங்கம் கடிதம்

யாழ்ப்பாணம், பெப்.20

கிராம உத்தியோகத்தர்கள் குற்றவியல் சார்ந்த நடவடிக்க்கைகளை மேற்கொள்வது அவர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலைமையை ஏற்படுத்துகின்றது. எனவே கிராம உத்தியோகத்தர்கள் வெளிக்கள வேலைகளைச் செய்யும் போது அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு யாழ்.மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது சங்க உறுப்பினரான நல்லூர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் இளம் கிராம உத்தியோகத்தர் எஸ்.விஜிதன் கடந்த 14ஆம் திகதி இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளார்.

மேற்படி கிராம உத்தியோகத்தருக்கு எந்தவிதமான தனிப்பட்ட பகைமையும் இல்லை. சட்டவிரோத மணல் கடத்தல், மாடு கடத்தல் போன்ற நடவடிக்கைகளைத் தடுத்ததன் விளைவாகவே அவர் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சட்டரீதியான விசாரணைகளை மேற்கொண்டு இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அத்துடன் கிராம உத்தியோகத்தர்கள் குற்றவியல் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்வது அவர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலைமையை ஏற்படுத்துகின்றது. எனவே கிராம உத்தியோகத்தர்கள் வெளிக்கள வேலைகளைச் செய்யும் போது அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (த-5)



கொழும்புத்துறை சுவாமியார் வீதிக்குக் 'கார்பெற்' போடுவதற்காகக் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் போடப்பட்ட கற்குவியல்கள் வீதியில் சிதறிக் காணப்படுகின்றன. இதனால் அந்த வீதியூடான போக்குவரத்தில் சிரமம் ஏற்பட்டுள்ளது.(த-17)

## ஆரிய குளம் மாசடைகிறது

யாழ்.ஆரிய குளத்தின் நீர் மாசடைந்து செல்லும் அபாய நிலை தோன்றியுள்ளது.

இந்தக் குளத்தின் கழிவு நீர் அதிகளவில் கலப்பதனால் குளத்தின் நீர் மாசடைந்து செல்வதாக யாழ்.மாநகர சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்தக் குளம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் புனரமைப்புச் செய்யப்படும் என்று கூறப்பட்டிருந்தது.

ஆயினும் இதுவரை குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை

இந்த நிலையில் குளத்தில் வழிந்து செல்வதால் அது மாசடைந்து நீரின் நிறமும் மாறிவருகிறது இதனால் குளத்தை அண்டிய பிரதேச கிணற்று நீரும் மாசுபடும் அபாயம் உள்ளதாக சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (த-17)

## மருத்துவச் சபையின் முன்பாக தோன்ற ஆசிரியர்கள் தயக்கம்

அச்சுவேலி, பெ.20

மருந்துவச் சான்றிதழ்களின் அடிப்படையில் இடமாற்றத்தை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கும் ஆசிரியர்கள் மருத்துவச் சபை முன்னிலையில் முற்படுத்தப்படவிருப்பதால் சிலர் அதன் பக்க விளைவைக் கருத்தில் கொண்டு மருத்துவச் சபையின் முன் தோன்றுவதை தவிர்த்து இடமாற்றத்தை ஏற்க முன்வந்துள்ளனர்.

மருத்துவச் சபை முன்னிலையில் முற்படுத்தப்படும் ஆசிரியர்களில் கற்பிப்பதற்குத் தகுதி இல்லாத ஆசிரியர்கள் கட்டாய ஓய்வில் செல்ல வேண்டும். அவ்வாறு இல்லாவிடினும் அவர்களின் மருத்துவத் தகைமை தொடர்பான சான்றுப் பத்திரம் சுயவிவரக் கோவையில் இடம்பெறுவதால் எதிர்காலத்தில் பதவி உயர்வு தொடர்பான தெரிவுகளின் போது அது எதிர்பாராத பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் மருத்துவச் சபை முன்தோன்றுவதை தவிர்க்கசிலர் முன்வந்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் இருந்து குறித்த வயது நிலைக்கு உட்பட்ட வெளிமாவட்ட சேவையை பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள் பதில் ஈட்டு அடிப்படையில் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படும் போது தமது உடல் நலன் குறைவு தொடர்பாக மருத்துவச் சான்றுகளுடன் மேல் முறையீடு செய்துள்ளனர்.

மருத்துவச் சான்றிதழ்களுடன் மேல் முறையீடு செய்த ஆசிரியர்கள் வடக்கு மாகாண மாவட்ட மருத்துவச் சபை முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளனர். மருத்துவச் சபை முன்னிலையில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாண கல்வி அமைச்சும் வடக்கு கல்வித் திணைக்களமும் மேற்கொண்டு வருகின்றன.

மருத்துவச் சபையின் இறுதி அறிக்கையை அடுத்து இடமாற்றச் சபை இறுதி முடிவை மேற்கொள்ளவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-11)

## புங்குடுதீவு - இறுப்பிட்டி பஸ் சேவை குறித்து பேச்சு

யாழ்ப்பாணம், பெப்.20

புங்குடுதீவு இறுப்பிட்டி பஸ் போக்குவரத்துத் தொடர்பாக தனியார் பஸ் உரிமையாளர்களுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதாக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராசா தெரிவித்தார். நீண்ட நாள்களின் பின் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இறுப்பிட்டி வழித்தடத்தில் இ.போ.ச. பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இ.போ.ச. பஸ் சேவை இடம்பெறாத காலத்தில் இந்த வழித் தடத்தில் சேவையில் இருந்த தனியார் பஸ் உரிமையாளர்கள் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து பாதிப்படைந்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

சேவை நேரங்களில் மாற்றம் கொண்டு வருவதன் மூலம் இந்தப் பகுதிக்கு ஒரு சிறந்த போக்குவரத்துச் சேவையை முன்னெடுக்கத் தனியார் பஸ் உரிமையாளர்களைச் சந்திக்கவுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் மேலும் கூறினார். (த-7)

## தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழா ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், யாழ். மறை மாவட்டத்துடன் இணைந்து நடத்தும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவின் தொடக்கவிழா நிகழ்வு கள் இன்று 20.02.2013 புதன்கிழமை காலை 9 மணிக்கு பிரதான வீதி பத்திரிசியார் வீதிச் சந்தியில் இருந்து கலை பண்பாட்டுப் பேரணியுடன் ஆரம்பமாகி யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

நூற்றாண்டு விழாக் குழுத் தலைவரும் யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீடப் பீடாதிபதியுமாகிய பேராசிரியர் தி. வேல்நம்பியின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுகளில் வரவேற்பு நடனத்தை யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் தேசிய பாடசாலை மாணவிகளும் வரவேற்புப் பாமாலையை புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்களும் வழங்குவர். வரவேற்புரையை புனித.பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்பணி ஜெறோ. செல்வநாயகம் நிகழ்த்துவார்.

நன்றாகத் தமிழ் செய்வோம் என்ற தொனிப் பொருளில் முன்னெடுக்கப்படும் இவ்விழாவின் தொடக்கத்துக்கான பிரகடனத்தை யாழ். ஆயர் மேதகு. தோமஸ் சவுந்தரநாயகம் மேற்கொண்டு ஆசி நல்குவார். தொடர்ந்து நல்லை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

நூற்றாண்டு விழாவின் இலக்கு குறித்த விளக்கவுரையை நூற்றாண்டு விழாக் குழுவின் இணைச் செயலர் அருட்கலாநிதி அ.ப. யெயசேகரம் வழங்குவார். விழாவின் தொடக்கப் பேருரையை யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி. விசாகரூபனும் நன்றாகத் தமிழ் செய்வோம், என்ற பொருளில் சிறப்புரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் வழங்குவர். (த-14)

## கந்தப்பசேகரம் வீதி விரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், பெப்.20

யாழ்ப்பாணம் கந்தப்பசேகரம் வீதி புனரமைப்புப் பணிகள் இன்னும் ஒரு மாதத்தில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதித் திருத்தப் பணிகளுக்காக யாழ். மாநகர சபை யாழ். வணிகர் கழகத்தின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளது.

அதற்கமைய யாழ்.வணிகர் கழகம் இந்த வீதியில் உள்ள கட்டட உரிமையாளர்களுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளது. இதனையடுத்து வீதியைப் புனரமைக்கும் பணியை மாநகர சபை முன்னெடுக்கவுள்ளது.

தற்போதைய வீதி 30 அடி அகலத்தால் விஸ்தரிக்கப்படும். உரிமையாளர்கள் தேவையான கட்டடங்களைத் தகர்த்துக் கொடுப்பார்கள்.

வாய்க்கால்கள் புனரமைத்து அவற்றுக்குக் கொங்கிறீட் மூடிகளைப் போடும் பணியையும் மாநகர சபையே மேற்கொள்வதற்கு ஒப்புக் கொண்டுள்ளது. (த-7)

## பனங் கள் விலை குறையும்

யாழ்ப்பாணம்,பெப்.20

குடாநாட்டில் பனங் கள்ளு உற்பத்தி அதிகரிக்கப்பட் டுள்ளதையடுத்து அதன் விலை மார்ச் மாதம் குறைக்கப்படலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்கள் போத்தல் கள்ளுக்கு மவுசு கூடியுள்ளதால் போத்தல்களில் கள்ளு அடைப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றன.

மேலும் பனை வெல்லத்துக்கு கடந்த வருடம் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதையடுத்து சங்கங்கள் பதநீர் உற்பத்திக்கு ஊக்குவிப்பு வழங்கிவருகிறது. சங்கங்களில் அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் கள் மற்றும் பதநீர் உற்பத்திக்கு தனித்தனியாக வழங்கப்பட்டுள்ளது.

சங்கங்களின் தவறணையில் கொள்வனவு செய்யப்பட்டு மேலதிகமாகக் காணப்படும் கள்ளினை பனஞ் சாராய உற்பத்திக்கு வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வருடம உற்பத்தி செய்யப்படும் கள் உரிய முறையில் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதால் சங்க அங்கத்தவர்கள் பயனடைவார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## நெற்பயிர் அழிவுக்கு நட்டஈடு வழங்குக

### விவசாயிகள் தரப்பில் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.20

யாழ்.குடாநாட்டில் இம்முறை ஏற்பட்ட நெற் செய்கை அழிவுக்கு அரசு நட்ட ஈட்டை வழங்க வேண்டும் என விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெரும்போக நெற்செய்கைக்கான அறுவடை நெருங்கும் சமயத்தில் மழை கொட்டித் தீர்த்ததால் நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி நாசமாகியுள்ளன.

இதனைவிட மழை விட்டு விட்டுப் பெய்வதால் நெற்பயிர்களை அறுவடை செய்ய முடியாது விவசாயிகள் தவிக்கின்றனர்.

வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் 40 சதவீதமான விவசாயிகள் இதுவரை அறுவடையை மேற்கொள்ளவில்லை.

ஏற்கனவே அறுவடை செய்து வெயிலில் உலர வைத்த நெற்பயிர்கள் கூட மழையில் நனைந்து பாதிக்கப்பட்டுள்ளன.

மழை தொடர்வதால் நெற்கதிர்களை அறுவடை செய்யாமல் அவற்றைக் கைவிடும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டிருப்பதாக விவசாய சம்மேளத்தினர் தெரிவித்தனர்.

குடாநாட்டு விவசாயிகள் பலர் இந்தமுறை பெரும்போக நெற்செய்கையில் பெரும் நட்டத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

இந்த அழிவு விவரங்களை விவசாயிகளிடம் இருந்து திரட்டி அவற்றை அரசுக்கு அனுப்பி வைப்பதற்கு விவசாய சம்மேளனங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன.

இந்தப் பயிர் அழிவுக்கு அரசு நட்ட ஈட்டை வழங்க வேண்டும் என்று விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(த-17)

## குருதிக் கொடை

தென்மராட்சி, பெப்.20

ஹற்றன் நஷனல் வங்கி உத்தியோகத்தர்களின் குருதிக்கொடை நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி வங்கிக்கிளையில் இடம்பெறும்.

யாழ். போதனா வைத்தியசாலை குருதிக் காப்பகத்தினர் விடுத்த வேண்டுகோளையடுத்து வங்கி உத்தியோகத்தர்கள் குருதிக் கொடை வழங்க முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரத்த வங்கிக்கு மேலும் குருதிக்கொடை வழங்கி உதவுமாறு கோரப்பட்டுள்ளது. (த-9)

## இதுவும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இலங்கைக்கு எதிரானவர்களின் திட்டமிட்ட செயற்பாடுகளே இவை. நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கில் பொய்யான தகவல்களையும், வதந்திகளையும் திட்டமிட்ட வகையில் பரப்பி வருகிறார்கள்.

நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலே இராணுவத்துக்கு எதிராக போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இக்குற்றச்சாட்டுக்கள் இலங்கைக்கு புதியதல்ல.

இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு எவ்வித உண்மையான ஆதாரங்களும் இல்லை. அவ்வாறான சில குற்றச்செயல்களை குற்றவியல் விசாரணைத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது - என்றும் அவர் தெரிவித்தார்.

## படையினரின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இறுதிக்கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதிகளில் ஒருவரான வீமனும் படையினரிடம் சரணடைந்துள்ளார். அதன் பின்னர் அவர் தொடர்பான எந்தவொரு தகவலும் குடும்பத்தினருக்குத் தெரிவிக்கப்படவில்லை.

இந்தநிலையில் தனது மகன் உயிருடன் உள்ளானா? இறந்துவிட்டானா? என்று தெரியாத நிலையில்,தனது மகனைத் தேடியலைந்துள்ளார்.இதனால் மனதளவில் பாதிப்புக்குள்ளான நிலையில் சாவகச்சேரியிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அவர் சிகிச்சை பெற்றுள்ளார்.

தனது மகன் தொடர்பில் எதுவும் தெரியாததுடன், மகனை மீட்பதற்காகச் சில நபர்களிடம் இலட்சக்கணக்கில் பணம் கொடுத்து ஏமாந்ததாக அவர் தன்னிடம் கூறியதாக வைத்திய நிபுணர் ஒருவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு நித்திரைக்குச் செல்லும் போது தனது மகனைக் காணவில்லையென்று அவர் அழுதுள்ளார்.இதன் பின்னர் அவர் தற்கொலை முயற்சியுடன் நஞ்சருந்தியதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

மிகவும் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அவருக்கு செயற்கை சுவாசம் வழங்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-5)

## உண்ணக்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

களின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய புதல்வர் பாலச்சந்திரனின் படுகொலை குறித்த புதிய ஆதாரமாக, அவர் வன்னியில் இறுதிப் போரில் இலங்கை இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட பின்னர் படுகொலைசெய்யப்பட்ட புதிய புகைப்படங்களை 'சனல் 4' ஊடாகப் பெற்று லண்டனின் 'த இன்டிபென்டென்ட்' நாளேடு மற்றும் இந்தியாவின் 'த இந்து' நாளேடு என்பன வெளியிட்டுள்ளன.

இது குறித்து நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

''இலங்கை அரசானது தாம் வன்னியில் இறுதிப் போரில் மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபட்டோம் எனக் கூறிவருகின்றது. ஆனால், அவர்களின் மனிதாபிமான நடவடிக்கையின் விசித்திரம் இப்போது அம்பலமாகியுள்ளது. சரணடைந்த பச்சிளம் பாலகனுக்கு சாப்பிட 'பிஸ்கட்' வழங்கி சித்திர வதைசெய்து சுட்டுப் படுகொலைசெய்வது தானா இலங்கை அரசின் மனிதாபிமானம்?

வழமையான பாணியில் இலங்கை அரசு பாலச்சந்திரன் படுகொலை தொடர்பாக வெளிவந்துள்ள புகைப்படங்களையும் மற்றும் வெளிவரவுள்ள காணொளிகளையும் முற்றுமுழுதாக மறுக்கும். யாழ். தெல்லிப்பழையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் இராணுவப் புலனாய்வாளர்கள் காட்டிய காட்டுமிரண்டித்தனத்தைக் கூட இலங்கை மூடிமறைக்க முற்படுகின்றது. தமிழ், ஆங்கில, சிங்கள ஊடகங்களில் வெளிவந்த இராணுவப் புலனாய்வாளர்களின் படங்கள், காணொளிகளைக்கூட அதிநவீன தொழில்நுட்பத்தில் திரிபுபடுத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், பாலச்சந்திரன் படுகொலை தொடர்பாக வெளிவந்துள்ள புகைப்படங்கள் மற்றும் வெளிவரவுள்ள காணொளிகளையும் 'தொழில்நுட்பத்தில் திரிபுபடுத்தப்பட்டிருப்பவை' என்று இலங்கை அரசு கூறும்.

இந்தியா உட்பட உலக நாடுகள் ஜெனிவா மாநாட்டில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணையை ஆதரிக்கவேண்டும். அத்துடன், தாமதிக்காது இலங்கை அரசு மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளைத் துரிதப்படுத்தவேண்டும்.

இந்த விசாரணைகளின் ஊடாக தமிழ் மக்கள் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை கிடைக்கவேண்டும். என்று தெரிவித்தார் சுரேஷ். (த)

## நாளை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பக்தர்களின் பாதுகாப்பு, குடிதண்ணீர், சுகாதார ஒழுங்குகள் என்பனவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேலும் பக்கதர்கள் தமக்குரிய உணவுப்பொருள்களைத் தாமே கொண்டு வர வேண்டும். அத்துடன் கச்சதீவில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உணவு விடுதியும் அமைக்கப்பட்டுள்ளது.

இதனைவிட கச்சதீவுக்கு வருகின்ற பொது மக்களின் நன்மை கருதி இலங்கை வங்கி, சுங்கத் திணைக்களம், அம்புலன்ஸ் படகுச் சேவை என்பனவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் வடதாரகை மற்றும் சில தனியார் படகுச் சேவைகளும் நாளை வியாழக்கிழமை முதல் கச்சதீவுக்கு சேவையில் ஈடுபடவுள்ளன. குறிகாட்டுவானிலிருந்து, கச்சதீவுக்குச் செல்ல 300 ரூபாவும் நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்குச் செல்ல 200 ரூபாவும் படகுக் கட்டணமாக அறவிடப்படவுள்ளது - என்றார். (த-5)

## பாக்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்த தூதுக்குழுவுக்குக் கட்டளைத் தளபதி மெஹ்பூப் இலாஹி தலைமை தாங்குகின்றார்.

இரு நாடுகளும் பயங்கரவாத எதிர்ப்பு போரில் தமக்குள்ள அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதே இந்தப் பயணத்தின் நோக்கமாகும்.

இரு நாடுகளுக்கும் இடையில் கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற படை அதிகாரிகள் மட்ட பேச்சின் தொடர்ச்சியாகவே இந்தப் பயணம் அமைகின்றது. (த)

## இலங்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தியான வழியில் இலங்கை அரசை விமர்சித்தவர்கள் அல்லது சவால் விடுத்தவர்கள், ஐ.நாவுடன் தொடர்புகளை வைத்திருந்தவர்கள் கூட, இலங்கை அமைச்சர்கள், அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸாரால் தாக்கப்பட்டுள்ளனர், விசாரிக்கப்பட்டுள்ளனர், கைது செய்யப்பட்டுள்ளனர், அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட எம்மில் சிலரான மதகுருமார், தாம் பழிவாங்கப்படுவோம் என்பதால் இந்தக் கடிதத்தில் கையெழுத்திடவில்லை.

பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் கொல்லப்பட்டும், காணாமற்போயும் உள்ள நிலையில், தமிழ்மக்களின் சமூக, கலாசார, மத, மொழி, நிலஉரிமைகள் - ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் போருக்கு முன்னரும், போரின் போதும், போருக்குப் பின்னரும், அடக்கப்படுவதை நாம் உணர்கிறோம்.இது எம்மை பகுதியாகவோ முழுமையாகவோ அழிக்கும் நோக்குடனான முயற்சியாகவே தோன்றுகிறது.

எனவே, அனைத்துலக சமூகம் மோசமான இந்த இறுதிக்கட்டத்திலேனும் பதிலளிக்க வேண்டியது கட்டாயம்.

எனவே, ஐ.நா மனித உரிமைகள் சபையின் 19 ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கமைய நிலைமைகளில் முன்னேற்றம் ஏதும் ஏற்படாததைச் சுட்டிக்காட்டும் வகையிலும்,போரின்போது எல்லாத் தரப்பினராலும் இழைக்கப்பட்ட அனைத்துலகச் சட்டமீறல்கள் குறித்து விசாரிக்க சுதந்திரமான அனைத்துலக விசாரணைக் குழுவை உருவாக்கும் வகையிலும், கடந்தகால, தற்போதைய மனிதஉரிமை மீறல்களுக்கு பரந்தளவிலான பதிலளிக்கும் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கும், நல்லிணக்க முயற்சிகளுக்கு இலங்கை அரசுக்கு உதவவும், ஆலோசனை வழங்கவும் சிறப்பு பிரதிநிதி ஒருவரை நியமிக்கவும்,

போரின் இறுதிக்கட்டத்தில் ஐ.நாவின் கடப்பாடுகளை நடைமுறைப்படுத்தத் தவறிய அதிகாரிகள் குறித்து பொறுப்புக்கூறும் பொறிமுறையை உருவாக்கவும்,

கடுமையான நடவடிக்கை எடுக்கும் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர கோருகிறோம்-என்றுள்ளது.

இந்தக் கடிதத்தில், கத்தோலிக்கத் திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை உள்ளிட்ட கிறிஸ்தவ குருமார் 132 பேர் கையெழுத்திட்டுள்ளனர். (த)

## இரத்தத்தை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஏற்றுக்கொள்ள முடியாதவையாகவும் இருக்கின்றன. திருவிழாக் கூட்டத்திலேயே தொலைந்து போன குழந்தையைப் போல ஒரு சிறுவன் அமர்ந்திருக்கிறான். அவன் தின்பதற்கு ஒரு வகையான சிற்றுண்டி கொடுக்கபட்டிருக்கின்றது. அங்கே யாராவது தனக்குத் தெரிந்தவர்கள் இருக்கிறார்களா என அடையாளப்படுத்த அவனது பார்வை முயற்சிக்கின்றது.

அந்தப் பையன் பாலச்சந்திரன் பிரபாகரன். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் பன்னிரண்டு வயதான மகன். அவனுடைய புதிய ஒளிப்படங்கள் இரத்தத்தை உறைய வைக்கும் கதை சொல்லுகின்றன. இந்தக் குழந்தை ஒருபோதும் தொலைந்து போகவில்லை. அவன் பிடிக்கப்பட்டு, இலங்கை இராணுவத்தினராகத் தோன்றுபவர்களால் காவல் செய்யப்பட்ட காவலரண் ஒன்றுக்குள் தடுத்து வைக்கப்பட்டான். இன்னும் இரண்டு மணி நேரத்துக்கு பின்னர். அவன் கொல்லப்படப் போகின்றான். அதன் பின்னரும் அவன் ஒளிப்படம் எடுக்கப்படுவான்.

பாலச்சந்திரன் கொலை செய்யப்பட்டு சிறிது நேரத்தின் பின் எடுக்கப்பட்ட வீடியோக் காட்சிகள் குறித்து கடந்த வருடமும் நான் எழுதியிருந்தேன். இலங்கை இராணுவத்தினரால் வெற்றி நினைவுச் சின்னமாகப் பதியப்பட்டவை இந்த வீடியோக் காட்சிகள். இப்போது வந்திருக்கின்ற புதிய ஒளிப்படங்களும் மிக முக்கியமான ஆதாரங்கள். ஏனெனில் பாலச்சந்திரன் சண்டையிலோ அல்லது பரஸ்பரத் துப்பாக்கி சூட்டுக்கு இடையிலோ அல்லது மிகக் கொடூரமான ஒட்டுப்படைக் குழுவினாலோ கூடக் கொல்லப்படவில்லை என்பதைப் புதிய ஒளிப்படங்கள் நிரூபிக்கின்றன. அவனுடைய இறப்பு கணிக்கப்பட்டது. 'கச்சிதமாகத் திட்டமிடப்பட்டது. அவனுடைய கொலை நடந்த சூழலை இந்த புதிய ஒளிப்படங்கள் கன கச்சிதமாக வெளிப்படுத்துகின்றன. அத்துடன் இலங்கை அரசு பதிலளிக்க வேண்டிய மேலும் பல கேள்விகளையும் விட்டுச் செல்கின்றன.

புதிதாக வந்திருப்பவை நான்கு ஒளிப்படங்கள். அவையனைத்தும் ஒரே ஒளிப்படக் கருவியால் எடுக்கப்பட்டவை என்று டிஜிற்றல் படிம ஆய்வாளர்கள் உறுதிப்படுத்துகிறார்கள். அவற்றில் இரண்டு படங்கள் பாலச்சந்திரன் உயிருடன் இருப்பதையும் மற்றைய இருபடங்கள் இறப்பையும் காட்டுகின்றன. கடைசி இரண்டு படங்களும் இரண்டு மணித்தியாலத்துக்கு குறைந்த நேரத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஆய்வுகள் குறிப்பிட்டுக் கூறுகின்றன. இந்த புதிய ஒளிப்படங்கள் மற்றும் அதனோடு இணைந்ததான வீடியோ காட்சிகள் என்பவற்றை மதிப்பார்ந்த தடயவியல் (பத்த லேயிஸ்) பேராசிரியர் டெறிக் பௌண்டர் ஆய்வு செய்திருக்கிறார்.

கடந்த வருடத்தில் நாங்கள் வெளியிட்ட இலங்கைப் போர் தொடர்பான வீடியோ காட்சிகளை அவரே ஆய்வு செய்திருந்தார். அவரது கருத்துப்படி பாலச்சந்திரனின் மேல்தோலில் காயங்களைச் சுற்றிக் காணப்படும் கறுத்திருக்கும் அடையாளங்கள் அவன் மிக நெருக்கமாக இருந்தே சுடப்பட்டிருக்கிறான் என்பதை உறுதிப்படுத்துகின்றன. அவனது மார்புகளில் காணப்படும் காயங்கள் குறித்துக் காட்டுவதன்படி முதலாவது சூட்டுடன் சிறுவன் மல்லாந்து கிழே விழுந்த பின்னர் மேலும் நான்கு சூடுகள் அவன் மீது சுடப்பட்டுள்ளன.

இந்தப் புதிய ஒளிப்படங்களைப் பார்த்த ஆய்வாளர்களின் முடிவு ''அவை புனையப்பட்டவையாகவோ அல்லது உருமாற்றம் செய்யப்பட்டவையாகவோ அல்லது வேறு வகையிலோ உருவாக்கப்பட்டவைக்கான ஆதாரங்கள் எதுவுமில்லை''

அத்துடன் சம்பவத்தைத் தெளிவாக்ப் படம் பிடிக்கும் வகையிலான துல்லியமான காட்சிகள் என்றும் அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். வேறு வீடியோவில் பதிவாகியிருக்கும் காட்சிகளில் (டிஜிற்றல் படிம ஆய்வாளர்களும் தடயவியல் ஆய்வாளர்களும் அவை நம்பகரமானவை என உறுதிப் படுத்துகின்றனர். அந்த பகுதியிலே இராணுவத்தினர் பலர் இருப்பது தெளிவாகியிருக்கிறது. இலங்கை அரசின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, இந்த ஆதாரத்தையும் மிக இலகுவாக மறுக்கக்கூடும். அத்துடன் தமிழ்ப் புலிகளால் செய்யப்பட்ட மறுக்கப்பட முடியாத குற்றங்களைச் சுட்டிக்காட்டக்கூடும். ஆனால் ஒரு தரப்பினர் செய்யும் குற்றங்கள் மறுதரப்பினரைக் குற்றங்களை நியாயப்டுத்துவதற்கு போதுமானவை அல்ல.

இந்த விடயத்தில்முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால், ஐ.நா.நிபுணர் குழு பரிந்துரைகளின் படி நம்பகரமான சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்றை நடத்தப்பட வேண்டும் என அவதானிகள் பலரும் கருதுகின்றனர். இருதரப்பினரும் புரிந்த குற்றங்கள் தொடர்பில் இந்த சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். (த)

## பிரபாவின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பதுங்குக்குழி ஒன்றில் தடுத்து வைக்கப்பட்ட பின்னரே சுட்டுக்கொல்லப்பட்டதற்கான ஆதாரங்களை வெளிப்படுத்தும் இந்த ஒளிப்படங்களை பிரிட்டனின் 'த இன்டிபென்டென்ட்' மற்றும் இந்தியாவின் 'த இந்து' ஆகிய நாளேடுகள் வெளியிட்டுள்ளன.

சனல் - 4 தொலைக்காட்சிக்கு கிடைத்த இந்த ஒளிப்படங்களை, இலங்கையின் கொலைக் களங்கள் காணொலி ஆவணப்படங்களை இயக்கிய கெலும் மக்ரே, இந்த ஊடகங்களுக்கு வழங்கியுள்ளார்.

ஒரே ஒளிப்படக்கருவியால், சில மணி நேரங்களுக்குள் எடுக்கப்பட்ட பல படங்களில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12 வயதான கடைசி மகன் பாலச்சந்திரன், இலங்கைப் படைகளின் காவலில் பதுங்குகுழி ஒன்றில் உயிருடன் அமர்ந்திருக்கும் காட்சியும், சில மணி நேரங்களின் பின்னர், அவர் நெஞ்சில் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்து கிடக்கும் காட்சிகளும் பதிவாகியுள்ளன.

இந்த ஒளிப்படங்கள் 2009 மே மாதம், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில் எடுக்கப்பட்டவை.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின மகன் பாலச்சந்திரன், மோதலில் அகப்பட்டே கொல்லப்பட்டார் என இலங்கை அதிகாரிகள் எப்போதும் கூறிவந்துள்ளனர்.

ஆனால், ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் திரையிடப்படவுள்ள, போர் தவிர்ப்பு வலயம் ஆவணப்படத்துக்கு கிடைத்துள்ள புதிய ஒளிப்படங்கள், பாலச்சந்திரன், உயிருடன் பிடித்து வைக்கப்பட்டு பின்னர் கொல்லப்பட்டதற்கான ஆதாரங்களை வெளிப்படுத்துகின்றன.

இறுதியாக எடுக்கப்பட்ட ஒளிப்படத்தை ஆராய்ந்த தடயவியல் நிபுணர்கள், பாலச்சந்திரனின் நெஞ்சில் ஐந்து தடவைகள் சுடப்பட்டுள்ளது என்பதையும், அந்தக் காயங்களைச் சுற்றி எரிகாயம் உள்ளதால் அவர் மிக நெருக்கமாக வைத்தே சுடப்பட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சுடப்பட்ட துப்பாக்கியின் குழல் வாய், பாலச்சந்திரன் நெஞ்சுக்கு மூன்று அடி அல்லது அதற்குக் குறைவான தூரத்திலேயே இருந்துள்ளது.

முதலாவது ரவை சுடப்பட்ட பின்னர், பின்புறமாக சாய்ந்து விழுந்த சிறுவன் மீது நான்கு தடவைகள் நெஞ்சில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

அவர் கண்களோ, கைகளோ கட்டப்பட்டிருந்த நிலையில் சுடப்பட்டதற்கான தடயங்கள் இல்லை.

ஆனால், அவரது மெய்க்காவலர்கள் கண் முன்பாகவே இந்தப் படுகொலை நிறைவேற்றப்பட்டிருக்கலாம் என்று தடயவியல் ஆய்வு நிபுணர் பேராசிரியர் டெரிக் பவுண்டர் தெரிவித்துள்ளார்.

புதிய ஒளிப்படங்கள் மிகமுக்கியமான ஆதாரங்கள். ஏனென்றால், பாலச்சந்திரன் மோதலில் அகப்பட்டே மரணமானார் என இலங்கை அரசு கூறுவதை நிராகரிப்பதற்கான ஆதாரம் அது.

அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதையும், அவருக்கு சாப்பிட நொறுக்குத்தீனி கொடுக்கப்பட்டுள்ளதையும், இரத்தத்தை உறைய வைக்கும் வகையில் படுகொலை செய்யப்பட்டுள்ளதையும் காட்டும் ஒளிப்படங்கள் இவை என்று கூறியுள்ளார் கெலும் மக்ரே.

இலங்கை அரச தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் சடலத்தில், தலையின் முன் பக்கத்தில் ஒருபகுதியைக் காணவில்லை.

அவரும் மிகநெருக்கமாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டிலேயே கொல்லப்பட்டிருக்கலாம் என்று கருதப்பட்டது.

எனினும், சரணடைய முயற்சிக்கும்போது எவருமே கொல்லப்படவில்லை என்று இலங்கை அரசு கூறிவந்தது.

இது குறித்து இலங்கை இராணுவப் பேச்சாளரிடம் 'த இன்டிபென்டென்ட்' நாளேடு கேள்வி எழுப்பியதற்கு, இவை பொய்கள், பாதி உண்மைகள், வதந்திகள், ஊகங்கள் என்று பதிலளித்துள்ளார்.

அதேவேளை, இந்த ஒளிப்படங்கள், இலங்கையில் நடக்கவுள்ள பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பதா இல்லையா என்ற அறிவிப்பை வெளியிடுவதற்கு பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரோனுக்கு மேலதிக அழுத்தங்களைக் கொடுத்துள்ளது என 'த இன்டிபென்டன்ட்' குறிப்பிட்டுள்ளது. (த)

# இராணுவ தண்ணீர் பவுஸர் மோதியதில் ஒருவர் பலி

## பூநகரி செட்டிய குறிச்சியில் சம்பவம்

பூநகரி, ஜன. 20

வீதியோரத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூடைகளுக்கு மேல் படுத்து இருந்தவர்கள் மீது இராணுவ தண்ணீர் பவுஸர் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு பூநகரி செட்டிய குறிச்சியில் இடம்பெற்றது. மழை வெள்ளம் வயல்களில் தேங்கி நின்றதால் பகலில் இயந்திரம் மூலம் அறுவடை செய்யப்பட்ட நெல் மூடைகள் வீதியோரத்தில் அடுக்கி வைக்கப்பட்டன. இவற்றை ஏற்றுவதற்கு வாகனம் வரும் வரை காத்திருந்த மூன்று பேர் நெல் மூடைகளின் மீது படுத்துள்ளனர். இரவு 10.30 மணியளவில் அந்த வழியே வேகமாக வந்த படையினரின் தண்ணீர் பவுஸர் வீதியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூடைகள் மீது மோதியது.

இதனால் படுத்திருந்த மூவரும் தூக்கி வீசப்பட்டனர். இவர்களில் ஒருவர் வாகனச் சில்லுக்குள் அகப்பட்டு தலை நசிந்து சம்பவ இடத்திலேயே பலியானார். வேறொருவர் வாகனத்தின் கம்பியில் சாரம் சிக்கியதில் இழுபட்டுச் சென்றதில் காயமடைந்தார். மற்றையவர் வெளியில் வீழ்ந்ததால் காயமின்றித் தப்பி னார்.

பூநகரி செட்டிய குறிச்சியைச் சேர்ந்த 45 வயதான அப்பன் என்பவரே பலியாகியுள்ளார். காயமடைந்த பூநகரி முட்கொம்பனைச் சேர்ந்த 47 வயதான குணரத்தினம் குணசீலன் என்பவர் பூநகரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பூநகரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் .

(க-9-6)



கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் புதிய பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்ட எச்.டி.கே.எஸ்.கபில ஜெயசேகர கிளிநொச்சி இரணைமடுக்குளத்தில் அமைந்துள்ள தமது அலுவலகத்தில் பொலிஸ் உயரதிகாரிகளுடன் கைலாகு கொடுத்து மரியாதையை ஏற்றுக்கொள்கின்றார். (க-6)

### மன்னார் சித்தி விநாயகருக்கு இம்முறை சிறந்த பெறுபேறு

மன்னார்,பெப்.20

மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் இருந்து கடந்த வருடம் இடம்பெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளதாக பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

மேலும் 68 இற்கும் அதிகமான மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்வதற்கான தகுதியைப் பெற்றுள்ளதாகவும் பாடசாலை அதிபர் ஏ.ஜ.தயானந்தராஜா தெரிவித்துள்ளார்.

இதில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 24 மாணவர்களும், கணிதப் பிரிவில் 11 மாணவர்களும், வர்த்தகப் பிரிவில் 11 மாணவர்களும், கலைப் பிரிவில் 22 மாணவர்களும் பல்கலைக் கழகத்துக்குச் செல்வதற்கான தகுதியைப் பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-12)

# இரணைமடுக்குளம் புனரமைக்கப்படவுள்ளதால் சிறுபோகச் செய்கை நிலப்பரப்பில் மாற்றங்கள்

கிளிநொச்சி,பெப்.20

*இரணைமடுக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளதால் சிறுபோக நெற்செய்கைக்கான நிலப்பரப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.*

இதன் பிரகாரம் கிளிநொச்சியின் மேற்குப் பகுதிகளில் நெற்செய்கைகள் இடம்பெறாது. இங்குள்ள விவசாயிகளுக்கு இதற்குப் பதிலீடாக கிழக்குப் பகுதியில் விவசாய நிலங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

மேலும் இரணைமடுக் குளத்தின் வலதுகரை வாய்க்காலில் அமைந்துள்ள பி1, பி2 பகுதிகள் உட்பட கிளிநொச்சியின் கிழக்குப் பகுதியில் சிறுபோக நெற்செய்கைகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை நெற்செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்களின் அளவிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கர் நிலத்தைக் கொண்டுள்ள விவசாயி ஒருவர் ஒரு ஏக்கர் நிலத்திலும், ஒன்று தொடக்கம் மூன்று ஏக்கர் நிலத்தை உடைய விவசாயி ஒன்றரை ஏக்கர் நிலத்திலும், 3 தொடக்கம் 5 ஏக்கர் நிலத்தைக் கொண்டுள்ள விவசாயி 3 ஏக்கரிலும், 5 தொடக்கம் 10 ஏக்கர் வரையான நிலத்தை உடைய விவசாயி 7 ஏக்கரிலும், பத்து தொடக்கம் 25 ஏக்கர் நிலத்தை கொண்டுள்ள விவசாயி 10 ஏக்கர் நிலத்திலும் நெற்செய்கையை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சகல பயிர் நிலங்களும் அளவீடு செய்யப்படவுள்ளன என்றும் தெரியவருகின்றது. (க-18)

# வவுனியா முருகனூரில் சுயதொழில் பயிற்சிகள்

நெளுக்குளம்,பெப்.20

வவுனியா முருகனூர் கிராமத்தில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் சுயதொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆரம்பத்தில் 45 மாணவர்களுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாக விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரியான சகிலா பானு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வீட்டுத்தோட்டம், காளான் வளர்ப்பு, மலர்ச் செய்கை, தேனீ வளர்ப்பு மற்றும் சுயமாக விவசாய அறிவூட்டல் தொடர்பான பயிற்சிகள் இங்கு வழங்கப்படும். மேலும் வவுனியாவில் பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் பிரகாரம் 45 மாணவர்களுக்கான கற்கைநெறியை முருகனூரில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் ஆரம்பித்துள்ளோம். காளான் வளர்ப்பு தொடர்பான அறிவு இன்று பலரிடம் இல்லை. காளானை உற்பத்தி செய்தல் மற்றும் அதில் உள்ள ஊட்டச் சத்து தொடர்பான அறிவை ஊட்டல், அதனைப் பாதுகாத்து வைத்து விற்பனை செய்வதன் மூலமாக இலாபம் ஈட்டுதல் தொடர்பான பயிற்சிகள் இங்கு வழங்கப்படுகின்றன.

மேலும் மலர்ச்செய்கை மேற்கொண்டு அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலமாகப் பெருமளவு இலாபத்தை ஈட்டிக் கொள்ளலாம்.

இன்று கடைகளில் மலர் மாலைகளைப் பெற்றுக் கொள்வதில் தட்டுப்பாடான நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் தேனீ வளர்ப்பு என்பது வன்னி மாவட்டத்தின் பாரம்பரிய தொழில் ஆகும். அதனை மேம்படுத்துவதற்கும் நாம் முன்வந்துள்ளோம்.- என்றார்.

(க-402)

# போதிய தமிழ்ப் பொலிஸார் இல்லாததால் அல்லற்படும் மக்கள்

கிளிநொச்சி,பெப்.20

கிளிநொச்சியிலுள்ள பொலிஸ் நிலையங்களில் போதிய தமிழ்ப் பொலிஸார் இல்லாததால் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக இங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

தாம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று சிங்கள மொழியிலேயே முறைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் அவசரத் தகவல்களை வழங்கும் பொருட்டு பொலிஸ் நிலையத் தொலைபேசியுடன் தொடர்பு கொண்டால் அங்கு சிங்கள மொழி பேசும் பொலிஸாரே தொடர்பாடல் அதிகாரிகளாகச் செயற்பட்டு தகவல்களைப் பெற்றுக் கொள்கின்றனர் என்றும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி, தருமபுரம், அக்கராயன்குளம் ஆகிய இடங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையான தமிழ்ப் பொலிஸாரே கடமையில் உள்ளனர். இதனால் தாம் சிரமம் இன்றி முறைப்பாடுகளைச் செய்யவோ அல்லது முறைப்பாட்டுப் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளவோ முடியாத நிலையில் இருப்பதாகவும் இங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

(க-6)

# ஒலிபெருக்கிகளின் ஓசையால் பாதிப்புக்குள்ளாகும் மக்கள்

நெளுக்குளம், ஜன. 20

வவுனியாவிலுள்ள ஆலயங்களில் இருந்து ஒலிக்கின்ற ஒலிபெருக்கிகளின் ஓசையால் தாம் பாதிப்புகளை எதிர்கொள்வதாக இங்குள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவிலுள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களில் நிரந்தரமாகவே ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. சிறு ஆலயங்களிலும் உற்சவ காலத்தின் போது ஒலி பெருக்கிகள் பாவனையில் உள்ளன.

இந்த நிலையில் விசேட தினங்களில் அதிகாலைவேளைகளில் ஒலிபெருக்கிகள் பலத்த ஒலியை எழுப்பும் வகையில் இயக்கப்படுகின்றன.

அதிகாலை வேளையில் கல்வி கற்கும் மாணவர்களும் பாதிக்கப்படுகின்றனர். நோயாளர்கள், குழந்தைகள் எனப் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆலயங்களில் இருந்து எழும் ஒலிபெருக்கிகளின் ஒலியினால் தமது அன்றாடக் கடமைகள் பாதிக்கப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

(க-402)

# தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா கிளிநொச்சியில்

கிளிநொச்சி,பெப்.20

தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி மண்டபத்தில் தமிழ்தூது தனிநாயகம் அடிகளின் நூற்றாண்டு விழாவும், பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெறும்.

தமிழ்ச் சங்கத் தலைவர் க.ம.பத்மநாதன் இந்த நிகழ்வுக்குத் தலைமை வகிக்கவுள்ளார்.

வரவேற்புரையைத் தொடர்ந்து தொடக்க உரையை கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆற்றவுள்ளார்.

வாழ்த்துரைகளை கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. இதயராசா, அக்கராயன் மகா வித்தியாலய அதிபர் க.மதுரநாயகம், உருத்திரபுரம் மகா வித்தியாலய அதிபர் திருமதி இ.மீனலோயினி, கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி அதிபர்திருமதி த.ஜெயந்தி ஆகியோர் வழங்கவுள்ளனர்.

சிறப்புரைகளை கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு அலுவலர் மா.அருள்சந்திரன், நூற்றாண்டு விழாக் குழு இணைச் செயலர் அருட்பணி அ.பி.ஜெயசேகரம் அடிகள் ஆகியோர் வழங்குவர். நிறைவுரையை அருட்பணி அ.யாவீசு அடிகள் வழங்குவார்.

விழாவின் இறுதியில் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(க)

### இயக்கச்சி கணுவில் வீதியில்

# வெள்ளம் தேங்கி நிற்பதால் 800 குடும்பங்களுக்கு பாதிப்பு

கிளிநொச்சி, பெப்.20

இயக்கச்சி கணுவில் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் சுமார் 800 குடும்பங்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிய வந்துள்ளது. இயக்கச்சி கணுவில் வீதியில் இரண்டரை அடி அளவுக்கு மழை வெள்ளம் தொடர்ந்து தேங்கி நிற்பதால் இந்த வீதியைப் பயன்படுத்தும் மூன்று கிராமங்களைச் சேர்ந்த 800 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெரும் சிரமங்களைத் தினமும் எதிர்கொண்டு வருகின்றன.

மாசார், முருகானந்த நகர் , மல்வில் ஆகிய கிராமங்களில் வதியும் மக்கள் கணுவில் வீதி வழியாகவே தமது நாளாந்தத் தேவைகளுக்குச் சென்று வருகின்றனர். அண்மையில் பெய்த மழையினால் சுமார் 50 மீற்றர் நீளத்துக்கு இரண்டரையடி உயரத்தில் வெள்ளம் தேங்கி உள்ளது. மேலும் சைக்கிளில் கூடச் செல்ல முடியாத அளவுக்கு வீதியின் பல இடங்களில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஏ-9 வீதியூடாகப் பயணிப்பவர்கள் தினமும் நடந்து செல்ல வேண்டிய நிலையில் உள்ளதாகவும் தெரியவருகின்றது.

(க-9)

## யானைகளின் தொல்லைஅதிகரிப்பு

மட்டக்களப்பு,பெப்.20

மட்டக்களப்பு, போரதீவுப்பற்று பிரதேச செயலர் பிரிவில் தொடர்ந்து காட்டு யானைகளின் தொல்லைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன என்று பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த 20 வருடங்களக இருந்துவரும் இந்தப் பிரச்சினைக்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பாக வாக்குறுதி கள் அளிக்கப்பட்டும், இதுவரை நிறைவேற்றப் படாம லிருப்பது தமக்கு கவலையளிக்கிறது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த நிலைமை மேலும் நீடிக்குமானால் அந்தப் பகுதி மக்களின் அன்றாடச் செயற்பாடுகளும், வாழ்வாதாரமும் பாதிப்படையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## வெளிநாடுகளில் பணிப்பெண்களாக தொழில்புரிவோரின் விவரம் சேகரிப்பு

வெளிநாடுகளில் பணிப் பெண்களாக தொழில் புரியும் பெண்கள் பற்றிய விவரங்களைச் சேகரிக்கும் நடவடிக்கையை காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் ஆரம்பித்துள்ளது.அண்மையில் இடம்பெற்ற காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் செயற்குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர் மானம் மேற்கொள் ளப்பட்டது.

அதற்காக காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேள னத்தால் தயாரிக்கப்பட்ட விண் ணப்பப்படிவமொன்றின் மூலம் இந்தத் தகவல்கள் சேக ரிக்கும் திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

அதன் ஊடாக காத்தான் குடியையும் அதனை சூழ வுள்ள கிராமங்களில் இருந் தும் வெளிநாட்டுக்கு பணிப் பெண்களாக செல்பவர்களின் காரணங்கள் கண்டறியப்படவுள்ளன. அதனைத் தொடர்ந்துசம் மேளனத்தின் கூட்டு ஸக்காத் திட்டத்தின் ஊடாக பல்வேறு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

காத்தான்குடியிலிருந்து வெளிநாட்டுக்கு பணிப் பெண்களாக செல்பவர்கள் குறைவாகக் காணப்பட்டபோதிலும், வெளிநாட்டில் தொழில்புரியும் இந்தப் பிரதேச பெண்கள் பற்றிய விவரம் ஒன்று சேகரிக்கப் பட வேண்டும் என்ற அடிப் படையிலேயே இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.சவூதி அரேபியாவில் பணிப்பெண் ரிஸானாவுக்கு மரணதண்டனை விதிக்கப் பட்ட பின்னர் காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத் தில் இடம் பெற்ற கலந்துரை யாடலின்போது இந்தத் தீர் மானம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படு கின் றமை குறிப்பிடத்தக்கது. (ச)


01-03-2013 இல்
மாணிக்க விழாவினைக்
கொண்டாடும்

மாணிக்க விழா மகுடம்
40
1973 - 2013

The Express Institute இனை
வாழ்த்துவதில்
பெருமை கொள்கின்றோம்.

மகுடஜோதியாய் விளங்கும் 'எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட்'
நிறுவனம் மகத்தான சேவைகள் பலவற்றை இன்னும்
வழங்க எம் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

ஆறுமுகம் வீதி,
கல்வியங்காடு.

வாழ்த்துவோர்,
நா. கிருஷ்ணதாசன்
குடும்பம்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு
1953
*
07
*
06



இறப்பு
2013
*
01
*
21

அமரர்

### இந்திரகுமாரி இராமகிருஷ்ணர்

எல்லாத் தெய்வத்தையும் வேண்டியே நாம் இருந்தோம்
எந்தத் தெய்வமும் எம்மை ஏறெடுத்துப் பார்க்கவில்லை-எம்
அன்புத் தெய்வம் அருமைப் பிள்ளைகளையும் நோயால்
அவதியுற்று வாழும் ஆசைக் கணவனையும் கைவிட்டு
அறுபதாம் வயதில் கூற்றுவனிடம் சென்றாயே...
ஆறுமோ எம் துயரம் என்றைக்கும் எப்போதும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் சபிண்டீகரண நிகழ்வு இன்று (20.02.2013) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காரைக் கலட்டி,
தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

(27755) (10.6.7)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
0212260086

## நூலகம் மக்கள் பாவனைக்கு

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் பழமை வாய்ந்த நூலகங்களில் ஒன்றாகக் கருதப்படும் பெரிய கல்லாறு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் விவேகானந்தா பொது நூலகம் மக்கள் பாவனைக்காக நேற்று செவ்வாய்க் கிழமை விடப்பட்டுள்ளது. சுனாமியால் சேதமடைந்த இந்த நூலகம் இதுவரை காலமும் மக்களின் பாவனை இன்றிக் காணப்பட்டது.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### செல்வராசா சுகந்திரன்



காளிகோயிலடி, பத்தமேனி,
அச்சுவேலியைச் சேர்ந்த

**செல்வராசா சுகந்திரன்**

சமாதான நீதிவானாக யாழ்.மாவட்ட நீதிபதி
A.A. ஆனந்தராஜ் அவர்கள்
முன்னிலையில் நேற்று (19.02.2013)
செவ்வாய்க்கிழமை சமாதான நீதிவானாக (J.P)
சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை பட்டதாரியும், தற்போது மன்னார், மன்/புனித சபேரியல் பெண்கள் தேசிய பாடசாலையின் ஆசிரியரும் ஆவார். இவரது சேவைநலன் பெற நாம் மனம் மகிழ பாராட்டி வாழ்த்துகிறோம்.

காளிகோயிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.

(28988) (10.6.7)

குடும்பத்தினர்.


## காணி விற்பனைக்கு

நல்ல சூழலில் நல்லூர்க்
கோயிலுக்கு அண்மையில்
1 ½ பரப்புக் காணி உடன்
விற்பனைக்குண்டு

தொடர்பு:
0755546000, 0729586931
யாழ்ப்பாணம்.

(28989) (8.4.6)



## தேவை

யாழ். நகரில் ஸ்ரூடியோ ஒன்றுக்கு
I Video Editing
II Photoshop (Album Disigner)
III சிற்றூழியர்கள்
அனுபவமுள்ளவர்கள் ஆண், பெண்
இருபாலாரும் நேரில் வரவும்.
தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

309, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0777162339


## வடமராட்சியின் சாதனையாளர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது நிறுவனத்தின் கணக்கீட்டு ஆசிரியர்
திரு.பா.கிருஷ்ணஜோதி அவர்களின் விசேட
கணக்கீட்டுப் பயிற்சி வகுப்பில் கல்வி கற்று
சாதனை படைத்தவர்களான...

| | |
|---|---|
| சபாரட்ணம் பரதன் | 3 A |
| மகேந்திரன் கோணேஸ்வரன் | 3 A |
| நவரத்தினம் மதுரா | 3 A |
| மாணிக்கராசா கயல்விழி | 3 A |
| மரிய எட்மன் ராஜ்குமார் இனித்தா | 3 A |
| சுகுமாரன் தர்சிகா | 3 A |

ஆகியோரும் மேலும் கணக்கீட்டுப் பாடத்தில் "A"தரச்சித்தியை பெருமளவு மாணவர்களும் "B", "C" தரச்சித்திகளை ஒரு சில மாணவர்களும் பெற்றுள்ளதுடன் அனைவரும் கணக்கீட்டுப் பாடத்தில் "C" தரத்துக்கு மேல் பெற்று எமது கல்வி நிலையத்தில் படித்த எல்லா மாணவரும் (100%) பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.

தன்னம்பிக்கை, துணிச்சல், விடாமுயற்சியுடன் கூடிய தொடர் பயிற்சியால் இந்த சாதனையை நிகழ்த்திய இந்த மாணவச் செல்வங்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேன்மேலும் சாதனை கள் பல புரிந்து இத் தரணியில் என்றும் புகழுடன் வாழ்ந்திட உளம் மகிழ்ந்து உங்களை வாழ்த்துகின்றோம்.

நிர்வாகி
(பசுபதி பாலகிருஷ்ணன்)

வர்த்தகப் பிரிவு மாணவர்கள் A/L 2013 BATCH
வர்த்தகப் பிரிவு மாணவர்கள் A/L 2014 BATCH
வர்த்தகப் பிரிவு மாணவர்கள் A/L 2015 BATCH

OXFORD ENGLISH ACADEMY
P.K. LANE, POINTPEDRO

## சேவை நலன் பாராட்டு



எமது பாடசாலையில் இரு தசாப்தங்களாக மாணவர்களின் கல்விக் கண்ணைத் திறப்பதிலேயே முழுமூச்சாக ஈடுபட்ட

திருமதி
**பரமேஸ்வரநாயகி கணபதிப்பிள்ளை** B.A., Dip. in. Edu.

அவர்கள் தமது 59ஆவது அகவையில் ஓய்வுபெறுகின்றார். நல்லூர் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக பணிபுரிய ஆரம்பித்து, பின் ஆசிரியர் சேவையில் நாட்டம் கொண்டு புத்தளம் சாஹிரா மத்திய கல்லூரியிலும், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்திலும் ஒரு தசாப்தகாலம் சேவையாற்றி, எமது பாடசாலையில் இரு தசாப்த காலங்கள் கற்பித்தலில் தீவிர ஈடுபாட்டுடன் கற்பித்துள்ளார். ஆசிரியை அவர்கள் ஓய்வுகாலத்தில் ஆரோக்கியத்துடனும் சிறப்புடனும் வாழ இறை ஆசி வேண்டுவதுடன் இதுநாள் வரையான அவரது சேவையை போற்றி வாழ்த்துகின்றோம்.

யா/கோண்டாவில்
இந்து மகாவித்தியாலயம்,
கோண்டாவில்

ஆசிரியர்
நலன்புரிக் கழகம்

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## தமிழர் தரப்பு நியாயத்தை எம்மவர் வெளிப்படுத்த வேண்டிய தருணம் இது!

எதிர்வரும் 25 ஆம் திகதி ஜெனிவா நகரில் ஆரம்பமாக இருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைக்கவிருக்கும் பிரேரணையின் நகல் வடிவம் இப்பொழுது பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நகல் வடிவத்தில் மேற்கொண்டு சேர்க்கப்பட வேண்டிய அல்லது நீக்கப்பட வேண்டிய அல்லது சீர்செய்ய வேண்டிய அம்சங்களை உறுப்பு நாடுகளிடமிருந்து அமெரிக்க அரசு எதிர்பார்க்கின்றது. அதற்காகவே அதன் பிரதிகள் உறுப்பு நாடுகளுக்கும் ஏனைய அக்கறையுள்ள தரப்புகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இலங்கையில் தமிழர் தரப்பில் குரல் கொடுத்து வரும், குரல் கொடுப்பதற்கு மக்கள் ஆணையைப் பெற்றுள்ள அமைப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பிரதியொன்று அனுப்பப்பட்டதா என்பது குறித்து இதனை எழுதும் வரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

எதுவானாலும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளுக்கு இலங்கைத் தமிழர்களின் இன்றைய நிலைமைகளை விளக்கியும், தமிழ் மக்களின் நியாயமான வாழ்வுரிமைகளை நிலைநாட்டும் வகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துதவுமாறு கோரும் அறிக்கையொன்றை அனுப்புவதற்கான முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த வகையில் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களை அணுகித் தமது கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்திருப்பார்கள் என்று நம்பலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏற்கனவே தென்னாபிரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டு திரும்பியுள்ளனர்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எதனையும் அரசாங்கம் நிறைவேற்றவில்லை. வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் இருப்பு அதிகரித்து வருகிறது. இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அரசு முறையாகச் செயற்படவில்லை. இந்த நிலைமையில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் பிரேரணை தமிழ் மக்களுக்கு பயன் அளிப்பதாக இருக்க வேண்டும். அதற்கு வழி செய்யும் விதத்தில் பேரவையின் தீர்மானம் இறுக்கமாக இருக்க வேண்டும் என்ற வகையில் வெளிநாட்டு ராஜதந்திரிகளிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வற்புறுத்தி வருகின்றனர்.

அதேவேளை, இன்றைய இலங்கைத் தமிழர் நிலைமைகளை விளக்கி ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கும், உறுப்பு நாடுகளுக்கும் அறிக்கைகளை அவர்கள் அனுப்புவார்கள் என்று தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது நியாயமானதே.

மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்படவிருக்கும் பிரேரணையை வலுவிழக்கச் செய்வதற்கான முயற்சிகளில் அரச தரப்பு ஈடுபட்டுள்ளது. அத்துடன் ஜெனிவா மாநாட்டில் கலந்து கொள்ள அரச தரப்பில் வலுவான குழுவொன்றை அனுப்புவது குறித்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த வருடம் மார்ச் மாதம் நடந்து முடிந்த பேரவை மாநாட்டில் கலந்து கொள்ள பெரும் எடுப்பில் குழுவொன்றை அரசு அனுப்பியிருந்தது. அரசு தனது சார்பில் வெளிநாட்டு ராஜதந்திரிகளைச் சந்தித்து பிரசாரம் செய்வதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீதி அமைச்சர் ஹக்கீம், யாழ். மாநகர மேயர் மற்றும் அப்போதைய அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் முதலியவர்களை அழைத்துச் சென்றிருந்தது. இலங்கையில் தமிழ் மக்களுக்கு எந்தவிதப் பிரச்சினையும் இல்லை என்ற வகையில் அவர்கள் பரப்புரைகள் செய்திருக்கக் கூடும். எவ்வாறாயினும் இலங்கைக்கு எதிரான தீர்மானம் இந்தியாவின் ஆதரவோடு அங்கு நிறைவேறியது.

இம்முறை இலங்கையில் இருந்து அரசின் கூட்டாளிகளாக தமிழர்கள் யார் யார் செல்வார்கள் என்பதை இப்போது கூற முடியாது. ஆனால் தமிழர் தரப்பில் தமிழ் மக்களின் நிலைமை குறித்து உறுப்பு நாடுகளை ஆணித்தரமாக உணர வைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவு சார்ந்த குழுவொன்றை அனுப்புமானால் அது வரவேற்கத் தக்கதாகவே இருக்கும்.

மாநாடு நடைபெறும் வேளையில் அங்கு உறுப்பு நாடுகளின் ராஜதந்திரிகளைச் சந்தித்துப் பேசுவது பயனளிப்பதாக இருக்கும். கூட்டமைப்பினர் அங்கு செல்வதால் இங்கு தமிழ் மக்களுக்குப் பாதகமான சூழ்நிலை எதுவும் ஏற்பட்டு விடலாம் என்று கருதுவதற்கு இடமில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் கலந்து கொண்ட தமிழர் உண்ணாவிரதக் கூட்டத்தையே குழப்ப முயன்றவர்கள் தமது சின்னத்தனங்களைக் கைவிடமாட்டார்கள். 60 வருட காலம் தமிழ் மக்கள் அனுபவித்துள்ள கொடுமைகளுக்கும், உரிமை பறிப்புகளுக்கும் எந்தவிதத்திலும் நியாயம் கிடைத்தாக வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் கோரி தமிழ்நாட்டிலிருந்து 'டெசோ' குழுவொன்று ஜெனிவாவுக்குச் சென்று மனித உரிமைகள் சபைக்கு அறிக்கை சமர்ப்பித்ததை இங்கு நினைவு கூரவேண்டும்.

அவர்களுக்கிருக்கும் அக்கறை எம்மவருக்கு இல்லையே என்று இங்கு மக்கள் கருத இடம் வைப்பது ஏற்புடைத்தல்ல. ஜெனிவாவுக்குச் செல்வதில்லையென்று கூட்டமைப்பு இதுவரை தீர்மானிக்கவில்லை. தேவை ஏற்படின் கூட்டமைப்பு செல்லும் என்ற வகையில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியிருக்கிறார். உண்மையில் கடந்த முறையைப் போலல்லாமல், சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்வதில் இம்முறை அசமந்தமாக இருந்துவிடக் கூடாது என்பதே மக்கள் கருத்தும் எதிர்பார்ப்புமாகும்.

இலங்கையில் இடம்பெற்றுள்ள மனித உரிமை மீறல்கள் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் விவாதிக்கப்படும் வேளையில் கடந்த ஒருவருட காலமாக தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் இடம்பெற்றுள்ள மனித உரிமை மீறல்களை விரிவாக வெளிக்கொணர்ந்து பகிரங்கப்படுத்த வேண்டியதற்கான சந்தர்ப்பம் இது.

மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றி ஒரு வருட காலமாகின்றது. இந்த ஒரு வருட காலத்தில் தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை உருவாக்கிக் கொள்ள எந்த அளவில் அரசு முயன்றிருக்கின்றது? அதனை எந்த அளவு வலுவிழக்கச் செய்துள்ளது என்பதைத் துலாம்பரமாக உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொறுப்பு. இந்த தக்க வேளையில் வலுவுடனும் சாதுரியமாகவும் செயற்பட வேண்டிய பெரும் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு. அதனைத் தவிர்ப்பதற்குக் காரண காரியங்களை சொல்லக்கூடிய தருணம் அல்ல இது.

# வடக்கு மாகாணத் தேர்தல் விரைவில் நடக்க வேண்டும்

## இலங்கை ஆயர் பேரவை சுட்டிக்காட்டு

கொழும்புத்துறை.பெப்.20

வடக்கு மாகாண சபை உட்பட அந்தப் பிரதேசங்களில் அனைத்து மட்டத்திலான உள்ளூராட்சி அமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டுமென்ற கருத்தை நாம் மிகவும் ஆதரிக்கின்றோம்.

குடும்பங்களில் பலர் அன்புக்குரிய தங்கள் பெற்றோரை, பிள்ளைகளைப் பறிகொடுத்துவிட்டு அல்லது தொலைத்துவிட்டு இன்னுமே ஆறாச் சோகத்துடன் உள்ள அங்கத்தவர்கள். அவர்கள் பற்றிய உண்மை நிலவரம் குறித்து அறிந்து கொள்ள ஆவலுடன் காத்திருக்கின்றனர். அவர்கள் இறந்து போயிருப்பின் அவர்களுக்காகத் துக்கம் அனுஷ்டித்துவிட்டுத் தமது வாழ்க்கையைத் தேற்றித் தொடரவும், அவர்கள் உயிருடனிருப்பின் அவர்களின் இருப்பிடங்களை அறிந்து தொடர்பினை ஏற்படுத்தவும் மக்கள் காத்திருக்கிறார்கள்.

வன்னி மக்களின் தற்போதைய நிலை குறித்து ஆராய்வதற்காக அங்கு சென்ற கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையிலான ஆயர் குழுவினர் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயர் பேரவையின் தலைவர் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, செயலர் மேதகு நோபர்ட் அந்திராடி ஆண்டகை ஆகியோர் ஒப்பமிட்டு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உள்ளக இடம்பெயர் மக்கள் தமது துயரங்களையும், கவலைகளையும் தெரிவித்து நாளாந்த வாழ்க்கை முறைக்குத் திரும்ப வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும் எம்மிடம் தெரிவித்துக் கொண்டார்கள்.

மக்களுக்குத் தற்காலிக தங்குமிட வசதிகளே தற்போது கிடைப்பதால் இங்குள்ள பிள்ளைகளின் கல்வி வசதிகளும் குன்றிய நிலையிலேயே காணப்படுகின்றது.

பாதிப்புக்குள்ளான சில இடங்களிலுள்ள மக்களுக்கு காணிகளும், வீடுகட்டத் தேவையான உதவிகளும் கிணறு, கழிவறை போன்ற வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. வாழ்க்கைத் தேவைகளைப் பொறுத்தமட்டில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. சிலர் நாள் கூலிக்கும் வேறுசிலர் மீன்பிடித் தொழிலுக்கும் செல்கின்றனர். அநேகமான மக்கள் விவசாயிகளாக இருப்பதால் அவர்கள் தங்களுக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்ட குறிப்பாகத் தாங்கள் முன்பு குடியிருந்த இடங்களில் வசிக்கவே விரும்புகின்றனர். தமது நிலங்களில் பயிர்செய்து தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கௌரவத்துடன் வாழ்வது இவர்களின் தேவையாக உள்ளது.

### நாளாந்தத் தேவைகளையும் கருத்தில் கொள்க

பெரிய அளவிலான அடித்தள ஆதார மீளமைப்புப் பணிகள் பாராட்டத்தக்க வகையில் இடம்பெற்றாலும், நாளாந்த தேவைகளும் கூட இதுபோல அல்லது இதைவிட கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பது எமது கருத்து.

கல்வித்துறை, வேலைவாய்ப்புக்கள், ஏனைய வாழ்க்கைத் தேவைகள், சமூக நிர்வாகம் போன்ற துறைகளில் சாதகமான, சாதாரணமான அமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு குடியரசு ஒழுங்குமுறைகளில் இவர்களின் பங்கேற்பு வலுப்படுத்தப்பட வேண்டும்.

இப்படிப்பட்ட ஏமாற்றமடைந்த நம்பிக்கை சிதைந்த மனநிலைமை சாதாரண மக்கள் மத்தியில் மாத்திரமல்ல சமூகப்பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள் மற்றும் புனர்வாழ்வு தொடர்பில் அக்கறை கொண்டோர் மத்தியிலும் காணப்படுகிறது.

மக்கள் மத்தியில் இன்னும் இராணுவ உடைகளைக் காணும் போது அடிமனப்பீதியொன்று ஏற்படவே செய்கிறது என்பதால் படையினர் மக்களை அடிக்கடி சந்திப்பதால் மாத்திரம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்பட்டுவிட முடியாது என்பது ஆயர்களின் கருத்தாகும்.

எனவே வடக்கு மாகாண சபை உட்பட மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் அனைத்து மட்டத்திலுமான உள்ளூராட்சி அமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை நாம் மிகவும் ஆதரிக்கின்றோம்.

மக்களின் மனங்களின் குணமளிப்பு போன்ற விடயங்கள் மட்டில் மேலும் பல காரியங்கள் செயற்படுத்தப்பட வேண்டியுள்ளது. குழந்தைகள், சிறுவர்கள், விதவைகள் போன்றவர்களுக்கு உளவியல் ஆற்றுப்படுத்துகை சேவைகள் தேவைப்படுகின்றன.

எமது நாட்டு மக்களில் குறிப்பாக சிங்களவர் மற்றும் தமிழர் மனங்களில் இன்றுவரை நிலவி வருகின்ற 'வெற்றி-தோல்வி' உணர்வுகளைக் களைந்து விடக்கூடிய ''நிவாரண சக்தி'' இதுவரை எய்தப்படவில்லை என்பது எமது வாதம். இந்த நிலையை எய்துவதற்கு இன்னும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது-என்றுள்ளது. (த-135)

# நல்லூர் கலாசாரப் பேரவை இவ்வாண்டு 7 திட்டங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.20

நல்லூர்ப் பிரதேச கலாசாரப் பேரவை இந்த ஆண்டில் நடைமுறைப்படுத்தவென 7 திட்டங்களைத் தயாரித்து அவை குறித்து ஆளுநருக்குத் தெரியப்படுத்தவுள்ளது.

பிரதேச செயலகத்தின் கலாசார பேரவைக் கூட்டம் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

★கலாசார மன்றங்களுக்கான பயிற்சிப் பட்டறை பௌர்ணமி தின இலக்கிய -கலை அரங்குகளை நடத்துதல்.

★நல்லூர்ப் பிரதேசத்தில் உள்ள 100 ஆலயங்களின் வரலாறு குறித்த இறுவட்டு வெளியிடுதல்.

★பிரதேசரீதியாக அரும்பொருள்கள், பிரதேச நூல் ஆக்கங்களின் காப்பகம் அமைத்தல்.

★பிரதேச கலாசார விழா, இசை, நடன, நாடக, நாட்டுக்கூத்து, கட்டுரை, கவிதைப் போட்டிகள் ஆகியவற்றை பாடசாலை மன்றங்களுக்கு இடையில் நடத்துதல்.

கலாசாரப் பேரவையின் ஆண்டு மலர் வெளியிடுதல் தொடர்பான விடயங்களை ஆளுநருக்கு அனுப்பிவைத்து அதற்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

மேற்படி விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக கலாசார உத்தியோகத்தர் ரஜனி குலசிங்கம் தெரிவித்தார். (த-7)

# பொதுச் சுகாதார பரிசோதகர் கடமைகளுக்குத் திரும்பினர்

யாழ்ப்பாணம், பெப்.20

பொது சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்றுமுன்தினம் தொடக்கம் தமது கடமைகளைப் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த பொது சுகாதார பரிசோதகர்கள் அரசினால் அறிவிக்கப்பட்ட டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு தமது கோரிக்கை நிறைவேற்றும் வரை கடமையில் ஈடுபடுகின்ற போதிலும் அது தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படாது என்ற நிபந்தனையுடன் கடமைகளை மேற்கொண்டனர்.

தம்மால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதாக பொது சுகாதார பரிசோதகர் சங்கம் அறிவித்ததை அடுத்து நேற்றுமுன்தினம் தமது கடமைகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சீருடைப்படி, சப்பாத்துப்படி, பயணப்படி, ஆகியனவற்றை அதிகரித்து வழங்குமாறு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்ட பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சீருடை அணியாமல் அலுவலகத்துக்கு வந்த போதிலும் கடந்த ஏழாம் திகதி தொடக்கம் சீருடை அணிந்து டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில் கடமைகளை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# வேவில் கிராமத்துக்கு மின்வசதி இல்லை

யாழ்ப்பாணம்,பெப்.20

தென்மராட்சிப் பிரதேசத்தில் மட்டுவில் மத்தி வேவில் கிராமத்தில் சில குடும்பங்களுக்கு இதுவரை மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக அங்குள்ள குடும்பங்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளன.

மட்டுவில் மத்தி ஜே/312 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வேவில் கிராமத்தில் மின்சாரம் வழங்கப்பட்ட போதும் சில குடும்பங்களுக்கு இதுவரை மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லை.

குறிப்பிட்ட தூரத்துக்கு மின் இணைப்புக்கள் வழங்கப்படாதமையால் அந்தப் பகுதியைச் சேர்ந்த சில குடும்பங்கள் மின்சார வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அந்தப் பிரதேசத்தின் குறிக்கப்பட்ட தூரம் இருளில் மூழ்கி இருப்பதுடன் பாடசாலை மாணவர்கள் குப்பி விளக்கு வெளிச்சத்தில் தமது கல்வியைத் தொடர வேண்டிய நிலையில் உள்ளனர்.

எனவே இந்தப் பிரதேசத்துக்கு முழுமையாக மின்சாரத்தை பெற்றுத் தருமாறு பாதிப்படைந்துள்ள குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-14)

# நொச்சிக்குளம் பிரதான வீதியில் பஸ் தரிப்பிடம் பெரும் சேதம்

## அதனைச் சுற்றி புதர்கள்



மன்னார்,பெப்.20

மன்னார் - முருங்கன் பிரதான வீதியில் நொச்சிக்குளத்தில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடம் சேதமடைந்து காணப்படுவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு முன்பாக காணப்படும் இந்த பஸ் தரிப்பிடத்தின் மேற்பகுதி உடைந்த நிலையில் காணப்படுகின்றது. உரிய பராமரிப்பின்மையால் இதனைச் சுற்றிவர புதர்கள் மண்டிக் காணப்படுகின்றன.

இதனால் பஸ்ஸுக்காகக் காத்திருப்பவர்கள் இந்தத் தரிப்பிடத்துக்கு வெளியே நிற்கவேண்டியுள்ளது.

இந்த பஸ் தரிப்பிடத்தின் அவலநிலை தொடர்பாக மன்னார் பிரதேசசபையின் உபதலைவரான அந்தோனி சகாயத்திடம் கேட்டபோது; இது தொடர்பாக மன்னார் பிரதேசசபை கவனத்தில் கொண்டுள்ளது. விரைவில் இந்த பஸ் தரிப்பிடம் புனரமைக்கப்பட்டுவிடும் என்று தெரிவித்தார்.

(க-12)

# இடையூறுகளை ஏற்படுத்தும் தொலைபேசிக் கோபுரங்கள்

## அச்சத்தில் நெளுக்குளம் மக்கள்

வவுனியா,பெப்.20

வவுனியா நெளுக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தொலைபேசிக் கோபுரங்களால் தாம் இடையூறுகளை எதிர்கொள்வதாக அந்தப் பகுதி மக்கள் முறைப்பாடுகின்றனர்.

வவுனியா நெளுக்குளம் பகுதியில் தொலைபேசி நிறுவனமொன்று இரண்டு தொலைபேசிக் கோபுரங்களை அமைத்துள்ளது. இவற்றிலிருந்து வெளிவரும் கதிர்வீச்சு மற்றும் இங்கு பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களிலிருந்து வெளியாகும் ஒலி என்பன தமக்குப் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதாகவும் இவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வவுனியா தெற்குப் பிரதேச சபையினருக்குத் தாம் தெரியப்படுத்தியுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிய வருகின்றது.

வீடுகளுக்கு மிகவும் அருகில் இந்தத் தொலைபேசிக் கோபுரங்கள் அமைந்துள்ளதால் தமது உடல் நலம் பாதிக்கப்படலாம் என்றும் இவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

(க-402)

# ஒட்டங்குளம் கிராமத்தில் மேட்டுப் பயிர்களுக்கு அழிவு

பாண்டியன்குளம், பெப்.20

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஒட்டங்குளம் கிராமத்தில் சுமார் 300 ஏக்கர் மேட்டுப் பயிர்ச் செய்கைகள் அழிவடைந்துள்ளன என்று கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக இந்த அழிவு ஏற்பட்டுள்ளது. கௌபி, பயறு, உழுந்து ஆகிய மேட்டுப் பயிர்களே அழிவைச் சந்தித்துள்ளன.

இதனால் இவற்றை நம்பியிருந்து இங்குள்ள விவசாயிகள் பெரும் வாழ்வாதாரக் கஷ்டங்களை எதிர்கொள்வதாக விநாயகபுரம் கமக்கார அமைப்பின் தலைவர் க.தர்மரத்தினம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரவு வேளையில் கிராமத்தினுள் நுழையும் காட்டு யானைகளாலும் கிராமவாசிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த யானைகள் இங்கு பயிரிடப்பட்ட வாழை, தென்னை ஆகியவற்றை அழிப்பதுடன் மக்களுக்கு அச்சமூட்டும் வகையிலும் நடந்து கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-415)

# மன்னார் மீனவர் நாளை கவனவீர்ப்புப் போராட்டம்

## 3 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து



மன்னார்,பெப்.20

மன்னார் மாவட்ட மீனவர்கள் நாளை வியாழக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து இந்த கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளதாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எம்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு இடையில் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற விசேட சந்திப்பின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாகவே குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்திய மற்றும் உள்ளூர் இழுவைப்படகுகளின் தொழில் முறைகள் முற்றாக நிறுத்தப்படுதல், கடற்படையினரின் 'பாஸ்' நடைமுறை நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கடல்தொழிலாளர் அடையாள அட்டை வழங்கப்படல், சிலின்டர் மூலம் கரையோரத்தில் தொழில் செய்வது நிறுத்தப்பட்டு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் மாத்திரம் தொழில் புரிவதற்கு அனுமதித்தல் ஆகிய மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டம் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நாளை வியாழக்கிழமை காலை 9 மணியளவில் மட்டுப்படுத்தப்பட்ட மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச காரியாலயத்துக்கு முன்பாக குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகி ஊர்வலம் மன்னார் மாவட்டச் செயலகத்தை சென்றடையவுள்ளது.

இதன்போது மன்னார் மாவட்ட அரச அதிபருக்கு மனு ஒன்றும் கையளிக்கப்படவுள்ளதாக சமாசத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

(க-12)

# சிறுவர் இல்லங்கள் தொடர்பாக தெளிவான அறிக்கை சமர்ப்பிக்கவும்

## சிறுவர் நன்னடத்தை அதிகாரிக்கு நீதிமன்றம் உத்தரவு

கிளிநொச்சி, பெப்.20

சகல சிறுவர் இல்லங்களையும் பரிசோதனை செய்து தெளிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சியில் இயங்கி வரும் சிறுவர் இல்லங்களில் தங்கியுள்ள சிறுவர்களுக்கு அசௌகரியங்கள் இடம்பெற்று வருகின்றமை தொடர்பாக கவனத்தில் எடுத்துக் கொண்ட நீதிவான் எம்.ஐ. வகாப்தீன், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சகல சிறுவர் இல்லங்களையும் பரிசோதனை செய்து தெளிவான அறிக்கை ஒன்றை மன்றுக்குச் சமர்ப்பிக்குமாறு சிறுவர் நன்னடத்தை அதிகாரிக்கு நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்தார்.

இதேவேளை கிளிநொச்சி காந்தி சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வந்த சிறுவர்களை பச்சை மட்டையால் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய முதலாவது சந்தேக நபர் விளக்க மறியலில் வைக்கப்பட்டார். இரண்டாவது சந்தேகநபர் 50 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் ஒரு லட்சம் ரூபா ஆள்பிணையிலும் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

மேலும் சிறுவர் இல்லத் தலைவரை பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகி வாக்குமூலத்தைப் பதிவு செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(க-6)

## இழப்பீடுகளைப் பெற முடியாது அவதி

# ஆட்டக்காரி, கோடீஸ்வரியால் விவசாயிகள் திண்டாட்டம்!

கிளிநொச்சி,பெப்.20

பரிந்துரை செய்யப்படாத ஆட்டக்காரி, கோடீஸ்வரி நெல் இனங்களைப் பயிரிட்ட விவசாயிகள் பயிர் அழிவுக்கான இழப்பீடுகளைப் பெறமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

காலபோக நெற்செய்கைக் கூட்டங்களில் தம்மால் பரிந்துரை செய்யப்பட்ட நெல் இனங்களையே பயிரிடுமாறு வேளாண் துறையைச் சேர்ந்த அதிகாரிகளால் விவசாயிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. மேலும் இவ்வாறு நடந்து கொண்டால் பயிர்களுக்கு அழிவு ஏற்படும் போது அதற்கான இழப்பீடுகளைப் பெற முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அதனைச் கருத்தில் கொள்ளாது இங்குள்ள பல விவசாயிகள் பரிந்துரை செய்யப்படாத ஆட்டக்காரி, கோடீஸ்வரி ஆகிய நெல் இனங்களைப் பயிரிட்டனர். இதனால் அண்மையில் ஏற்பட்ட பயிர் அழிவுகளுக்குரிய இழப்பீடு களைப் பெற முடியாத நிலை இவர்களுக்கு ஏற்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

எதிர்காலத்தில் பயிர் அழிவுகளுக்கான இழப்பீடுகளைப் பெற வேண்டுமாயின் விவசாயத் திணைக்களத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட நெல் இனங்களைப் பயிரிட வேண்டுமென்ற விழிப்புணர்வு விவசாயிகளிடையே தற்போது ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க முடிவதாகவும் தெரிய வந்துள்ளது.

(க-18)



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முரசுமோட்டை ஐயன்கோவில் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் வெள்ள நீரின் ஊடாக நடந்து செல்லும் அவலக் காட்சி. (க-6)

# பண்டைய கலைகள் அழிந்து வருகின்றன; முல்லை. சமூக ஆர்வலர்கள் கவலை

முல்லைத்தீவு ,பெப்.20

முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்டைய கலைகள் அழிந்து வருகின்றன என்று சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த மாவட்டத்தில் முன்பு சரித்திர நாடகங்கள், கோலாட்டம், கும்மி என்பன பாரம்பரியமான வகையில் இடம்பெற்று வந்தன. இவை நடத்தப்படுவதற்கான அனுசரணையும், மக்களின் ஊக்கமும் பெருமளவில் கிடைத்தும் வந்தன.

ஆனால் தற்போது இவற்றுக்கான அனுசரணை, ஊக்கம் என்பன இல்லாததால் இந்தக் கலைகள் ஒவ்வொன்றாக அழிந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பண்டார வன்னியன் என்னும் சரித்திர நாடகம் ஆண்டுதோறும் பண்டார வன்னியனின் நினைவு நாளில் அரங்கேற்றப்படுவது வழமையாக இருக்கின்றது. ஆனால் அதுவும் தற்போது அருகி வருவதாக இங்கு வசிக்கும் மூத்த குடிமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும் இந்த நிலை தொடருமாயின் பாரம்பரிய கலைகள் மறைந்து விடுமோ என்ற அச்சமும் இங்கு வெளியிடப்படுகின்றது. மேலும் இந்தக் கலைகளுக்கு புத்துயிர் ஊட்ட வேண்டும் என்றால் பாடசாலை மட்டத்தில் இவற்றை வளர்க்க வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கப்பட்டது. (க-500)

### தலா 4 ஆயிரம் செலுத்துமாறு உத்தரவு

## டெங்கு பரவும் வகையில் சூழலை வைத்திருந்த மூவருக்கு அபராதம்

வடமராட்சி, பெப். 20

வீடுகளிலும், அதை அண்டிய சூழலிலும் டெங்கு நுளம்புக் குடம்பிகள் உற்பத்தியாகும் குப்பை கூளங்களை வைத்திருந்த மூவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் தலா 4 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை சுற்றுச் சூழல் பாதுகாப்புப் பிரிவுப் பொலிஸார் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் உதவியுடன், பருத்தித்துறை பொலிஸ் பிரிவுகளில் நடத்திய சோதனையின்போது மூவரும் மாட்டிக் கொண்டனர்.

அவர்கள் மீது பருத்தித்துறைப் பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ததைத் தொடர்ந்து மூவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

**அவர்கள் மீது பருத்தித்துறைப் பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ததைத் தொடர்ந்து மூவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.**

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இவ் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

அதனையடுத்து மூவரையும் எச்சரித்த நீதிபதி தலா 4 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (வ-8)



புதிய செம்மணி வீதியில் உள்ள கேணி ஒன்று தூர்ந்து கழிவுகளால் நிரம்பிக் காணப்படுகிறது. கால்நடைகளின் குடிதண்ணீர் தேவைக்காக உள்ள குறித்த கேணியில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் கேணியில் உள்ள நீர் மாசடைந்து காணப்படுகின்றது. (வ-17)

## முடங்கிய பஸ் மீள் வடிவம் பெற்று மீண்டும் சேவையில்

வடமராட்சி, பெப். 20

பருத்தித்துறை இ.போ.ச டிப்போவில் பழுதடைந்திருந்த பஸ் ஒன்று டிப்போ ஊழியர்களின் முழு ஒத்துழைப்பினால் முற்று முழுதாக புனரமைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இரண்டாவது வருட பதவி ஏற்பு, இரண்டாவது வருட பூர்த்தியை ஒட்டியே முடங்கிப் போய் இருந்த பஸ்ஸை புனரமைத்து மீள்வடிவம் கொடுத்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஊழியர் சங்க பருத்தித்துறைக் கிளை தெரிவித்துள்ளது. (வ-8)

### அரச திணைக்களங்களில் நிலவும்

# மொழிப் பிரச்சினைகள் தொடர்பாக தொலைபேசி மூலம் தெரிவிக்கலாம்

### அமைச்சர் வாசுதேவநாணயக்கார கருத்து

யாழ்ப்பாணம், பெப். 20

அரச திணைக்களங்களில் மொழி பெயர்ப்பாளர்கள் கடமையில், இல்லாத பட்சத்தில் பொது மக்கள் தமது மொழிப் பிரச்சினைகள் தொடர்பாக 1956 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு தகவல் தெரிவிக்கலாம் என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

மொழிப் பிரச்சினைகள் தொடர்பாக சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நிகழ்வொன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துரை நிகழ்த்தும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச திணைக்களங்களில் மும்மொழிகளிலும் உரையாடக்கூடிய உத்தியோகத்தர் கடமையில் இருத்தல் வேண்டும். ஜனாதிபதி செயலணி ஊடாக இவை தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

சிங்கள மொழியாக இருந்தாலும் சரி, தமிழ் மொழியாக இருந்தாலும் சரி, பொது மக்கள் புரிந்து கொள்ளக் கூடியதாக அவர்களின் தேவைகளை பிரச்சினைகள் ஏற்படாத வகையில் நிறைவேற்றக்கூடியதாக அரச திணைக்களங்களில் உத்தியோகத்தர்கள் கடமையில் இருத்தல் வேண்டும்.

அரச திணைக்களங்களில் பொதுமக்களின் மொழியை விளங்கிக் கொள்ள முடியாத நிலையில் மொழி பெயர்ப்புச் செய்யக்கூடிய உத்தியோகத்தர் ஒருவர் கடமையில் இல்லாது விட்டால் பொதுமக்கள் தமது மொழி உரிமை மீறல் தொடர்பாக 1956 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும்.

மேற்படி தொலைபேசி இலக்கத்தினூடாக பதியப்படுகின்ற முறைப்பாடுகளுக்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எனவே அரச திணைக்களங்களில் மொழிபெயர்ப்பாளர் ஒருவர் கடமையில் இல்லாது விட்டால் உடனடியாக இந்தத் தொலைபேசி இலக்கத்துக்கு பாதிக்கப்படுகின்ற நபர் தகவலைத் தெரிவிப்பதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய மொழிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும்.- என்றார். (வ-14)

### கைதடி தொழிற்பூங்காவில்

## விழிப்புலனற்றோர் சங்கத்தின் செயற்பாடுகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ். கைதடியில் உள்ள தொழிற்பூங்காவில் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் செயற்பாடுகள் தற்போது அதிகரிக்கப்பட்டிருப்பதாக சங்கத்தின் தலைவர் வி.கனகசபை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது குறித்த பூங்காவில் மெழுகுவர்த்தி உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே தொழிற் பூங்கா பணியாளர்களால் விளக்குமாறு உற்பத்தி செய்யும் பணிகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தொழிற்பூங்காவில் பணியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் மேற்படி பொருள்களுக்கு நல்ல சந்தை வாய்ப்பும் கிடைத்துள்ளது.

அதேசமயம் கடதாசி மூலம் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு 'சோ ஆ' நிறுவனம் சங்கத்திற்கு உதவி செய்ய முன்வந்துள்ளது.

இதற்கான குறித்த உற்பத்திக்குரிய இயந்திர வசதியை அந்த நிறுவனம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (வ-17)

## வரணியில் சுகாதாரத்தைப் பேண பாதுகாப்பான குப்பை தொட்டிகள்




தென்மராட்சி, பெப்.20

வரணிப் பிரதேசத்தில் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக ஐக்கிய அபிவிருத்தி நிதிய நிறுவனத்தின் உதவியுடன் சுகாதார செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வரணிப் பகுதியில் முக்கியமான இடங்களில் வைப்பதற்கென பிளாஸ்ரிக் குப்பைத் தொட்டிகள் சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி உப அலுவலகப் பொறுப்பதிகாரியிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

குப்பைத் தொட்டிகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வரணி உப அலுவலகத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் ஐக்கிய அபிவிருத்தி நிதிய நிறுவன யாழ். மாவட்ட இணைப்பாளர் எம்.பிரபோஸ், நிறுவன சுகாதாரப் பிரிவு செயற்றிட்ட இணைப்பாளர் தே.யசோதரன் மற்றும் பிரிவு பொது சுகாதார பரிசோதகர் இ.நியான் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-9)

## பருத்தித்துறை வீதியோரத்தில் நிறுத்தப்படும் வாகனங்கள்

### போக்குவரத்து பாதிப்பு என முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 20

பருத்தித்துறை பிரதான வீதியோரத்தில் கனரக வாகனங்களை நிறுத்துவதால் போக்குவரத்து பாதிக்கப்படுவதாகவும் விபத்துக்கள் ஏற்படுவதாகவும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதாக வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

வீதியோரத்தில் கனரக வாகனங்களை நிறுத்துவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பருத்தித்துறை பிரதான வீதியில் நீர்வேலி, கோப்பாய், இருபாலை போன்ற இடங்களில் வீதிப் புனரமைப்பு பணியில் ஈடுபட்டு வரும் வாகனங்கள் மற்றும் அதற்கான பொருள்களை எடுத்து வரும் கன்ரர் கனரக வாகனங்கள் வீதியோரத்தில் வரிசையாகத் தரித்து நிறுத்தப்படுகின்றன.

பிரதான வீதியில் மேற்படி வாகனங்கள் நீண்ட நேரம் தரித்து நிறுத்தப்படுவதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது.

இதேவேளை சில வாகனங்கள் இரவு பகலாக வீதியோரத்திலேயே தரித்து நிற்கின்றன.

குடாநாட்டின் பிரதான போக்குவரத்து வீதியாக இருந்து வரும் பருத்தித்துறை வீதியின் வீதியோரத்தில் இவ்வாறு கனரக வாகனங்களை தரித்து நிறுத்துவதால் பிரதேச சபை உரியநடவடிக்கையை மேற்கொள்ளும்.

அதனை விட குறித்த பிரதான வீதியோரத்தில் இரவில் தரித்து நிற்கும் கனரக வாகனங்கள் பார்க் லைற் இன்றியே தரித்து நிற்கின்றன.-என்றார். (வ-17)

## போதையில் ஓட்டோ செலுத்திய சாரதிக்கு ரூ.7, 500 அபராதம்

**வல்வெட்டித்துறை போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் குற்றவாளி மாட்டிக்கொண்டார்.**

வடமராட்சி, ஜன. 20

வல்வெட்டித்துறைப் பகுதியில் மது போதையில் ஓட்டோவை செலுத்திச் சென்ற சாரதி பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தினார்.

அந்தப் பகுதியில் வல்வெட்டித்துறை போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் வாகனங்கள் மீது மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது மதுபோதையில் ஓட்டோவை செலுத்திச் சென்ற சாரதி மாட்டிக் கொண்டார்.

மதுபோதையில் ஓட்டோவைச் செலுத்தியதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் 7,500 ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (வ-8)

**புலிகளின் பிரசாரங்களாலேயே**

## ராஜீவ் கொலையாளிகள் மூவரின் தூக்கு நிறைவேற்றம் தாமதமானது

விடுதலைப்புலிகளின் பிரசாரங்கள் காரணமாகவே ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் தூக்குத்தண்டனை பிற் போடப்பட்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் இரகசிய ஆவணம் ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக 'ரைம்ஸ் ஒப்' இந்தியா பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்திய உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியும் இந்திய ஜனாதிபதியின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டும் கூட ராஜீவ் காந்தி கொலையாளிகளின் தூக்குத் தண்டனை பல வருடங்களாக நிறைவேற்றப்படாமல் உள்ளது.

இந்தநிலையில் இந்த தாமதத்துக்கு விடுதலைப் புலிகளின் நன்கு திட்டமிடப்பட்ட பிரசாரங்களும் மனித உரிமை அமைப்புக்களின்எதிர்ப்புகளுமே காரணம் என்று இந்திய இரகசிய ஆவ ணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ)



டில்லி ராஷ்டிரபதி பவனில் இந்திய சுய வேலைவாய்ப்பு பெண்கள் அமைப்பின் நிறுவுநர் எலா பட்டிற்கு 2011 ஆம் ஆண்டுக்கான இந்திரா காந்தி அமைதி விருதை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வழங்கினார். அருகில் பிரதமர் மன்மோகன் சிங், மற்றும் சோனியா காந்தி. (வ)

கச்சதீவு அந்தோனியார் திருவிழாவை முன்னிட்டு

## முகாமுக்கு வெளியே செல்ல மண்டபம் அகதிகளுக்குத் தடை

இராமநாதபுரம், பெப்.20

கச்சதீவு அந்தோனியார் ஆலய விழாவை முன் னிட்டு இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் அகதிகள் முகாமில் இருந்து, நாளை வியாழக்கிழமை தொடக்கம் அகதிகள் வெளியே செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் பொலிஸ் அதிகாரி குறித்த விடயம் தொடர்பில் கூறியதாவது:-

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறும் கச்சதீவு விழாவுக்குச் செல்வோர் விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது. பொலிஸ் புலனாய்வு, வருவாய்த்துறையினர், இந்திய கடற்படை, மெரைன் பொலிஸார் ஆகியோர் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர். விழாவுக்கு, பயணிகளை ஏற்றிச் செல்லும் விசைப்படகுகள், நடுக்கடலில் விபத்து ஏற்படாத வகையில், பாதுகாப்புடன், தரம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விழாவுக்கு அகதிகள் யாரும் சென்று விடாதபடி கண்காணிக்கப்படுகிறது. நாளை தொடக்கம் மண்டபம் அகதிகள் முகாமில் இருந்து, அகதிகள் வெளியே செல்வதற்கான அனுமதி கொடுப்பது நிறுத்தப்படும்.-என்றார். (வ)

# தமிழக மீனவர் தாக்குதலை தடுக்க தனுஷ்கோடியில் கடற்படைத்தளம்

**அமைக்குமாறு ஸ்ராலின் வலியுறுத்து**

இராமேஸ்வரம், பெப்.20

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை தடுக்க, தனுஷ்கோடியில் இந்திய கடற்படைத்தளம் அமைக்க வேண்டும் என்று தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

இலங்கை இராணுவம், தொடர்ந்து தமிழக மீனவர்களைத் தாக்கும் அவலத்தை, மத்திய அரசுக்கு உணர்த்திடும் வகையில், இராமேஸ்வரத்தில் டெசோ அமைப்பு சார்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை வகித்த ஸ்டாலின் உரையாற்றுகையில்



மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை கடற்படையினர், தமிழக மீனவர்களை தாக்கி மீன்களை கொள்ளையடித்து, வலைகளை சேதப்படுத்தும் சம்பவங்கள் தொடர் கதையாக உள்ளது.

தாக்குதலை தடுத்து நிறுத்தக்கோரி, பிரதமர் மன்மோகன்சிங், சோனியா ஆகியோருக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி கடிதம் எழுதி னார். மத்திய அரசும், இலங்கை அரசிடம் பேச்சு நடத்தியது. ஆனால், மீனவர் மீதான தாக்குதல் நிறுத்தப்படவில்லை.

1991-2011 இல் இலங்கைக் கடற்படையினர், மீனவர்கள் மீது, 167 முறை தாக்கியதில், 85 மீனவர்கள் இறந்தனர். 146 படகுகளைப் பறிமுதல் செய்தனர், 146 மீனவர்கள் கைதாகி பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இலங்கை இராணுவத்திடம் இருந்து மீனவர்களைப் பாதுகாக்க, கச்சதீவை மீட்க வேண்டும். தனுஷ்கோடி, மண்டபத்தில் வலுவான இந்திய கடற்படை தளம் அமைக்க வேண்டும்-என்றார்.

இதேவேளை தமிழக மீனவர்கள் பாதிக்கப்படுவதை மத்திய அரசுக்கு உணர்த்தும் வகையில், டெசோ அமைப்பின் சார்பில், நாகையிலும் நேற்று ஸ்டாலின் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (வ)

## ஈரான் சிறையில் 27 குமரி மாவட்ட மீனவர்கள்

ஈரான் சிறையில் வாடும் குமரி மாவட்ட மீனவர்கள் உட்பட 27 பேரை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று அவர்களின் குடும்பத்தினர் குமரி மாவட்ட ஆட்சியாளரிடம் முறைப்பாடு அளித்தனர்.

தமிழகம் மற்றும் கேரளாவைச் சேர்ந்த 11 மீனவர்களும், குமரி மாவட்டம் மற்றும் தூத்துக்குடியை சேர்ந்த 16 மீனவர்களும் என மொத்தம் 27 பேர் சவூதி அரேபியா நாட்டிலிருந்து மீன்பிடிக்கச் சென்றனர். அவர்கள் ஈரான் கடல் எல்லையைத் தாண்டிச் சென்று மீன் பிடித்ததாக ஈரான் கடலோர காவல்படையால் கைது செய்யப்பட்டு அங்குள்ள சிறையில் அடைக்கப்பட்டனர்.(வ)

## ஹெலிகொப்டர் ஊழல் குறித்து விவாதிக்கப் பிரதமர் தயாராம்

டில்லி, பெப்.20

ஹெலிகொப்டர் பேர ஊழல் குறித்து நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் விவாதிக்கத் தயாராக உள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இத்தாலி நிறுவனத்திடமிருந்து முக்கியஸ்தர்களுக்கு ஹெலிகொப்டர் வாங்கியதில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஊழலை முன்வைத்து, நாடாளுமன்றத்தை முடக்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

இந்தநிலையில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கிளப்பும் அனைத்து



பிரச்சினைகளுக்கும் பதில் அளிக்க மத்திய அரசு தயாராக இருப்பதாக பிரதமர் தெரிவித்தார். பேச்சு மூலம், அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ)

அப்சல் குருவின் சடலம் குறித்த விவகாரம்

## குடும்பத்தினர் கோரிக்கையை நிராகரிக்க அரசு தீர்மானம்

டில்லி, பெப்.20

அப்சல் குருவின் சடலத்தை மீண்டும் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அவரது குடும்பத்தினர் விடுத்த கோரிக்கையை மத்திய அரசு நிராகரிக்கத் தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்ற தாக்குதல் வழக்கில் கைது செய்யப்பட்ட அப்சல் குரு கடந்த 9 ஆம் திகதி டில்லி திகார் சிறையில் தூக்கில் போடப்பட்டார். அவர் தூக்கில் போடப்படுவது மிகவும் இரகசியமாக வைக்கப்பட் டிருந்தது. அவரது சடலத்தை திகார்



சிறை வளாகத்திலேயே அடக்கம் செய்துள்ளனர்.

இந்த நிலையில், அப்சல் குருவின் சடலத்தை தங்களிடம் ஒப்படைக்கக் கோரி அவரது குடும்பத்தினர் கோரிக்கை வைத்தனர்.

இதுதொடர்பாக அப்சல் குருவின் மனைவி தபஸ்ஸும் எழுதிய கடிதத்தை மத்திய அரசுக்கு காஷ்மீர் மாநில அரசு அனுப்பி வைத்துள் ளது. அந்தக் கடிதம் தற்போது மத்திய உள்துறையின் பரி சீலனையில் உள்ளது. சடலத்தை தோண்டி எடுத்து குடும்பத்தினரிடம் ஒப்படைப்பது பற்றி உள்துறை அமைச்சக அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர். சடலத்தை குடும்பத்தினரிடம் ஒப்படைத்தால் தேவையற்ற சர்ச்சைகள் உருவாகும் என்று அவர்கள் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளனர்.

அதையடுத்து, அப்சல் குருவின் சடலத்தை குடும்பத்தினரிடம் ஒப்படைப்பது இல்லை என்று மத்திய அரசு முடிவு எடுக்க உள்ளது. (வ)

# இலங்கையின் பொருளாதார உறவை இந்தியா துண்டிக்க வேண்டும்

**வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேண்டுகோள்**

சிறுவர்களைக் கூட விட்டு வைக்காமல் இனப்படு கொலை செய்த இலங்கை அரசுடனான பொருளாதார உறவுகளை இந்தியா துண்டித்துக் கொள்ள வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

ஈழ மண்ணில் இலட்சக்கணக்கான தமிழ் உறவுகளை ஈவிரக்கமின்றி படுகொலை செய்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கோர முகத்தை அம்பலப்படுத்துகிற வகையில் தமிழ் நெஞ்சங்களை பதற வைக்கக் கூடிய இன்னொரு இனப்படுகொலை சாட்சி அம்பலமாகியிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகனான 12 வயதுடைய பாலகன் பாலச்சந்திரன், போரின் போதே கொல்லப் பட்டார் என்ற இலங்கை அரசின் கோயபல்ஸ் பிரசாரம் தற்போது சர்வதேச அரங்கத்தில் அம்பலமாகி விட்டது.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையக் கூட்டம்கூட உள்ள நிலையில் பிரிட்டனில் இருந்து வெளியாகும் 'தி இன்டி பென்டெட்' நாளேடு, சனல் 4 தொலைக்காட்சி ஆகி யவை பாலகன் பாலச்சந் திரன் படுகொலை செய்யப்பட்ட உண்மையான புகைப்படங்களை வெளியிட்டுள்ளன.

இத்தகைய கோரப்படுகொலைகள் ஒவ்வொன்றாக அம்பலத்துக்கு வந்து கொண்டிருக்கும் நிலையில் இலங்கை அரசை நேச சக்தியாகவே இந்திய அரசு இன்னமும் கருதுகிறது எனில் தமிழ் நாட்டுத் தமி ழர்கள் இந்தியாவை 'எதிரி' நாடாகத்தானே கருத வேண் டியிருக்கும். இதன் பின்னராவது இலங்கையுடனான பொருளாதார உறவுகளை இந்திய அரசு துண்டித்துக் கொள்ள வேண்டும். இலங்கையில் கொமன் வெல்த் மாநாடு நடைபெறக் கூடாது என்ற குரலை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் - என்றுள்ளது. (வ)



இந்தியாவுக்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், நேற்றுமுன்தினம் மும்பையில் சிறுவர்களுடன் சுமார் ஒரு மணிநேரம் கிரிக்கெட் ஆட்டத்தில் பங்குகொண்டார்.

## வேலை நிறுத்தத்தின் போது வன்முறைகள் வெடிப்பு

### பங்களாதேஷில் 3 பேர் சாவு

டாக்கா, பெப்.20

பங்களாதேஷில் இடம் பெற்றுவரும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறைகளில் 3 பேர் உயிரிழந்தனர்.

பங்களாதேஷின் பழமைவாத ஜமாத் ஈ இஸ்லாமி கட்சியின் தலைவருக்கு போர்க்குற்றங்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

எனினும் பங்களாதேஷின் பிரதான எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி ஒத்துழைப்பு வழங்கவில்லை. அதனால் வேலை நிறுத்தம் முழு அளவில் வெற்றியளிக்கவில்லை. அதையடுத்து ஜமாத் இ இஸ்லாம் கட்சியினர் ஆங்காங்கே வன்முறை யில் ஈடுபட்டனர்.

அதையடுத்து பொலிஸாருடன் ஏற்பட்ட மோதல்களில் 3 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வன்முறைச் சம்பவங்களை அடுத்து முக்கிய இடங்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது. (ற)

## 'புகை'ப் படத்துக்கு ரூபா 25 கோடி!

கட்டார், பெப்.20

புகைப்படத்தை வெளியிட்டுவிடுவேன். இல்லையேல் ரூபா 25 கோடி தரவேண்டும் என்று சவூதி அரேபிய இளவரசி பஸ்மாவை மிரட்டியுள்ளார் ஒருவர். தற்போது அந்த புகைப்படத்தை இணையத்தளங்களில் வெளியிட்டும் விட்டார். மிரட்டியவர். அந்தப் புகைப்படங்களால் இளவரசி பஸ்மாவுக்கும், அவரது அரச குடும்பத்துக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

அந்த நபர் வெளிட்ட புகைப்படம் என்ன தெரியுமா? பஸ்மா புகைப்பிடிக்கும் புகைப்படம்தான். பஸ்மாவின் தோழியின் கணினியில் இருந்த புகைப்படமே திருடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

பெண்கள் புகைபிடிப்பது சவூதி அரேபிய கலாசாரத்துக்கு எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு

### 5 பேர் சாவு; 7 பேர் படுகாயம்

இஸ்லாமாபாத், பெப்.20

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர். 7 பேர் படுகாயமடைந்தனர்.

பெஷாவர் நகரில் உள்ள அரசு அலுவலகம் ஒன்றிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதல் நடைபெற்ற சமயம் அந்த அலுவலகத்தில் அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

அரச அலுவலகத்துக்குள் புகுந்த இரண்டு தற்கொலைக் குண்டுதாரிகளில் ஒருவர் குண்டை வெடிக்க வைத்துள்ளார். மற்றையவர் அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

குண்டுவெடிப்பில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். 7 பேர் படுகாயடைந்தனர். காயமடைந்தவர்களில் இருவரின் நிலைமை மோசமாக உள்ளது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு எந்தத் தீவிரவாத அமைப்பும் உரிமைகோரவில்லை. பொலிஸார் அந்தப் பகுதி முழுவதும் தேடுதலை மேற்கொண்டனர் (ற)

## நியூஸிலாந்தில் நிலநடுக்கம்

நியூயோர்க், பெப்.20

தென் பசுபிக் பெருங்கடலின் பூகம்ப வலயத்திற் குள் அமைந்துள்ள நியூஸி லாந்தின் கெர்மாடெக் தீவுகளில் நேற்றுமுன்தினம் கடுமையான பூகம்பம் ஏற் பட்டுள்ளது.

ரிச்டர் அளவில் 6.1 ஆக பதிவான பூகம்பம் கெர்மாடெக் தீவில் மையம் கொண்டதாக அமெரிக்க மண்ணியல் ஆய்வு மையம் கூறியுள்ளது. (ற)

## நீதிபதி தலைமையிலான தற்காலிக அரசு; நேபாள அரசியல்கட்சிகள் ஒப்புக்கொண்டன

காத்மண்டு, பெப்.20

தலைமை நீதிபதி தலைமையில் நேபாளத்தில் தற்காலிக அரசு அமைக்க நான்கு முக்கிய அரசியல் கட்சிகளும் ஒப்புக் கொண்டுள்ளன என்று கூறப்படுகிறது.

நேபாளத்தில் முக்கிய கட்சிகளான ஒருங்கிணைந்த சி.பி.என். மாவோயிஸ்ட், நேபாள காங்கிரஸ், சிபிஎன் யுஎம்எல் மற்றும் ஜனநாயக மாதேசி முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து பிரதமர் பாபுராம் பட்டாரியா பதவி விலக உள்ளார் என்றும் தலைமை நீதிபதி ஹில் ராஜ் ராக்மி தற்காலிக அரசுக்கு தலைமை தாங்கவுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. எதிர்வரும் ஜூன் மாதம் தேர்தலை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நேபாளத்தில் 2008ஆம் ஆண்டில் மன்னராட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதையடுத்து நிலையான அரசியல் சாசன சட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்குள் உருவாக்குவது என்று முடிவு செய்யப்பட்டது. எனினும் அரசியல் கட்சிகளிடையே காணப்படும் கருத்து வேற்றுமையால் அரசியல் சாசன சட்டத்தை உறுதி செய்ய முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ற)

### போர்க்குற்றம் தொடர்பான சட்டத்திருத்தம்

## ஆயிரக்கணக்கில் திரண்டு மக்கள் கடும் எதிர்ப்பு



டாக்கா, பெப்.20

பங்களாதேஷ் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ள போர்க் குற்றம் தொடர்பான சட்ட திருத்தத்துக்கு எதிராக மக்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்மையில் போர்க் குற்றங்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் ஜமாத் ஈ இஸ்லாமி கட்சியின் தலைவருக்கு விதிக்கப்பட்டுள்ள ஆயுள்கால சிறைத்தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்யக் கூடிய வகையிலான சட்டத் திருத்தமே பங்களாதேஷ் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தலைநகர் டாக்காவில் நடைபெற்ற இந்த ஆர்பாட்டத்தில் பல்லாயிரக்கணக் கான மக்கள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஜமாத் இ இஸ்லாமி கட்சியின் தலைவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்மென்று கோஷங்களை எழுப்பினா.

1971 ஆம் ஆண்டு இடம் பெற்ற போரில், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டமை தொடர்பாக குறித்த கட்சியின் தலைவர் அப்துல் காதர் முல்லாவிற்கு ஆயுள்காலத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## நாடு திரும்பினார் சாவேஸ்



காரகாஸ், பெப்.20

கியூபாவில் தங்கி புற்றுநோய்க்கான சிகிச்சைகளைப் பெற்றுவந்த வெனிசுவேலாவின் ஜனாதிபதி ஹக்கோ சாவேஸ் நேற்றுமுன்தினம் நாடு திரும்பினார்.

குடல் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்த சாவேஸூக்குக் கடந்த ஆண்டு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் புற்றுநோய் அவரது இடுப்புப் பகுதியில் பரவியது. அதை அடுத்துக் கடந்த இரண்டு மாதங்களாக கியூபாவில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார் சாவேஸ். அங்கு அவருக்கு சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

சாவேஸின் உடல்நிலை மோசமாக உள்ளது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் சில தினங்களுக்கு முன்னர் சாவேஸ் நலமுடன் இருக்கும் புகைப் படங்கள் ஊடகங்களில் வெளியாகியுள்ள நிலையில் தற்போது சாவேஸ் நாடு திரும்பியுள்ளார்.

நான்காவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள சாவேஸ், இன்னமும் பதவியேற்கவில்லை. குறிப்பிட்ட காலத்தில் அவர் பதவி ஏற்காவிட்டால் மீண்டும் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதை தவிர்ப்பதற்காக அவர் நாடு திரும்பியுள்ளதாக கூறப்படுகிறது. சாவேஸ் நாடு திரும்பியதை ஆதரவாளர்கள் கோலாகலமாகக் கொண்டாடுகின்றனர். (ற)

## உலகம் சுற்றிய தம்பதியர் விபத்தில் உயிரிழப்பு

லண்டன், பெப்.20

சைக்கிள் மூலம் உலகைச் சுற்றும் முயற்சியில் ஈடுபட்ட பிரிட்டனைச் சேர்ந்த தம்பதியினர் தாய்லாந்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் உயிரிழந்தனர்.

பிரிட்டனைச் சேர்ந்த பீட்டர் ரூட் மற்றும் அவரது மனைவி மேரி தாம்சன் ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். ஓவியர்களான இருவரும் சைக்கிளில் உலகை சுற்றிவரத் திட்டமிட்டு, 2011ஆம் ஆண்டு தமது பயணத்தைத் தொடங்கினர்.

ஐரோப்பிய நாடுகள், சீனா ஆகிய நாடுகளை வெற்றிகரமாகக் கடந்த இவர்கள், தாய்லாந்தைக் கடந்து செல்லும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

எனினும் கடந்த 13ஆம் திகதி தாய்லாந்தின் பாங்கொக் நகரத்தில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது இவர்கள் மீது லொறி மோதியதில் இருவரும் உயிரிழந்தனர்.(ற)

## பலுசிஸ்தான் குண்டு வெடிப்பு: உயிரிழப்பு 81

இஸ்லாமாபாத், பெப்.20

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 81 ஆக உயர்ந்துள்ளது. உயிரிழந்தவர்களில் அதிக எண்ணிக்கையான சிறுவர்களும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அங்கு தற்போதும் மீட்புப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. (ற)



# வீட்டுக்கிருத்திய அழைப்பு



## திருமதி சிவலிங்கம் சின்னம்மா

மலர்வு 03.11.1945 உதிர்வு 20.01.2013

கடந்த 20.01.2013 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (20.02.2013 )புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத் தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சர்வோதயா வீதி, ஆவரங்கால், புத்தூர். சிவலிங்கம்குடும்பத்தினர்.

(33558) (3.6.7)

# மரண அறிவித்தல்

## திருமதி விஜயலட்சுமி சிவபாதசுந்தரம்



அளவெட்டி கும்பிளாவளையைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி சிவபாதசுந்தரம் (08.02.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு -செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா- செவ்வந்தி அம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவபாத சுந்தரத்தின் (ராசா) அன்பு மனைவியும், பிரதாபன் (கண்ணன், பிரான்ஸ்), மதீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகன்ஜாவின் அன்பு மாமியும், ஜனுஷனின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் பரமேஸ்வரி (சுபத்திரை), சொர்ணலிங்கம் (லிபியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணிக்குத் தகனக்கிரியைக்காகப் பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மு.தவபாலசிங்கம், அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 0212221991, 0771754447

தகவல்: குடும்பத்தினர்.

(33649)(2.6.7)

# நான்காம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் சிவபாதம் அருணன்

(சட்டவாளர்)

மலர்வு 02.09.1978 உதிர்வு 20.02.2009

அன்பின் வடிவமாய் அமைதியின் உருவமாய்
பண்பின் இருப்பிடமாய் கருணையின் உறைவிடமாய்
இல்லத்தின் குலவிளக்காய் ஆலமரமாய் நிழல் தந்து
எதிர் பாராமல் எமை தவிக்கவிட்டுப் பிரிந்தாயே
ஆண்டுகள் நான்காகியும் எம்மனம் ஆறுதில்லையே
அன்பு முகத்தை அழிவில்லா நினைவுகளை
நெஞ்சில் சுமந்தபடி ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மயூரி 0771177883 குடும்பத்தினர்.

(28348) (6.7.11)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 14.07.1942

மறைவு 21.01.2013

கடந்த 21.01.2013 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பக் குலவிளக்கு

## அமரர் சபாபதி சின்னம்மா (குஞ்சி)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (20.02.2013) புதன் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பண்டிதர் மாணிக்கத்தியாகராஜா வீதி, செட்டியார்வளவு, சுன்னாகம். (33524)(5.6.7) குடும்பத்தினர்.

# கூறுவிலை கோரல்

## வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்துக்குத் தேவைப்படும் அலுவலகப் பாவனைப் பொருள்கள் (Office Stationary) யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தினால் நடத்தப்படும் பயிற்சிப் பட்டறைகள், பரீட்சைக்கான வினாப் பத்திரங்கள், செய்கைத்தாள்கள் என்பவற்றினை அச்சுப்பிரதி பண்ணுதல், நிழற்பிரதி எடுத்தல் மற்றும் பயிற்சிப் பட்டறைகள், விழாக்களுக்கு காலை, மாலை, மதிய உணவு மற்றும் சிற்றுண்டிகள், குளிர்பானம் என்பவற்றை வழங்குவதற்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன.

எனவே கூறு விலைகளைச் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் கூறு விலைப் படிவங்களை யாழ். வலயக் கல்வி அலுவலக கணக்குக் கிளையில் பெற்று, 27.02.2013 பிற்பகல் 3 மணிக்கு முன்னர் யாழ்.வலயக்கல்வி அலுவலகக் கணக்குக் கிளையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். பிற்பகல் 3.30 மணிக்குக் கூறுவிலைகள் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்படும்.

செ.உ தயாகுமார்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,யாழ்ப்பாணம்.

(தி/4981)(2.6.7)

# பெயர் மாற்றம்

தேவிபுரம், அச்செழு,நீர்வேலியைச் சேர்ந்த கணபதி தவமலர் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து கணபதி தவமணி எனப் பெயர் மாற்றம் செய்வதோடு, சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

கணபதி தவமணி

(33547)(3.6.7)

# ஆள்கள் தேவை

SIB Communication கல்கிசை, Colomboஇல் பணியாற்றக்கூடிய வேலை ஆள்கள் தேவை. உணவு தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

தொடர்பு:-0777935700,0777002528

(27757)(3.6.7)

# வேலை ஆள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு ஆண் விற்பனையாளர்(Sales Man)உடன் தேவை.

தொடர்பு: 0778208085

(33549)(3.6.7)

# காணி விற்பனைக்கு

184/1, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் உள்ள 3 பரப்பு 4 குளி காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு
T.P-0777864032

(33641)(6.7.11)

# வீட்டுடன் காணி மலிவு விற்பனைக்கு

நல்லூர் மூத்தவிநாயகர் வீதி 133 ஆம் இலக்கத்தில் (பழைய வளவு) 05 பரப்பு காணி பகுதியாகவும் கொடுக்கப்படும்.

தரகர் தேவை யில்லை.

தொடர்பு:0755109327,0778323526

(33662)(3.6.7)

# காணி விற்பனை

கிளிநொச்சி,கனகபுரம் வீதியில் அமுதக் கடல் வாணிப நிலையத்திற்கு அருகில் 2 ஏக்கர் உறுதிக்காணி தென்னையுடன் கூடியது விற்பனைக்கு உள்ளது. விரும்புபவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு-0777250149

(24266)(3.6)

# காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, தும்பளையில் சிவப்பிரகாச வித்தியாலயத்திற்கு அண்மையில் வீட்டுடன் 1 ½ பரப்பு காணியும், வெறும் காணி 2 பரப்பு, வெறும் காணி 9 பரப்பும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 260 6422

(C/6512)(6.7.11)

advt@uthayan.com
0215671111

# டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

மீள்சுழற்சி

சகல விதமான மோட்டார் வாகனங்களின் உடைந்த பிளாஸ்ரிக் உதிரிப்பாகங்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் மீள் திருத்திக்கொடுக்கப்படும்.

இல. 06, நவலர் வீதி, சிவப்பிரகாச, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: இல. 30/27, ...
Tel: 021 222 8680, 0775925088, 0750407430

(T/1829)(2.6)

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 21★12★1981

விண்ணில் 20★02★2008

## அருமைத்துரை றனுஜா றெகானா

ஆண்டுகள் ஐந்து முடிந்ததம்மா
உன் ஆசை முகம் மறையவில்லையம்மா
நீ அம்மா என்றழைத்தாயே
ஆனந்தம் அடைந்தேன்
அப்பா என்று அழைத்தாயே
கட்டி அணைத்தேன்
அண்ணா என்று அழைத்தாயே
அக மகிழ்ந்தேன்
உன் எல்லையில்லாப் பயணம்
எங்களை வாட்டி வதைக்கின்றது.
உன் பிரிவால் கலங்கும்..

லண்டன். அம்மா, அப்பா அண்ணாமார்கள்.

(33565) (10.6.7)

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 20.01.1928

இறப்பு 20.02.2012

## அமரர் அருட்சகோதரி மேரி விக்ரறின் சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

*"நான் ஆண்டவருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன் அவரும் என் பக்கம் சாய்ந்து என் மன்றாட்டைக் கேட்டருளினார்"*


அன்னாரின் ஆன்மா நித்தியமும் இறைவனில் இளைப்பாற வேண்டி இன்று (20.02.2013) புதன் கிழமை காலை 6 மணிக்கு யாழ். தூய அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். முற்பகல் 11 மணியளவில் புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலய தெய்வக்குழந்தைகள் இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், இரங்கல் நினைவுரையும் மதியபோசன நிகழ்வும் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் இதில் கலந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

புங்குடுதீவு - 02 (33573)(2.6.7) - சகோதரர்கள்.

# மரண அறிவித்தல்

## கிறிஸ்தோப்பர் றேமன் ஜோசவ்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், புனித பத்திரிசியார்கல்லூரி, யாழ்ப்பாணம்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும், பாண்டியந்தாழ்வில் வசித்தவரும், தற்போது நியூசிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்தோப்பர் றேமன் ஜோசவ் (17.02.2013) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோப்பர் றேமன்-பௌலினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மேரி றுத்தின் அன்புக் கணவரும், சாந்தி (ஆஸ்திரேலியா), ராஜநாதன் (ஆஸ்திரேலியா), ஜெயந்தி, ராஜ்மோகன் (லண்டன்), ராஜகுலேந்திரன் (நியூசிலாந்து), சறோஜினி (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிறதுஷா (ஆஸ்திரேலியா), நிர்மலன் இராசதுரை (ஓய்வுபெற்ற முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி), பெனிற்றா (லண்டன்), துஷானி (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சேவியர், சறோஜினி, சலேஷியஸ், சலாக்கினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஷெகான்-கிற்றி (நியூசிலாந்து), சுகனியா-டானியல் (நியூசிலாந்து), நிரோஷினி-அன்ரனி வைமன், பிரியதர்ஷினி, றுக்ஷனா, டிலக்ஷி, சரண்யா (லண்டன்), ஷனன், டானியல், ஜோடி (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புப் பேரனும் மற்றிசியின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நாளை (21.02.2013) வியாழக்கிழமை வெலிங்டன், நியூசிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.27/17, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0213002204
நியூசிலாந்து தொடர்பு: 006444780389 0064211746689

தகவல்: ஜொய்ந்தி (மகள்).

(33548) (6.7.10)

# இலங்கைக்கு ஆசி வேண்டி கொழும்பில் விசேட வழிபாடு

கொழும்பு,பெப்.20

அனைத்து இடர்களிலும் இருந்து இலங்கையையும் நாட்டு மக்களையும் பாதுகாத்திட இறை ஆசி வேண்டி விசேட ஆன்மிக வழிபாடு இன்று புதன்கிழமை கொழும்பு, கோட்டை உலக வர்த்தக மையத்தின் முன்பாக நடைபெறவுள்ளது.


சௌமிய இளைஞர் நிதியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு மேல் மாகாண சபை ஆளுநர் அலவி மௌலானா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் சர்வமதத் தலைவர்கள் மற்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உட்பட பல அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொள்வர்.

அண்மைக் காலமாக இடரால் தங்கள் உடைமைகள். உயிர்களை இழந்த குடும்ப அங்கத்தவர்கள் கலந்து கொண்டு பிரார்த்தனை, மௌன விரதம், மெழுகுவர்த்தி ஏற்றி தீப ஆராதனைகள் ஆகியவற்றை நடத்தவுள்ளனர்.

போரில் இருந்து நாடும் நாட்டு மக்களும் விடுவிக்கப்பட்டவர்களாக இருந்தபோதும், பல்வேறு இயற்கை மற்றும் மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் இடர்களால் நாளாந்தம் ஏற்படும் அழிவுகள் அதிகரித்த வண்ணம் உள்ளன என்று சௌமிய இளைஞர் நிதியம் குறிப்பிட்டது.

இதேவேளை இன,மத ரீதியிலான இடர்களைத் தடுக்க ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் பொலிஸ்மா அதிபரால் மதங்களுக்கெதிராக ஏற்படுத்தப்படும் அசம்பாவிதங்களைத் தடுக்க விசேட பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்கு மக்களது பங்களிப்பும் அவசியமானது என்று சௌமிய இளைஞர் நிதியம் தெரிவித்துள்ளது. (ச)



களனியில் குடிசையில் வாழ்ந்த மாணவி சஞ்சீவனி பிரியதர்சினி உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களிலும் 'ஏ' சித்திபெற்றுள்ளார். அந்த மாணவியின் குடும்ப வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக அமைச்சர் விமல் வீரவன்ச நேற்றுமுன்தினம் அவரது பாடசாலையான பெரகனை ரத்னாவலி பாலிகாவுக்குச் சென்று வீட்டை இலவசமாக கையளித்தார். மாணவியிடம் வீட்டுக்கான திறப்பை அமைச்சர் கையளித்தபோது...

# சர்வதேச பாடசாலைகளில் தாய்மொழி கற்பிப்பது கட்டாயம்

## கல்வி அமைச்சுக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,பெப்.20

இலங்கையிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் தாய்மொழி, சமயம், வரலாறு ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும். சர்வதேச பாடசாலையில் கல்வி கற்றாலும், இந்த நாட்டிலுள்ள அனைத்து மாணவர்களும் தாய்மொழியையும், நாட்டின் வரலாற்றையும் சமய நல்வழி முறைகளையும் தெரிந்திருப்பது மிக முக்கியயாகும்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.


நாட்டில் இயங்கும் சகல தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளின் செயற்பாடுகள் கல்வி அமைச்சின் நியமனங்கள் மற்றும் சட்டதிட்டங்களுக்குக் கீழ் கொண்டு வரப்படுவது அவசியம். அதற்கிணங்க சட்டங்களை வகுத்துச் செயற்படுமாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இசுருபாயவிலுள்ள கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் அரச பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் என்ற பேதங்களுக்கு இடமில்லை. சகல பாடசாலைகளும் கல்வி அமைச்சின் நிர்வாகத்தின் செயற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டே இயங்க வேண்டும்.

அதேபோன்று ஒழுக்கமும் வினைத்திறனும் சகல பாடசாலைகளினதும் மாணவர்களுக்கு மிக அவசியமானது என்பதைக் கருத்திற்கொண்டு பாடசாலை நிர்வாகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.



சர்வதேச பாடசாலைகள் தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

ஒழுக்கத்துக்கு முக்கியத்துவமளித்து தாய்மொழி மற்றும் வரலாறு ஆகியவற்றில் எதிர்கால சந்ததியினர் தேர்ச்சியுள்ளவர்களாகத் திகழ்வது அவசியம்.

சர்வதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் பல மாணவர்களுக்கு தாய் மொழி தெரியாது.

இந்த மோசமான நிலை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். அது தொடர்பில் கொள்கை ரீதியான தீர்மானம் முக்கியமாகும்.- என்றார்.

அமைச்சுக்கள் மூலம் நாட்டு மக்களுக்கு சிறந்த சேவைகள் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் அமைச்சுக்களின் செயற்பாடுகளை மீளாய்வு செய்து குறைநிறைகளை நிவர்த்தி செய்யும் செயற்திட்டம் ஜனாதிபதியின் தலைமையில் சகல அமைச்சுக்கள் ரீதியாக முன்னெடுக்கப்படவுள்ளது. அதன் முதல் செயற்றிட்டமாக கல்வியமைச்சின் மீளாய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம், ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

இந்த மீளாய்வுக் கூட்டத்தில் அமைச்சர்கள் பந்துல குணவர்தன, பஸில் ராஜபக்ஷ, துமிந்த திசாநாயக்க, ஜனாதி பதியின் செயலாளர் லலித் வீரதுங்க உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி கல்வி முகாமைத்துவ தகவல் தொடர்பான இணையத்தளத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்துள்ளார். (ச)

# போர் வெற்றிகொள்ளப்பட்டும் சமாதானம் தோல்வியடைந்தது

## சந்திரிகா சொல்கிறார்

கொழும்பு,பெப்.20

போர் வெற்றிகொள்ளப்பட்ட போதிலும், சமாதானம் தோல்வியடைந்துள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

மக்கள் கட்சியின் தலைவர் விஜயகுமாரதுங்கவின் நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

மக்கள் கட்சியின் கொள்கைகள் குறித்து அமைச்சர் ராஜித சேனாரட்ண கருத்து வெளியிட்டமை மகிழ்ச்சி அளிக்கின்றது.

இன்றைய சூழ்நிலைகளின் அடிப்படையில் கருத்து வெளியிடுவோருக்கு நாளை என்னவாகும் என்று தெரியாது.



கடந்த ஏழு ஆண்டுகளாக நான் துன்புறுத் தப்பட்டுள்ளேன். ஊடகங்கள் அது குறித்து கேள்வி எழுப்புகின்றன. ஆனால் நான் அழுத்தங்கள் பற்றிய தகவல்களை வெளியிடப் போவதில்லை.

அனைத்து மக்களும், அனைத்து நிலைமைகளும் மாற்றமடையும் என்ற கௌதம புத்தரின் கோட்பாட்டை நான் நம்புகின்றேன்.-என்றார். (ச)

# பன்றி இறைச்சி இறக்குமதிக்குத் தடை

கொழும்பு,பெப்.20

இந்தியாவிலிருந்து பன்றி இறைச்சி இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது என்று கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தியாவில் பரவி வருகின்ற பன்றிக் காய்ச்சல் காரணமாகவே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் எடுத்து வரப்பட்ட 400 கிலோ கிராமுக்கு அதிகமான பன்றி இறைச்சி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இந்த பன்றி இறைச்சி அடம்பன் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் ரெஜிபோமில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.அதன்போது இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# பட்டதாரி பயிலுநர்களுக்கு இரண்டு நாள் விடுமுறை

## பொது நிர்வாக அமைச்சால் சுற்றறிக்கை

கொழும்பு,பெப்.20

பட்டதாரி பயிலுநர்களாக அரசால் இணைத்துக் கொள்ளப்பட்டு ஒன்பது மாதங்களைப் பூர்த்தி செய்த அனைத்து பட்டதாரி பயிலுநர்களுக்கும் இரண்டு நாள் விடுமுறைகளை வழங்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒன்பது மாதப் பயிற்சிக் காலத்தை பூர்த்தி செய்துள்ள பட்டதாரி பயிலுநர்களுக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டு நாள் அமைய விடுமுறை வழங்கப்படவுள்ளது.

ஒன்பது மாதம் பூர்த்திசெய்த பெண் பட்டதாரிகளுக்கு 84 நாள்கள் முழுச் சம்பளத்துடன் கூடிய பிரசவ விடுமுறைகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான சுற்றறிக்கை அமைச்சுக்களின் செயலர்கள், மாகாண சபைகளின் தலைமைச் செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச)

## சிகரெட் பெட்டியில் அறிவூட்டும் படங்கள் உள்ளடங்கும் சட்டவரைபை

# நடைமுறைப்படுத்தக்கோரி சுகாதார அமைச்சுக்கு மனு

கொழும்பு,பெப்.20

சிகரெட் பெட்டியின் 80 வீதமான பகுதியில் வாய்ப்புற்று நோய் குறித்து அறிவூட்டும் படங்களை உள்ளடக்குவது தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி 10லட்சம் பேரின் கையொப்பங்கள் அடங்கிய மனு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.


இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி விகாரமகா தேவி பூங்காவுக்கு முன்பாக. நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்ட முடிவில் ஊர்வலமாக வந்தே இந்த மனு கையளிக்கப்பட்டது.

சிகரெட் பெட்டியின் 80 வீத பகுதியில் வாய்ப்புற்று நோய் தொடர்பாக புகைப் படங்களை உள்ளாக்குவது தொடர்பான மதுசார கட்டுப்பாட்டுச் சட்டத்தை நடமுறைப்படுத்த அமைச்சர் மைத்திரிபால சிரிசேன தீர்மானித்தார்.

அதற்கு எதிராக புகையிலை கைத்தொழிற் துறையினர் வழக்குத் தொடர்ந்தனர். ஆனால் குறித்த சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி நேற்று முன்தினம் காலை மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கையில் புகைத்தலால் தினமும் 60 பேர் இறக்கின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

.இலங்கையில் நடைபெறும் உயிரிழப்புகளில் 68 வீதமானவை தொற்றா நோய்களின் மூலம் ஏற்படுவதோடு, அதற்கு புகை பாவனையே நேரடிக் காரணமுமாகும். (ச)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
14.03.1943

மறைவு
21.01.2013

## அமரர் வேலாயுதம் தர்மஞானசிங்கம் (சிங்கம்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும், பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் தர்மஞானசிங்கம் கடந்த (21.01.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இறைபதமடைந்த செய்தி கேட்டு உடன் வந்து ஒத்தாசை நல்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தூரத்தில் இருந்து தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தோருக்கும், அனுதாபம் தெரிவித்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(33550)(6.7.45)

முல்லை வீதி, பரந்தன். குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு 04.02.1928 இறப்பு 21.01.2013

அமரர்

## பொன்னர் இராசையா J.P

(ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரிய ஆலோசகர்)

கடந்த 21.01.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் செய்திகேட்டு நேரில் வந்தும், தொலைத் தொடர்புகள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (20.02.2013) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொல்புரம் மேற்கு, சுழிபுரம். (33650) (106.6.7) குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



அமரர்

## நடேசு இரத்தினசிங்கம்

(ஓய்வுபெற்ற இ.போ.ச. நடத்துநர்)

தோற்றம்
29.07.1942

மறைவு
21.01.2013

"பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்த எங்களின் அன்புத் தெய்வமே"!

அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வு இன்று (20.02.2013) புதன்கிழமை காலை 5 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து சபிண்டீகரண நிகழ்வு நண்பகல் 12 மணிக்கு நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

கிளான், துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

(27750) (45.6.7)

# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி வைத்தியநாதன் (S.I)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிட மாகவும் கொண்ட சின்னத்தம்பி வைத்தியநாதன் நேற்றுமுன்தினம் (18.02.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காசிப்பிள்ளை - தங்கக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகனும், சுகிர்த பூஷணத்தின் அன்புக் கணவரும், சச்சிதானந்தம் (பெல்ஜியம்), மேகனாதன் (Amstrong- பிரான்ஸ்), விக்னேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகௌரி, வதனா ஆகியோரின் அன்பு மாமனும், டிலானி, கேசிகா, அஞ்சலின், அஞ்சனா, ஆப்ஸ்ரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2013) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி வைத்தியநாதன்
(குடும்பம்)
T.P.021 5100034, 0776692833.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(33574)(2.6.7)

## முதியோர்களுக்கு மூக்குக்கண்ணாடி



நாவிதன்வெளி,பெப்.20


நாவிதன்வெளி பிரதேச செயலகமும் சவளக்கடை பொலிஸ் நிலையமும் இணைந்து பார்வை குறைபாடுள்ள 40 முதியோர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்கியுள்ளன.

சவளக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 15ஆம் கொளனி, காரைக்குடாவிலுள்ள நடமாடும் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற கண்சிகிச்சை முகாமின் போதே இந்தக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

தேசத்துக்கு மகுடம் தேசிய கண்காட்சியை முன்னிட்டே இந்த வைத்திய முகாம் ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வெள்ளம் பாதித்த மக்களுக்கு நட்டஈடு வழங்கவேண்டும்

## கிழக்கு முதல்வரிடம் கோருகிறார் செல்வராசா எம்.பி.



திருகோணமலை,பெப்.20

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத்தை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பிலும் அவர் முதலமைச்சரிடம் விளக்கினார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, இடர் நிவாரண அமைச்சு, மாகாண சபை ஆகியவற்றின் நிதி உதவிகளைப் பெற்று கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவரிடம் உறுதியளித்துள்ளார். (ச)

## ஏழைக் குடும்பத்துக்கு உதவிய பிரிட்டன் தமிழ்ச் சிறுவன்

மட்டக்களப்பு,பெப்.20

மட்டக்களப்பு, திருப்பழுகாமத்தில் சிறு குடிசையில் இரண்டு குழந்தைகளுடனும், வயதான தன் தாயாருடனும், கணவனை இழந்த நிலையில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த பெண் ஒருவருக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

அவரின் பரிதாப நிலை கண்டு ஒருசிலர் எடுத்த முயற்சியால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அவர்களுக்கான உடுதுணிகள், உணவுப் பொருள்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுப்பொருள்கள், பாடசாலை உபகரணங்கள் எனப் பல பொருள்கள் கிடைத்துள்ளன.

பிரிட்டனில் வசிக்கும் சற்குணேஸ்வரன் குடும்பத்துக்குக் கிடைத்த இந்த ஏழைக் குடும்பத்தின் வறுமையை உணர்த்தும் புகைப்படத்தைப் பார்த்த அவரது மகன் சாயி நிரூபந், தனது வீட்டில் தான் உண்டியல் மூலம் சேர்த்த பணத்தொகையை, மட்டக்களப்பில் ஆதரவற்ற மக்களுக்காகப் பணியாற்றிவரும் சமூக நலன்புரி அமைப்பின் ஊடாக வழங்கினார்.

அத்தோடு நாளொன்றுக்கு ஒரு பவுண் வீதம் (ரூபா 200) தனது வீட்டில் உண்டியல் மூலமாக சேர்த்து இந்தக்குடும்பத்துக்கு மாதாந்தம் சமூக நலன்புரி அமைப்பின் ஊடாக உதவ அந்தச் சிறுவனின் உள்ளம் முன்வந்துள்ளமை, புலம்பெயர்ந்து சென்றாலும் தமிழ் சிறார்களிடம் மனித நேயம் வளர்கின்றது என்பதற்கு சான்றாக அமைகின்றது.

பிரிட்டன் சிறுவனின் உதவிப் பொருள் களைப் பெற்ற குடும்பம் மிகச்சிறிய குடிசையில்வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கின்றது. குடிதண்ணீருக்கு ஒரு கிணறோ, சுகாதார தேவைக்கான ஒரு மலசலகூடமோ இல்லை. அத்தோடு நோய்வாய்ப்பட்டுள்ள இந்தப் பெண் தொழில் வாய்ப்பு செய்ய முடியாத நிலையிலே வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# வாரத்தில் ஏழு நாள்களும் கடற்றொழிலில் ஈடுபடலாம்

## தடை ஏற்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை

ஏறாவூர்,பெப்.20

வாரத்தில் ஏழு நாள்களும் மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட அனுமதியுண்டு. மதக் காரணங்களை முன்னிறுத்தி கடற்றொழிலுக்குத் தடை ஏற்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட கடல்தொழில் உதவிப் பணிப்பாளர் டொமிங்கோ ஜோர்ஜ் தெரிவித்தார்.

ஏறாவூர், புன்னைக் குடாக் கடலில் வெள்ளிக் கிழமைகளில் மீன் பிடிப்பதற்குச் சில தரப்பினர் தடை ஏற்படுத்தியுள்ளனர் என்று கூறப்படும் முறைப்பாடு குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது கடற்றொழிலாளர்கள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ பாஸ் அனுமதி இன்றி சுதந்திரமாகக் கடலுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபட முடியும். இந்த விடயத்தில் மதக் காரணங்களை முன்னிறுத்தி எவரும் தனியாகவோ அல்லது அமைப்பு ரீதியாகவோ கட்டளை பிறப்பிக்க முடியாது. அவ்வாறு நடந்தால் அது மனித உரிமை மீறலாகக் கொள்ளப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இது குறித்து ஏறாவூர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கும் அறிவித்துள்ளேன்.-என்றார்.




கல்முனை மாநகர சபையின் வருமானப் பிரிவின் நடவடிக்கையை மேம்படுத்துவதற்காக 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஆசிய மன்றம் வழங்கியுள்ளது. அதற்கான காசோலையை ஆசிய மன்றத்தின் நிகழ்ச்சித்திட்ட அதிகாரி எம்.ஐ.வலீத், கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிபிடம் வழங்குகிறார். அருகில் மாநகர சபையின் அதிகாரிகள் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் காணப்படுகின்றனர்.

# காந்தியின் சிலைக்கு 'ஓய்வு' மட்டு.நகரை அழகுபடுத்த

மட்டக்களப்பு,பெப்.20

மட்டக்களப்பு நகர அழகுபடுத்தல் திட்டத்தின் கீழ் நகரின் மத்தியிலுள்ள பிரதான மணிக்கூட்டுக் கோபுர சுற்றுவட்டத்தின் வேலைகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகின. அந்த சுற்றுவட்டத்தில் இருந்த காந்தி சிலையும் அகற்றப்பட்டு பிறிதொரு இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.



இந்தத் திட்டத்தின் கீழ் நகரின் மத்தியில் உள்ள காந்தி சதுக்கம், காந்தி பூங்காவாக மாற்றம்பெறவுள்ளது. 'தேசத்தின் மகுடம்' வேலைத் திட்டத்தின் கீழ் இந்த அபிவிருத்தித் திட்டம் நடைபெறுகின்றது.

இந்த வேலைத்திட்டத்தை மட்டக்களப்பு மாநகர சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியன இணைந்து நடைமுறைப்படுத்துகின்றன.

மட்டக்களப்பு மாநகர சபை வீதி அபிவிருத்திக்கான வேலைகளையும், நகர அபிவிருத்தி அதிகாரசபை சிலைகள் நிறுவுதல், சுற்றுவேலி அமைத்தல், கொங்கிறீற் இடுதல், புற்றரை அமைத்தல் உள்ளிட்ட வேலைகளையும் மேற்கொள்ளவுள்ளன.

கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டம் அடுத்த மாத இறுதியில் நிறைவடையவுள்ளது.

2030 வரையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மட்டக்களப்பு மாநகரை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ், 28 இணைத்திட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றின் முதலில் 7 திட்டங் கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு கோட்டை, விமானநிலையம், வெள்ளைப்பாலம், காந்தி சதுக்கம், வெபர் மைதானம், மட்டக்களப்பு வாயில் உள்ளிட்ட பகுதிகள் புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# இராகலை தொழிலாளர் வேலைநிறுத்தம்

நுவரெலியா,பெப்.20

நுவரெலியா, இராகலை சென் லெனாட்ஸ் தோட்டத் தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இராகலை, சென் லெனாட்ஸ் தோட்டத்துக்குச் சொந்தமான தோட்ட அதிகாரியின் தங்குமிடத்தையும், தொழிலாளர்களின் அலுவலகத்தையும் தனியாருக்குக் குத்தகைக்குக் கொடுக்க நிர்வாகம் முடிவு செய்துள்ளது. அதனைக் கண்டித்தே இந்த வேலை நிறுத்தத்தில் சுமார் 350 தொழிலாளர்கள் ஈடுபட்டனர்.

குறித்த இடம் தனியாருக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்படுமானால் தங்களுடைய அன்றாட அலுவலக விடயங்களுக்காக இரண்டு கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள இராகலை அலுவலகத்துக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று தொழிலாளர்கள் கூறினர். எனவே, உடனடியாக நிர்வாகம் இந்தத் தீர்மானத்தை கைவிடவேண்டும். இல்லாவிட்டால் தமது போராட்டம் தொடரும் என்று தொழிலாளர்கள் குறிப்பிட்டனர்.

இந்த வேலைநிறுத்தத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் இலங்கை பெருந்தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியனவற்றின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## சுற்றுலாத்துறை கற்கை நெறி

அம்பாறை,பெப்.20

கிழக்கு மாகாண இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேராவின் வழிகாட்டலில் கீழ் இராணுவ அதிரடிப் படையின் மூன்றாவது பிரிவு நடத்தும் சுற்றுலாத் துறை கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அம்பாறை சேவா லங்கா பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது. (ச)



அம்பாறையில் யானை ஒன்று உயர் மின்னழுத்தத் தையுடைய மின் வேலியில் அகப்பட்டு நேற்றுமுன் தினம் உயிரிழந்துள்ளது.

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு.

**இடபம்:** பல வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். பேச்சில் கண்டிப்பு வேண்டாம். வியாபாரத்தில் யாரையும் நம்பி பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் அலைக் கழிக்கப்படுவீர்கள்.

**மிதுனம்:** குடும்பத்தினருடன் சின்ன சின்ன விவாதங்கள் வந்துப் போகும். அரச காரியங்கள் இழுபறியாகும். உறவினர்கள் சிலர் உதவி கேட்டு தொந்தரவு தருவார்கள். வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும்.

**கடகம்:** பணம் தேவையான அளவு இருக்கும். கடன் பிரச்சினைகள் தீரும். தந்தையாரின் உடல் நலம் சீராகும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**சிங்கம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களின் ஆதரவு கிட்டும். அரசால் ஆதாயம் உண்டு. யோகா, தியானம் இவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**கன்னி:** நீண்ட நாளாகப் பிற்போட்ட காரியங்கள் இன்று நிறைவேறும். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். கொடுக்கல் வாங்கலில் சுமுகமான நிலை காணப்படும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**நாளை**

மாசி- 09 வியாழக்கிழமை 21.02.2013

திதி: ஏகாதசி மு.இ 11.08 வரை

நட்சத்திரம்: திருவாதிரை மு.இ. 08.45 வரை

சுபநேரம்: 08.01- 09.31 வரை

இராகுகாலம்: 02.01- 03.31 வரை

**துலாம்:** தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கப் பாருங்கள். மறதியால் பிரச்சினைகள் வந்து விலகும். விமர்சனங்களை கண்டு அஞ்சாதீர்கள். வியாபாரத்தில் புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். பேச்சால் தடைபட்ட காரியங்களை முடிப்பீர்கள். நீண்டகால நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**தனுசு:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். உடன் பிறந்தவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. நட்பு வட்டாரம் விரியும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** குடும்பத்தினரின் ஆதரவு கிட்டும். உடன்பிறந்தவர்களின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபார ரீதியாக சிலரைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

**கும்பம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும். மறைமுகமான போட்டிகளை வெல்வீர்கள்.

**மீனம்:** முடியாமல் போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு கிட்டும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8 | | | 4 | 9 | |
| | | 9 | 2 | | | 7 | | 5 |
| | 2 | | 5 | 9 | 6 | 3 | | |
| | 5 | | | | 8 | 9 | | |
| 7 | | 8 | | | | 1 | | 4 |
| | | 2 | 1 | | | | 8 | |
| | | 4 | 6 | 2 | 7 | | 3 | |
| 2 | | 3 | | | 9 | 5 | | |
| | 7 | 1 | | | 5 | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 9 | 5 | 3 | 2 | 8 | 1 | 7 |
| 7 | 5 | 3 | 9 | 1 | 8 | 2 | 4 | 6 |
| 1 | 8 | 2 | 7 | 6 | 4 | 9 | 5 | 3 |
| 2 | 4 | 1 | 6 | 8 | 9 | 3 | 7 | 5 |
| 8 | 9 | 5 | 3 | 4 | 7 | 6 | 2 | 1 |
| 3 | 7 | 6 | 2 | 5 | 1 | 4 | 9 | 8 |
| 6 | 3 | 7 | 4 | 2 | 5 | 1 | 8 | 9 |
| 5 | 2 | 8 | 1 | 9 | 6 | 7 | 3 | 4 |
| 9 | 1 | 4 | 8 | 7 | 3 | 5 | 6 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்புகையில் உப பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


அழகப்பா பல்கலைக்கழகம்

2013-2014 ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

வகுப்புக்கள், பரீட்சைகள் யாழ் எமது நிறுவனத்தில் நடைபெறும்

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்ட , பட்டமேற்படிப்புக்கள்

A/L மூன்று பாடசித்தியுடன் நீங்களும் இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரியாகலாம்

உங்கள் பதிவுகளை 25-2-2013 முன்னர் மேற்கொள்ளவும்

Under Graduate Programmes ( 3 years )

B.A. – Tamil, English, Histroy, Public Administration

B.Sc. – Psychology, IT, Mathematics, Computer Science

B.Com. – Computer Application, General

B.B.A. – Banking, Corporate Secretaryship, Business Administration

நூலகர்களுக்கான விசேட கற்கை நெறிகள்
- Certificate in Library Science
- Bachelor of Library & Information Science
- Master of Library & Information Science

Post Graduate Programmes

M.A. – Education, Tamil, English, Histroy, Mass Communication & Journalism, Child Care & Education, Personal Management & Industrial Relations

M.Com. – General, Finance & Control

M.Sc. – Mathematics, Computer Science, Information Technology, Physics, Chemistry, Botany-Plant Bio Technology

M.B.A. – International Business, Corporate Secretaryship, Hospital Management, Project Management, Banking & Finance, Investment Management, Tourism Management, Education Management, Human Resource Management

(C/4971)

வகுப்புகள் அனைத்தும் வாரநாள் முழுநேரம் வாரஇறுதிநாள் முழுநேரம் ஒழுங்கு செய்து தரப்படும் 0212219460

University Approved Information & Study Centre

MCIS

Mind Vishion

College of International Studies ( Pvt. ) Ltd

( Reg No : PV 85546 )

No.04, Clock Tower Lane,Navalar Road, Jaffna.

(பொருளியல் கல்லூரி அருகாமை Science corner ஒழுங்கை)

பெற்றோர்களே...!

உங்கள் பிள்ளைகளின் உயர் கல்விக்கு பல புதிய வாய்ப்புக்கள் இதோ!

B.E ENGINEERING @ BANGALORE

Bachelor of Engineering Don Bosco Institute of Technology - BANGALORE

உங்கள் பொறியியல் கனவை நாம் நனவாக்குகின்றோம். உலகில் தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்கும் பெங்களூர் ( Bangalore ) சென்று உங்கள் பட்டப் படிப்பை தொடருவதற்கு அரிய வாய்ப்பு

Food and Accommodation FREE

- Computer Science Engineering
- Information Science Engineering
- Electronics & Communication Engineering
- Electrical & Electronics Engineering
- Mechanical Engineering

ஆங்கிலப்பயிற்சி நெறி

உயர் கல்வி அமைச்சின் சான்றிதழ்

பாடசாலையில் பயிலும் மணவர்கள், பரீட்சைக்குத்தோற்றியோர்,உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் உகந்தது

Certificate issued by

National Online Distance Education Service of the Ministry of Higher Education

A/L மூன்று பாட சித்தி இல்லாத நீங்களும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரி ஆகலாம்

தமிழ் மொழி மூலமாக இளநிலை பட்டப்படிப்புக்கான ஆயத்தப்படிப்பு (Bachelor's Preparatory Programme (BPP)) உடன் நீங்களும் மூன்று வருடங்களில் B.A , B.Com பட்டதாரியாகலாம்

(C/4971)

Limited Seats Only Apply Now

2013-2014 ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தொடர்புகளுக்கு 0212219460

Don Bosco Institute of Technology - Admission Office

MCIS


Mind Vishion

College of International Studies ( Pvt. ) Ltd

( Reg No : PV 85546 )

No.04, Clock Tower Lane,Navalar Road, Jaffna.

(பொருளியல் கல்லூரி அருகாமை Science corner ஒழுங்கை)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# மெய்வன்மைப் போட்டிகள்

வடமராட்சி, பெப்.20

உடுத்துறை மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் வே.புவனேந்திரராஜா தலைமையில் நடைபெறும்.

இந்தப் போட்டிக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண பொதுச்சேவை ஆணைக் குழு உறுப்பினர் இ.தர்மகுலசிங்கம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி கே.பொன்னையா, பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (3-8)

★ ★ ★

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி மி.விமலநாதன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி. செலின் சுகந்தி செபஸ்தியனும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகு போதனாசிரியர் திருமதி ஜெ.சரவணபவ ஐயரும் கலந்து கொள்வர். (3)

★ ★ ★

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சென். நீக்லஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலனும் கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே.சிவச்சந்திரனும் கலந்துகொள்வார்.

## பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், பெப்.20

கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலையில் இன்று நடைபெறவிருந்த இல்ல மெய்வன்மைப்போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என பாடசாலை அதிபர் யோ.திரவியநாதன் அறிவித்துள்ளார். (3)

## சோதனை மேல் சோதனை

"சோதனை மேல் சோதனை போதுமடா சாமி!" என்று நம்மையே அலுத்துக் கொள்கின்ற நேரங்கள் பல உண்டு. ஊன்றிப் பார்த்தால் உலக வாழ்வே ஒரு சோதனைக் களம் தான். ஒவ்வொரு தீர்மானங்களையும் நாம் நாளாந்தம் எடுக்கும் போதும் அங்கு சோதனை வருகிறது. நாம் நல்ல எண்ணங்களை உருவாக்கி நல்லவற்றுக்காக நம்மை அர்ப்பணிக்கின்றோமா என்பதில்தான் நமது வெற்றி, தோல்வி தங்கியிருக்கிறது.

திருமணமாகாத ஒருவர், திருமணமான ஒருவரிடம் "காதலி தரும் சோதனைக்கும் மனைவி தரும் சோதனைக்கும் உள்ள வேறுபாடு என்ன என்று கேட்டார். அதற்கு அவர் "மனைவியே காதலி தந்த சோதனை தானே என்று பதிலளித்தார். இவ்வாறு நாம் எப்போதும் சோதனைக் களத்தில்தான் இருக்கின்றோம்.

நமது மனித வாழ்வை ஆட்கொண்டிருக்கும் காரணிகளைப் பார்ப்போமானால் அவற்றை மூன்று நிலைகளில் அடக்கலாம். அவை உடல், பொருள், ஆவி [ஆன்மா]. இதை வெல்லும்போது நாம் உலகையே வெல்கிறோம். நாளாந்த வாழ்வில் நாம் வெற்றி வீரர்களாகிறோம். ஒவ்வொரு நாள் வாழ்விலும் இரவு நித்திரைக்குப் போகும் போது மனம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

### தவக்காலச் சிந்தனை

நன்றாகத் தூங்கி இளைப்பாற முடியும். தொடரும் வாழ்வை உற்சாகமாகவும் எதிர்கொள்ள முடியும். நமது நாளாந்த ஒவ்வொரு செயற்பாடுகளிலும் தீயவற்றை எண்ணி தீயவற்றை செயற்படுத்தும் போது நாம் நமது அன்றாட வாழ்வில் அமைதி, மகிழ்ச்சி அற்றவர்களாக மாறி நல்ல தூக்கமும் கலைந்து நோயாளர்களாகவும் ஆவதற்கு வழி சமைத்து விடும்.

எனவே நாளாந்தம் காலையில் எழுந்ததுமே சிறிது நேரம் அமைதியாக இருந்து இறைவனிடம் நம் எண்ணங்களை ஒருமனப்படுத்தி நாம் செய்ய வேண்டியவைகளை நன்றாகச் செய்ய சக்தியை வேண்டி நமது நாளாந்த வாழ்வை ஆரம்பிக்கும்போது அந்த வாழ்வு நமக்கும் மற்றவர்களுக்கும் பயனுள்ள வாழ்வாக அமையும்.

**அருட்பணி அ.ஸ்ரீபன் செ.தா அருள் ஆச்சிரமம்**

# மின் தடைப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம்,பெப்.20

வீதி அகலிப்பு பணிகளுக்காகவும் மின் மார்க்கங்களின் புனரமைப்பு பணிகளுக்காகவும் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை வியாழக்கிழமை காலை 8 மணியில் இருந்து மாலை 6 மணிவரையும் குஞ்சர் கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டமானாறு, உடுப்பிட்டி, ஆனைக்கோட்டை, காக்கைதீவு, அட்டகிரி, சாவற்கட்டு, வராகி அம்மன் கோவிலடி, ஆனைக்கோட்டை, குளப்பிட்டி வீதி ஆகிய இடங்களிலும்-

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணியில் இருந்து மாலை 6 மணி வரையும் மாலு சந்தி முதல் இரும்பு மதவடி, மடத்தடி வரையான பிரதேசம், மாவடி, சித்தன்கேணி, மாவடி, மூளாய் வீதி, டச்சு வீதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (3)

## சமயப் பரீட்சை

உரும்பிராய் கிழக்கு கண்ணகா ஸ்ரீ பரமேஸ்வரி கண்ணகை அம்மன் ஆலயத்தில் மகா சிவராத்திரியை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே சைவசமயப் போட்டிப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

போட்டியில் கோப்பாய் பிரதேச பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்கள் கலந்துகொள்ளலாம் என ஆலய போஷகர் எம்.என். நாதன் சாமியார் தெரிவித்துள்ளார். (3)

## இரண்டு லொறிகள் இன்று ஏலத்தில்

யாழ்ப்பாணம், பெப்.20

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட இரண்டு லொறிகள் இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னதாக குறிப்பிட்ட வாகனங்களை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதிவாளரின் அனுமதியுடன் பொது மக்கள் பார்வையிட முடியும் என யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் கே.விஸ்வநாதன் அறிவித்துள்ளார். (3-13)

## வருடாந்த பெருந்திருவிழா

சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சி அம்பாள் ஆலய பெரும் திருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் மாசி மகத் தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (3-9)

"ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ"

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



வதனி ஜுவலறியின் ஸ்தாபகரும்
எங்களை வாழ வைத்த தெய்வமும்

அமரர்

## சண்முகம் இரத்தினம்

(பத்தர் ஐயா)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 19.01.1917 | 23.02.2010 |

திதி : வளர்பிறை தசமி

பண்பின் உருவமாகவும் பாசத்தின் உறைவிடமாகவும் பார் போற்றும் உத்தமனாகவும் பாரினிலே வாழ்வாங்கு வாழ்ந்து பரமனடி சேர்ந்து ஆண்டுகள் இரண்டாகி விட்டன. இரண்டு ஆண்டுகள் சென்றா லும் எமது உள்ளங்களில் நீங்கள் என்றும் வாழ்கின்றீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இத்தியடி விநாயகனின் பாதார விந்தங்களைப் பணிந்து நிற்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும் **குடும்பத்தினர்.**

(வதனி ஜுவலறி கொடிகாமம்/சாவகச்சேரி)
பொற் தொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

(33564)(2-6)

# இலங்கை கடற்படைதாக்கியதில் இந்திய மீனவர்கள் 22 பேர் காயம்

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் திடீர்த் தாக்குதல் நடத்தியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் மீன்பிடிக்கச் சென்றனர். அப்போது ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். மீனவர்கள் எடுத்து வந்த ஜி.பி.எஸ். கருவிகளை சேதப்படுத்தினர். அதன்போது 22 மீனவர்கள் காயமடைந்தனர்.

முன்னதாக கச்சதீவு திருவிழா நடப்பதால் நாளை முதல் பாதுகாப்பு கருதி மீன்பிடிக்க மீனவர்கள் செல்வதில்லை என முடிவு செய்திருந்த இந்தச் சூழ்நிலையில் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

(வ)






## மரண அறிவித்தல்

### தேவசகாயம் அந்தோனிப்பிள்ளை



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் சீந்திப்பந்தல், இளவாலையை நிரந்தர வசிப்பிடமாகவும், இல.49, கண்டிவீதி, சுண்டுக்குளியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் அந்தோனிப்பிள்ளை (17.02.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் அவருடைய தற்காலிக முகவரியான இல.49, கண்டிவீதி, சுண்டுக்குளியிலிருந்து நாளை (21.02.2013) வியாழக்கிழமை காலை அவரது நிரந்தர முகவரியான சீந்திப் பந்தல், இளவாலையிலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு பிற்பகல் 3 மணிக்கு மாரீசன் கூடல் புனித கயித்தார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியைத் தொடர்ந்து மாரீசன் கூடல் கயித்தார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 49, கண்டி வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.


தகவல்:
குடும்பத்தினர்.
(33577) (45.6.7) 021 222 8982

### வடமராட்சி கல்வி வலயத்தில் தொழில் பயிற்சிகள்

வடமராட்சி கல்வி வலயத்தில் நான்கு நிலையங்களில் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் தொழிற் பயிற்சி நெறி கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம், கரவெட்டி இராஜகிராமம் ஸ்ரீ நாரதா வித்தியாலயம், கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை, மாமுனை கணினி நிலையம் ஆகியவற்றிலேயே பயிற்சி நிலையங்களைவலயமுறைசாராக் கல்விப் பிரிவினர் நடத்தவுள்ளனர். பயிற்சி நெறிக்கு பாடசாலையை விட்டு விலகிய ஆர்வமுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது விண்ணப்பங்களை அந்தந்த பாடசாலை அதிபர்களிடம் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் தெரிவித்துள்ளார். (3-8)


MANIPAL COLLEGE OF MEDICAL SCIENCES, NEPAL

INSPIRED BY LIFE




SPOT ADMISSIONS FOR AUG 2013 BATCH

Venue: Taj Samudra Colombo
Date: Sat 23rd Feb and Sun 24th Feb
Time: 8AM - 6PM

Venue: Hotel Topaz, Kandy
Date: Tue 26th Feb
Time: 10AM – 5 PM

Featured in the World Health Organisation's Directory of Accredited Medical Schools, MCOMS makes your dream of serving humanity through medicine come true.

**Highlights**

- Established in 1994 on a 38-acre campus and affiliated to Kathmandu University
- On campus, 825 bed multi-speciality teaching hospital
- Admissions based purely on merit
- Prepares graduates to appear for international licensing examinations - ERPM (Sri Lanka), USMLE (USA & Australia), PLAB (UK) and FMGE (Govt of India) exams among others
- Recognised by The British Columbia & Ontario Student Assistance Program ( BCSAP & OSAP ), Canada, and accredited by the California & New York State Medical Boards
- **Recognized by Sri Lankan Medical Council**
- **MCOMS, Nepal has a record of consistently turning out high pass percentages in the (ERPM) / ACT 16 Exams**

**Eligibility**

- At least 50% marks in Physics, Chemistry and Biology i.e. minimum 'C' grade for Sri Lankan and 'D' Grade for International boards at the A level or equivalent examination
- At least 50% marks in English at 'AS'/'O' Level or equivalent examination


**For more details**

00977 61 440387 / 440600 (Between 08:30 am - 04:30 pm)
Secretary, Sri Lankan Parents Association (SLPA)
Cell No: 0094-773047625, Treasurer: 0773258258
mcoms@manipal.edu.np
www.manipal.edu.np

MANIPAL EDUCATION


## மரண அறிவித்தல்

### செல்லத்துரை குணரட்ணம் (சுதுமலை)



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செ.குணரட்ணம் நேற்றுமுன்தினம் (18.02.2013) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராஜா-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் (இராணி) அன்புக் கணவரும், விஜயகுமாரி (சண்டிலிப்பாய்), சாந்தினி (ஜேர்மனி), ரஜனி (சுதுமலை), கௌசலாதேவி (கனடா), காலஞ்சென்ற கவிதா மற்றும் சசிகலா (சுதுமலை), சிவகாந்தன் (கனடா), தீபா (சுதுமலை) ஆகியோரின் அன்புத்தந்தையும், புலேந்திரதாஸ் (சண்டிலிப்பாய்), யோகராசா (ஜேர்மனி), சத்தியசீலன் (சுதுமலை), தர்மராசா (கனடா), அகிலதா (கனடா), யசோதரன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமனும், விஜயதாஸ், கிருபதாஸ், லக்ஷிகா, நிதர்ஷனா, தர்சனா, உமாகாந், தர்சிகா, பிரதீபன், கபிலன், ஆரணி, சஞ்சீவன், சஜீவன், சப்தியேல், ஷாம்சன் கணானி, ஷாம், ஷாதோக், ஷலோமி, நிதோஷன், லோஜனா ஆகியோரின் அன்புப் பேரனும், சங்கவியின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (22.02.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் ஒரு மணிக்கு தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருத்தடி வீதி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

(33575) (6,7,10)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
24.06.1939

உதிர்வு
23.02.2010

அமரர்
### சுப்பிரமணியம் நாகம்மா

(திதி: அமாவாசை கழிந்த நாமி)



கண்முன்னே வாழ்ந்த காலங்கள் கனவாகிப் போனதுவோ
இனிமையான உங்கள் பேச்சுக்கள் இடைநடுவில் நின்றதுவோ
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் –எம் அன்னைக்கு ஈடாகுமோ
மண்ணைவிட்டு விண்சென்று மூன்றாண்டுகள் ஆனதுவோ
மண்ணில் நாம் உள்ளவரை மறந்திடாது உங்கள் நினைவு

மிசன் பாடசாலை வீதி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

(27753)(5.6.7)

குடும்பத்தினா.

# மாணவரிடம் பணம் அறவிட்டால் அதிபர்களுக்கு எதிராக நடவடிக்கை

**கிழக்கு முதல்வர் சொல்கிறார்**

திருகோணமலை,பெப்.20

கிழக்கு மாணவர்களிடமிருந்து பணம் அறவிட்டால், அவ்வாறான பாடசாலை அதிபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத் தெரிவித்தார்.

அது தொடர்பிலான மீள் சுற்றறிக்கை சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் அரச நிர்வாகத்தின் கீழேயே செயற்படுகின்றன.

இந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான நிதி மாகாண அமைச்சால் வழங்கப்படுகின்றது.

அதனால் பாடசாலை நிர்வாகம் மாணவர்களிடம் பணம் அறவிட வேண்டிய தேவையில்லை என்று அவர் கூறினார். (ச)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### பன்மொழிப்புலவர் தம்பு கனகரத்தினம்



மயிலங்கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வாழ்விடமாகவும் கொண்ட பன்மொழிப் புலவர் தம்பு கனகரத்தினம் நேற்று முன்தினம் (18.02.2013) திங்கட்கிழமை இரவு இறையடி சேர்ந்தார்.

அன்னார் மயிலங்கூடல், இளவாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பு தம்பதியரின் மகனும், திலகவதி (ஓய்வுநிலை ஆசிரியை -சைவ மங்கையர் கழகம்) அவர்களின் அன்புக் கணவரும், தொட்டிலடி, சண்லிப்பாய் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இராணி பொன்னையா அவர்களின் சகோதரனும், சி.பாஸ்கரா (கொழும்பு மாநகர சபை உறுப்பினர்), திருமதி கனகரூபினி உமாகாந்தன் (கனடா), சஞ்சிதா, சஞ்சீவன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சிறிய தந்தையும், பொ. செங்கதிர்ச்செல்வன் (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களின் மாமனும், கேதாரணி, அஸ்வின், ஆர்த்திக், பாலகுகன், ரஸ்மி, இசான், சேயோன், சேந்தன், வானதி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (20.02.2013) புதன்கிழமை காலை 8 மணி முதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 11 மணிக்கு இறுதிக்கிரியைகள் ஆரம்பமாகி பிற்பகல் ஒரு மணிக்கு கல்கிசை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் (சி/6621) (46.6.7)

தகவல்:
**சி. பாஸ்கரா**
கொழும்பு மாநகர சபை உறுப்பினர்

தொலைபேசி: 077 2378 718

## மரண அறிவித்தல்

### கனகரெத்தினம் இராசம்மா



உரும்பிராய் தெற்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், பொன்னையா லேன், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரெத்தினம் இராசம்மா நேற்று (19.02.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு கனகரெத்தினத்தின் பாசமிகு மனைவியும் வைரவிப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மகளும் சிவகுரு சின்னத்தங்கச்சி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான நடராசா செல்லத்துரை, இராசதுரை, தம்பித்துரை, அருளம்மா, ரோசம்மா, இராசக்கோன் மற்றும் பரஞ்சோதி ஆகியோரின் சகோதரியும் கலைவாணி, கருணாகரன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற கலாநிதி மற்றும் கலைமணி (கனடா), கிருபாகரன் (ஜேர்மனி), காந்தரூபன் (ஜேர்மனி), காலஞ்சென்ற கண்ணன் மற்றும் காந்தரூபி (ஜேர்மனி), கௌரிதேவி (லண்டன்), காலஞ்சென்ற காண்டீபன் ஆகியோரின் பெரியதாயும் காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி, மல்லிகா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2013) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

தகவல்
கி.கலைவாணி
(மகள்)

## மரண அறிவித்தல்

### கந்தையா இரட்ணசிங்கம்



மண்கும்பான், 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 32/1, குமாரசாமி வீதி, கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா இரட்ணசிங்கம் நேற்றுமுன்தினம் (18.02.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா காமாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரேஸ்வரியின் அன்புக் கணவரும் ரமணன் (அமெரிக்கா), பார்த்திபன், காண்டீபன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் திலகவதி, பராதேவி, சரோஜினிதேவி, பிரேமாவதி, காலஞ்சென்றவர்களான புஷ்பாதேவி, சரஸ்வதிதேவி, திலகேஸ்வரி மற்றும் லோகநாதன், லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனும் பரமேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் குணசிங்கம் (கனடா), சிவனேசசிங்கம் (நெதர்லண்ட்), யோகேஸ்வரி (அமெரிக்கா), மனோமணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சத்தியமூர்த்தி (இந்தியா), மகேஸ்வரி (கனடா), சதானந்தன் (கட்டார்), காலஞ்சென்ற செல்வதி மற்றும் பிரபாவதி, கணேசமூர்த்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (22.02.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

32/1, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
0779522945, 0212228146.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### வீரகத்தி பொன்னையா

பெரியரசடி சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி பொன்னையா கடந்த (17.02.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னர் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் சறோஜாம்மா, மதிவகுணன், சிவயோகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசம்மா, காலஞ்சென்றவர்களான குஞ்சர், பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணேசன் (இலங்கை மின்சார சபை, சாவகச்சேரி), செல்வராணி, மிதிலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் பவான்- வேணுகா (கனடா) பிரமிலா (யாழ். பல்கலைக் கழகம், கலை 3ஆம் வருடம்), நிரோஷன் (யாழ். தொழில்நுட்பக் கல்லூரி), கீத்தா, கேமலதன், திலீபன், ஸ்ரீமாலினி, ரூபன், ஆர்த்திகா, ஆரணி, அபிஷா, ஆருஷ் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2013) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பெரியரசடி
(யாழ்/ சா/இந்துக் கல்லூரி அருகில், சங்கத்தானை)
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய குருக்களான
**சோமநாதக் குருக்கள்**
அவர்களின் அன்புத் தாய்
திருஞான சம்பந்தக்குருக்கள்
கருணாகரேஸ்வரி அம்மா
அவர்களின் மறைவால்
துயரடைந்துள்ள
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய ஏழாலை அத்தியடி விநாயகப்
பெருமானின் பாதாரவிந்தங்களைப்
பிரார்த்திக்கின்றோம்.

**ஏழுகோயிலடி,**
**ஏழாலை மத்தி,**
**ஏழாலை.**

(33651)(2.6.7)

**ஏழாலை அத்தியடி,**
**விநாயகர் தேவஸ்தானமும்**
**அடியார்களும்.**

# பெற்றோல் திருடியவர்கள் மக்களால் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.20

இளைஞர்கள் இருவர் பெற்றோல் நிரப்பு நிலையத்தை உடைக்க முற்பட்ட வேளை அப்பகுதியால் சென்ற மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கபட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 8.30 மணியளவில் கோப்பாய் சந்திக்கு அண்மையிலுள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்றது.

சம்புவ இடத்துக்கு வந்த கோப்பாய் பொலிஸார் குறித்த இருவரையும் விசாரணைக்கு உட்படுத்தினர். இதன் போது 'தாம் வந்த மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் முடிந்து விட்டதாகவும் அதனால் பூட்டியிருந்த பெற்றோல் நிரப்பு நிலையத்தை உடைத்து ஒரு லீற்றர் பெற்றோல் எடுத்ததாகவும் உண்மையை ஒப்புக்கொண்டனர்'

இதனையடுத்து குறித்த இளைஞர்கள் இருவரையும் கோப்பாய் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர் இருவரும் போதையில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.(ஜ-17)

# முன்னாள் போராளிகள் மட்டக்களப்பில் கைது

மட்டக்களப்பு,பெப்.20

மட்டக்களப்பில் வாகரை மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களில் முன்னாள் போராளிகள் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பயங்கரவாத தடுப்பு புலனாய்வுப் பிரிவினரே அவர்களை, விசாரணைக்கு அழைத்துச் சென்றுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரனிடம் உறவினர்கள் முறையிட்டுள்ளனர்.

தமது உறவினர்கள் கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் உறவினர்கள் சிலர் எனது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார். இயல்பு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பவர்களை மீண்டும் கைதுசெய்து விசாரணைக்கு என்று அழைத்துச் செல்வதை நியாயமான செயல் என்று கருத முடியாது என்று அவர் சுட்டிக்காட்டினார். இவ்வாறான நெருக்கடிகள் ஏற்படும்போதுதான் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு சட்டவிரோத பயணங்களை மேற்கொள்ளும் நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகின்றனர் என்று அவர் கூறினார்.

இரு வாரங்களுக்கு முன்னர் மூதூர் பிரதேசத்திலும் 6 பேர் இவ்வாறு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச)

# 55 டெங்கு நோயாளர்கள்

கல்முனை,பெப்.20

இந்த ஆண்டில் கல்முனைப் பிரதேசத்தில் 55 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், கல்முனை மாநகர சபை, மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியன இணைந்து டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றன.

இதேவேளை, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வரை 50 டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வெளியேறி யுள்ளனர் என்று வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.எல். எம்.நஸீர் கூறினார். (ச)

# 'தேசத்துக்கு மகுடம்' மார்ச் 23 இல் ஆரம்பம்

## கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார் ஜனாதிபதி மஹிந்த

அம்பாறை,பெப்.20

'தேசத்தின் மகுடம்' கண்காட்சியின் பிரதான நிகழ்வு அம்பாறை ஹாடி தொழில்நுட்ப கல்லூரியில் இடம் பெறவுள்ளது என்று தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தெழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சி அடுத்த மாதம் 23ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அவர் கூறினார். இந்தக் கண்காட்சியில் எமது நாட்டின் சகல விடயங்களையும் பிரதிபலிக்கும் வகையில், சுமார் 2 000 காட்சிக் கூடங்கள் நிறுவப்பட உள்ளன. தற்போது அவற்றின் பெரும்பாலான வேலைகள் முடிவடைந்துள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கண்காட்சியை பார்வையிட வருகின்ற மக்களுக்கு சகல விதமான வசதிகளையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் ஏற்பாட்டுக் குழு நிறைவு செய்துள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

'தேசத்தின் மகுடம்' கண்காட்சி பெப்ரவரி 4 ஆம் திகதியே ஆரம்பிக்கப்படவிருந்தது. எனினும் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற வெள்ள இடர் காரணமாக இந்தக் கண்காட்சி அடுத்தமாதம் 23 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)


குறைந்த செலவில்
அதிக இலாபத்தை தரும்
சிறந்த முதலீடு



விலை ரூ. 460,880/-
மேற்குறிப்பிடப்பட்ட விலை VAT உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, முன்னறிவிப்பின்றி மாறுபடலாம்.

முதலிடும் பணத்தை
ஒரு வருடத்தில் மீளப்பெறகூடிய,
மீள்விற்பனையின் போது அதிகூடிய
விலையில் விற்கக்கூடிய,

**பஜாஜ்** முச்சக்கர வண்டியொன்றை
நீங்களும் வாங்குங்கள்

- பயணங்களோடு சுயதொழிலொன்று
- குறைந்த செலவில் வீட்டு பிரயாணங்கள்
- எரிபொருள் சிக்கனம், டயர் மற்றும் உதிரிப்பாக செலவு மிக குறைவு, வருடாந்த அனுமதிபத்திரம், காப்புறுதி போன்றவற்றுக்கான செலவு குறைவாகையால் உங்களுக்கும் சிறந்த சேமிப்பு
- மீள்விற்பனையின் போது அதிக பெறுமதி
- நீங்களும் மேலதிக வருமானத்தை பெறுவதோடு, இன்னொறுவருக்கும் தொழிலொன்றை வழங்கி உள்ளம் மகிழ்ந்திடுங்கள்

**பஜாஜ்**

தவறாத வருமானத்திற்கு - சரியான முதலீடு



tradlanka


DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com


உடனடிப் பயணம் **துபாய்** நாட்டில்

Dodsal நிறுவனத்துக்கு

# உதவியாளர்கள்

(Helpers)





AI/2541/Advt:/13/12

எண்ணிக்கை - 250

சம்பளம் - Dhs - 575+ OT

- ஆரோக்கியமான தேக நிலை
- வயதெல்லை: 23-35
- சுறுசுறுப்பான வேலைத் திறமை

**Hotline: 0727 544 333**

(C/6519)(2.6)

ஒரு Dhs = 34 ரூபா

**நேர்முகப் பரீட்சை**

பெப்ரவரி 21/22

**Hotel Lovusiya**

லவ்சியா ஹோட்டல்

இல.584, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
பாஸ்போர்ட் மற்றும் வெள்ளை நிறப் பின்னணியுடனான 16 புகைப்படங்களுடன் உடனடியாக வாருங்கள்.

**சேவை நிபந்தனைகள்**

- ஒப்பந்தக் காலம் 2 வருடங்கள்
- வழக்கமான 8 மணித்தியால வேலையுடன் மேலதிக வேலை நேரம்
- உணவு, தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவச் செலவு அனைத்தும் இலவசம்
- ஒப்பந்தக் காலம் முடிவடைந்த பின் திரும்பிவர இலவச விமான டிக்கட்
- ஏனைய நிபந்தனைகள் ஐக்கிய அரபு இராச்சியத்தின் தொழில் சட்டங்களுக்கு உட்பட்டவை.

கட்டணம் ரூபா 61,546/=



## இக்ரா வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்

இல.634-1/1 மற்றும் 1/2, மருதானை வீதி, மருதானை, கொழும்பு-10 (ஆனந்தாக் கல்லூரியின் முன்பாக)


தொ.பே: 0094 115 544 333 பெக்ஸ்: 0094 115 544 337

அனுமதிப் பத்திர இல. 2541

மின்னஞ்சல்: info@ikralk.com

### கீர்த்திகன் வெற்றிக்கிண்ண கூடைப்பந்து

# யாழ்.இந்து சாதித்தது



முதல் மூன்று சுற்றுகளிலும் வாங்கிய அடிக்கு பழி தீர்ப்பது போல இறுதிச் சுற்றில் விஸ்வரூபம் எடுத்தனர் பற்றிக்ஸ் கல்லூரி வீரர்கள். தமது முழுத் திறமையையும் வெளிப்படுத்தி அவர்கள் ஆக்ரோஷ ஆட்டத்தில் இறங்கினர். ஆயினும் காலம் கடந்த முயற்சி என்பதால் வெற்றியைப் பெற முடியவில்லை.

யாழ்ப்பாணம்,பெப். 20

கீர்த்திகன் வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமிடையே கொக்குவில் இந்துக் கல்லூரி நடத்திய கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி 22 புள்ளிகள் வித்தியாசத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை தோற்கடித்துச் சம்பியனானது.

இந்தச் சுற்றுப் போட்டியின் ஆண்களுக்கான இறுதியாட்டம் கொக்குவில் இந்துக்கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 7.30 மணியளவில் மின்னொளியில் நடைபெற்றது.

இந்த இறுதிப் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரியும், சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய நேரத்தில் இருந்தே யாழ். இந்துக் கல்லூரி ஆட்டத்தில் வேகத்தை வெளிப்படுத்தியது. இதனால் முதல் சுற்றில் யாழ்.இந்துக் கல்லூரி 19:4 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலையில் காணப்பட்டது.

அடுத்தடுத்த சுற்றுகளிலும் யாழ்.இந்துக் கல்லூரியின் ஆதிக்கம் தொடர்ந்தது. அந்த அணி வீரர்களின் மின்னல் வேக ஆட்டத்தால் பற்றிக்ஸ் கல்லூரி வீரர்கள் நிலைகுலைந்து புள்ளிகளைப் பெறத் தடுமாறினர். எனவே இரண்டாவது, மூன்றாவது சுற்று களை முறையே 14:7, 25:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் தன்வசம் ஆக்கியது யாழ். இந்து.

முதல் மூன்று சுற்றுகளிலும் வாங்கிய அடிக்கு பழி தீர்ப்பது போல இறுதிச் சுற்றில் விஸ்வரூபம் எடுத்தன பற்றிக்ஸ் கல்லூரி வீரர்கள். தமது முழுத்திறமையையும் வெளிப் படுத்தி அவர் கள் ஆக்ரோஷ ஆட்டத்தில் இறங்கினர். இதனால் யாழ். இந்து அணி வீரர்கள் புள்ளிகளைப் பெறமுடியாது தவித்தனர். இறுதிச் சுற்றை 20:6 புள்ளிகள் என்ற அடிப் படையில் பற்றிக்ஸ் கல் லூரி வீரர்கள் கைப்பற்றினர். ஆயினும் அவர்களது போராட்டம் சற்றுமுன்னதாக வெளிப்பட்டிருந்திருந்தால் ஆட்டத்தின் போக்கே மாறி யிருக்கும். எனினும் காலம் கடந்த பின்னர் எழுச்சி கண்டதால் வெற்றிக் கிண்ணத்தை யாழ்.இந்துவிடம் பறிகொடுக்க வேண்டிய நிலை பற்றிக்ஸ் கல்லூ ரிக்கு ஏற்பட்டது.

ஆட்ட நேர முடிவில் யாழ்.இந்துக் கல்லூரி 64:46 என்ற புள்ளிகளைப் பெற்று 22 புள்ளகள் வித் தியாசத்தில் பற்றிக்ஸைத் தோற்கடித்து வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.

இறுதிப் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரியைச் சேர்ந்த அனுசன் 18 புள்ளிகளையும், தயாகரன் 15 புள்ளிகளையும், கபிலன் 12 புள்ளிகளையும் பெற்றார்கள்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கென்டிக்ஷன் 22 புள்ளிகளையும், சந்தோஷ் 13 புள்ளிகளையும் பெற்றனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக யாழ்.இந்துக் கல்லூரியைச் சேர்ந்த தயாகரனும், தொடர் நாயகனாக சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கென்டிக்ஷனும் தெரிவு செய்யப்பட்டார்கள். (ஙு-23-86)

## இன்றைய ஆட்டங்கள்



வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

**பி.ப.4 மணி**

விண்மீன் விளையாட்டுக் கழகம் எதிர்
இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம்.

★ ★ ★

யாழ்.உதைபந்தாட்டலீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களின் 40 வயதுக்குமேற்பட்ட வீரர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

**பி.ப.3.45 மணி**

யாழ்.ஐக்கியம் விளையாட்டுக்கழகம் எதிர் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம்.

★ ★ ★

கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக்கழகம், தென்மராட்சி பிரதேச விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தும் மின்னொளியிலான தாச்சி சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணியின் விபரம் வருமாறு,

**பி.ப.7.30 மணி**

கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக 'பி' அணி எதிர் கைதடி சித்திவிநாயகர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி.

(ஙு-23-228)

## வடமராட்சி வலய மகளிர் கரப்பந்து இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.20

வடமராட்சிக் கல்வி வலய பாடசாலைக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு, 17 வயதுப் பிரிவு, 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இன்று புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

மேற்படிபோட்டியில் பங்குபற்றவுள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு-

**15 வயது ('ஏ' பிரிவு)**

நெல்லியடிமத்திய மகா வித்தியாலயம், வடஇந்து மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலை.

**15 வயது ('பி' பிரிவு)**

சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை, வல்வை மகளிர் வித்தியாலயம், தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்.

17வயது ('ஏ' பிரிவு)

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி, கரணவாய் மகா வித்தியாலயம்.

17 வயது('பி'பிரிவு)

சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், வல்வை சிவகுரு வித்தியாலயம், வல்வை மகளிர் வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு

சென்.தோமஸ் றோ.க. பெண்கள்பாடசாலை,மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வட இந்து மகளிர் கல்லூரி, வல்வை மகளிர் வித்தியாலயம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.(ஙு-23)

## போட்டி நிரல் தயாரிப்பு

ELITE SPORTS

யாழ்ப்பாணம்,பெப்.20

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான குழு நிலைப் போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

மேற்படி போட்டிகளுக்கான, போட்டிநிரல் தயாரிக்கும் நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ளது. இதன்போது போட்டியில் பங்குபற்ற பதிவு செய்த விளையாட்டுக் கழகங்களின் பிரதி நிதிகளைத் தவறாது சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஙு-9-23)

### 'ஸ்ரார் ஒவ் வடமராட்சி' கிரிக்கெட் தொடர்

# ஞானம்ஸ் அரையிறுதியில்



யாழ்ப்பாணம்,பெப்.20

கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் 'ஸ்ரார் ஒவ் வடமராட்சி' சுற்றுப் போட்டியின் காலிறுதியில் வென்று அரையிறுதிக்கு முன்னேறியது ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம்.

இந்தத் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து திருநாவலர் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய திருநாவலர் விளையாட்டுக்கழகம் 14 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் 8இலக்கு களை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது.

திருநாவலர் விளையாட்டுக்கழகம் சார்பில் அதிகூடிய ஓட்டங்களாக காந்தன் 26 ஓட்டங்களையும். ஜேந்தன் 06 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பாக குணதீபன், சேந்திரன்,துவாகரன் ஆகியோர் தலா இரு இலக்குகளையும். அனுசயந்தன்,சுதர்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

54 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் 9.1 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் 5 இலக்கு களை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. அந்த அணி சார்பில் சங்கர் 26 ஓட்டங்களையும், துஷியந்தன் 7 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். பந்து வீச்சில் திருநாவலர் விளையாட்டுக் கழகம் சார்பாக காந்தன்,சுதன் ஆகியோர் தலா இரு இலக்குகளையும் ஜெயந்தன் ஒரு இலக்கினையும் கைப் பற்றினர். இந்த வெற்றி மூலம் அரை யிறுதிப் போட்டிக்கு ஞானம்ஸ் அணி தகுதி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த சங்கருக்கு கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினரும், கணித ஏஆயருமாகிய சுரேஸ் கிண்ணம் வழங்கி கௌரவித்தார்.



# சமரவீரவுக்கு யோகம்

பங்களாதேஷுக்கெதிரான டெஸ்ட் தொடரில் இலங்கை அணியில் மீண்டும் சிரேஷ்ட வீரர் திலான் சமரவீர சேர்க்கப்பட்டுள்ளார்.



இலங்கையின் முன்னாள் அணித் தலைவரான மஹேல ஜெயவர்த்தன காயமடைந்துள்ளார். எனவே அவருக்குப் பதிலாகவே திலான் சமரவீரவுக்கு இலங்கை அணியில் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

பங்களாதேஷுக்கெதிரான 20 பேர்கொண்ட இலங்கை அணி அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்தப் பட்டியலில் இலங்கை அணியின் முன்னணி வீரர்களான திலான் சமரவீர, பிரசன்ன ஜெயவர்த்தன, தரங்க பரணவிதாரன ஆகியோர் இடம்பெற்றிருக்கவில்லை. இந்த நிலையில் மஹேல காயமடைந்துள்ளதால் அவருக்குப் பதிலாக ஒரு அனுபவ வீரரை தேர்வு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனையடுத்து டெஸ்ட் போட்டிகளில் நிலைத்து நின்று ஆடக்கூடிய திலான் சமரவீரவை தேர்வாளர்கள் முன்மொழிந்துள்ளனர்.

தேர்வாளர்களின் இந்த முடிவை விளையாட்டுத்துறை அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார் என்று இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

பங்களாதேஷ் அணி இலங்கையில் 2 டெஸ்ட் போட்டிகளிலும், 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், ஒரேயொரு 20/20 சர்வதேசப் போட்டியிலும் பங்குபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

# இஷானிக்கு பதவி



இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு உப தலைவியாக இஷானி கௌஷல்யா தேர்வாகியுள்ளார்.

3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலிரு போட்டிகளுக்குமான அணியே தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் இடம்பெற்றுள்ள 14 பேரின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஷஷிகலா சிறிவர்தன தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த அணியின் உப தலைவியாக, உலகக்கிண்ணப் போட்டிகளில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்திய இஷானி கௌஷல்யா நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது வெளியிடப்பட்ட பட்டியலில் இடம்பெற்றுள்ள 14 பேர் தவிர, 5 பேர் மேலதிகமான வீராங்கனைகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். வீராங்கனைகள் யாருக்காவது உபாதை ஏற்படின் இவர்களிலிருந்து ஒருவர் மாற்று வீராங்கனையாக தெரிவுசெய்யப்படுவர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், ஐந்து 20/20 சர்வதேசப் போட்டிகளிலும் இலங்கைக்கெதிராக விளையாடவுள்ளது. முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை மகளிர் அணியின் விபரம்:-

ஷஷிகலா சிறிவர்தன, இஷானி கௌஷல்யா, சாமரி அத்தபத்து, சாமரி பொல்கம்பொல, டிலானி மனோதரா, சந்திமாலி தொலவத்த, சாமனி செனவிரத்ன, ஈமாலி வீரக்கொடி, உதேஷிக்கா பிரபோதினி, பிரசாதினி வீரக்கொடி, தீபிகா ரசங்கிக்கா, இனோக்கா ரணவீர, நிலுனி ஹென்சிக்கா, ரங்கிக்கா பெர்னாண்டோ

மேலதிக வீராங்கனைகள்: சந்திமா குணரத்ன, நிலக்ஷி டீ சில்வா, ஒஷாதி ரணசிங்க, அமா காஞ்சனா, மதுரி சமுத்திரிக்கா. (ந)


# மீண்டும் பூம் பூம்

பாகிஸ்தான் அணியின் அதிரடி ஆட்டக்காரரும், ரசிகர்களால் 'பூம் பூம்' என செல்லமாக அழைக்கப்படுபவருமான சயிட் அப்ரிடி, ஒருநாள் போட்டியில் மீண்டும் விளையாடவுள்ளார்.



பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவரான அப்ரிடி, (வயது 32), டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றிருந்தார். ஆயினும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் போட்டிகளில் பங்குபற்றவுள்ள பாகிஸ்தான் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா இலகுவாகக் கைப்பற்றிய நிலையில், அடுத்து இடம்பெறவுள்ள ஒரு நாள் சர்வதேச போட்டிகளிலும், 20/20 போட்டியிலும் வெற்றிபெற வேண்டிய கட்டாயம் பாகிஸ்தான் அணிக்கு ஏற்பட்டுள்ளது எனவே பலமான அணியை உருவாக்க பாகிஸ்தான் தேர்வாளர்கள் தீர்மானித்துள்ளனர். இதனாலேயே ஓய்வை அறிவித்திருந்த அப்ரிடியை மீண்டும் அணிக்குள் அழைத்துள்ளனர். இந்த அழைப்பை அப்ரிடியும் ஏற்றுக்கொண்டுள்ளார். இதனால் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 20/20 போட்டியிலும், 5 ஆட்டங்களைக்கொண்ட ஒருநாள் சர்வதேசத் தொடரிலும் அப்ரிடியின் அதிரடியை மீண்டும் காணும் வாய்ப்பு ரசிகர்களுக்கு கிட்டியுள்ளது. (ந)

# வெற்றியில் சாதனை



பாகிஸ்தான் அணிக்கெதிரான 2 ஆவது டெஸ்டிலும் தென்னாபிரிக்க அணி வென்றதால், இதுவரை அதிக வெற்றிகளை அணிக்குத் தேடிக்கொடுத்த தலைவர் என்ற சாதனையை கிரேம் ஸ்மித் படைத்துள்ளார்.

மூன்றுபோட்டிகள் கொண்ட பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் முதல் டெஸ்டில் 211 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றிருந்தது. பின்னர் கேப்டவுணில் நடந்த 2 ஆவது டெஸ்டிலும் 4 இலக்குகள் வித்தியாசத்தில் வென்றதன் மூலம் தென்னாபிரிக்கா தொடரையும் கைப்பற்றியது.

இந்த வெற்றிமூலம் தென்னாபிரிக்க அணியின் தலைவர் ஸ்மித் புதிய சாதனை ஒன்றைப் படைத்துள்ளார். டெஸ்டில் இவரது தலைமையில் தென்னாபிரிக்க அணிக்கு 49 வெற்றிகள் கிடைத்துள்ளன.

இதன்மூலம் டெஸ்டில் அதிக வெற்றி பெற்ற அணித்தலைவர் என்ற சாதனையை அவர் தனதாக்கிக்கொண்டார். இதற்கு முன்னர் ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் 48 டெஸ்டில் வெற்றி பெற்றதே இதுவரை சாதனையாக இருந்தது. அந்தச் சாதனையை முறியடித்தே அதிக வெற்றிகளை டெஸ்ட் போட்டிகளில் தேடிக்கொடுத்த அணித் தலைவர் என்ற உலக சாதனையை ஸ்மித் புரிந்துள்ளார். (ந)

# கொக்கியில் இந்தியா கோல் மழை

உலக ஹொக்கி லீக் சுற்றுப்போட்டியில் இந்திய அணி, பிஜி அணியை 16:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

சர்வதேச ஹொக்கி கூட்டமைப்பு (எப்.ஐ.எச்.) சார்பில் உலக ஹொக்கி லீக் சுற்றுத் தொடர் நடைபெற்று வருகிறது. மொத்தம் 4 சுற்றுகளைக் கொண்ட இந்தத் தொடர், இரண்டு வருடத்துக்கு ஒருமுறை நடைபெறும். ஆண்களுக்கான போட்டியில் 2 ஆவது சுற்று ஆட்டங்கள் டில்லியில் நடைபெற்று வருகின்றன. இதில் இந்தியா, வங்களாதேஷ், ஓமன், அயர்லாந்து, சீனா, பிஜி உள்ளிட்ட 6 அணிகள் விளையாடுகின்றன.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது லீக் போட்டியில் இந்தியா, பிஜி அணிகள் மோதின. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி கோல் மழை பொழிந்த இந்திய அணி, ஆட்டநேர முடிவில் 16:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றி பெற்றது.

இந்தியா சார்பில் அணியின் துணைத்தலைவர் ரகுநாத் டேனிஷ், முஜ்துபா ஆகியோர் தொடர்ந்து 3 கோல்களை அடித்து 'ஹட்ரிக்' சாதனை படைத்தனர். பிந்தர் போல் சிங், மலாக் சிங் ஆகியோர் தலா இரு கோல் அடித்தனர். ஆட்ட நாயகன் விருதை இந்தியாவின் ருபிந்தர் போல் வென்றார். (ந)


## IIS புதிய பிரிவு ஆரம்பம்
23.02.2013 காலை 10.30

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெற்ற மாணவர்களே உங்களுக்காகவே விஷேட பிரிவு ஆரம்பம்

**Courses**

- Certificate in Office Solution Development
- Certificate in Multimedia
- Certificate in Web Designing
- Certificate in DeskTop Publishing
- Certificate in Hardware Technology
- Certificate in Java Programming
- Certificate in Visual Programming
- Certificate in Management
- Certificate in Marketing Management
- Certificate in Human Resource Management
- Certificate in Computerized Accounting
- Certificate in Eng. Drawing & AutoCAD



மேலதிக விபரங்களுக்கு
021 4 922 741

ஒரு கற்கை நெறிக்கான கட்டணத்துடன் இரு கற்கை நெறிகளை பயின்று கொள்ளும் அதே வேளை Flash Memory ஒன்றையும் பரிசாக பெற்றுக் கொள்ளுங்கள்

INSTITUTE OF INFORMATICS STUDIES
100 CLOCK TOWER ROAD,JAFFNA
T.P : 021 222 2831/021 492 2741 FAX : 021 222 6933
WEB : iis.edu.lk E-Mail : iis@iis.edu.lk



## CD 200 விற்பனைக்கு

புதிய XP XXXX தொடரிலக்க JAPAN CD 200 விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776872980
(33581)(8.8.14)



## German Language Academy

German Swiss பொன்சர் மூலம் செல்பவர்களுக்கும், A1 பரீட்சைக்கு தோற்றவுள்ளோர்களுக்கும் எமது நிறுவனத்தினூடாக விசேட பயிற்சிகள் பெற்று ஜேர்மன் தூதரகத்தினால் நடத்தப்படும் பரீட்சையில் பங்குபற்றலாம்.

★ கடந்த 12.12.2012 அன்று நடந்த பரீட்சையில் 9 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

★ எமது நிறுவனத்தில் படிக்கும் மாணவர்களுக்கு இலவச புத்தகங்கள் வழங்கப்படும்.

Sun British College
Station Road, Vavuniya.
Mr. S. Kones

French மொழிகளும் இங்கு கற்கலாம்.

German Language Academy
23, Palaly Road, Jaffna.
0779707322.
(29912) (6)



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புக்கள் மிக விரைவில்... T.P.: 021 222 8093
61, Kachcheri Nallur Road, Jaffna.
(ரக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)



## கருத்தரங்குகள்

- முகாமைத்துவ உதவியாளர் தரம் III E.B பரீட்சைக்கு ஞாயிறு 9.00மணி
- கிராமசேவையாளர் மட்டுப்படுத்தப்பட்ட அதிசிறப்பு பரீட்சைக்கு ஞாயிறு 2.00 மணி
- தொழில்நுட்ப உத்தியோகத்தர் E.B பரீட்சைக்கு சனி 9.00மணி

யாழ்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி கொமர்சல் வங்கியருகில்)
(C/4983)(3.6.7)



## உடனடி வேலைவாய்ப்பு

சர்வதேச தரம் வாய்ந்த நிறுவனங்களிற்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன இருபாலரும் விரும்பதக்கது

1. சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்
2. வரவேற்பாளர்
3. தொழில்நுட்ப உத்தியோகத்தர்
4. கணனி வடிவமைப்பாளர்கள்
5. விமான பற்றுச்சீட்டு உத்தியோகத்தர்
6. வாகன ஓட்டுனர்

தொடர்புகளுக்கு

தேசிய தொழில் வங்கி
0710920920 Tel: 0214920505
www.nationjobbank.com



## கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி புதிய பிரிவுகள் ஆரம்பம்

★நீங்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவரா?
★சுய தொழில் ஒன்றை எதிர்பார்த்து காத்திருப்பவரா?
★வேலை செய்து கொண்டு பகுதிநேரமாக 10,000/-க்கு மேல் வருமானம் பெற வேண்டுமா?
★இத்துறையில் வெளிநாடு ஒன்றில் அதிக சம்பளத்துடன் வேலை வாய்ப்பினை எதிர்பார்ப்பவரா?
★கவலை வேண்டாம் நான்கே நாள்களில் உங்களை ஒரு Mobile Phone திருத்துனராக மாற்றுவோம்.

கட்டணம் 9500/=

100% உத்தரவாதம். ஆரம்பம்-22.02.2013 பதிவுகளுக்கு முந்துங்கள் காலை-9.00 மணிமுதல்

ISSEEES NALLUR CAMPUS
762, POINT PEDRO ROAD, NALLUR, JAFFNA.
0212224728, 0777929475


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
### வேலுப்பிள்ளை பாலசிங்கம்

கல்லூரிக் காலத்தில் சாதனை வீரனாய்
கலைப்பேரரசின் விருதுகள் பெற்றாய்
எல்லோர் மனதையும் இலகுவாய் வென்றாய்
நல்லோர் மனதில் குடியாய் இருந்தாய்
அல்லல் தரும் இவ்வுலகைத் துறந்தாய்
ஆண்டு ஒன்று சென்று மறைந்தது
அன்பு நினைவுகள் மாறவில்லையே?

குமுளமுனை,
முள்ளியவளை.

அன்பு அக்கா, மற்றும் உறவினர், நண்பர்கள்.


## வேலை வாய்ப்பு

களுதொட பினான்சியல் சேவிஸ் பிறைவேற் லிமிடெட்-இதன் 64ஆவது கிளை கிளிநொச்சி நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

எமது இப்புதிய கிளைக்கு பெண் காசாளர் ஒருவர் தேவை.

தகைமை-

- A/L பரீட்சையில்
- சித்தியடைந்திருத்தல்
- தமிழ், சிங்கள மொழிகளில் தேர்ச்சி

18 தொடக்கம் 26 வயது வரை விண்ணப்பிக்கலாம்.

இப்பதவிக்கு ஆர்வமுள்ளவர்கள் தங்களுடைய சுயவிவரம் தகைமைச் சான்றிதழ்களுடன் 23.02.2013 சனி மு.ப. 10.00 மணிக்கு வருகை தரவும்.

A9 றோட், இல:37,
கிளிநொச்சி(கச்சேரி முன்பாக)
தொடர்பு:0778854971
(24257)(8.6.14)



## ஆடைகளில் அச்சுக்கலை பயிற்சி
## FABRIC PRINTING TRAINING





ஆடைகளில் அச்சுக்கலை பற்றிய இரண்டு நாள் பயிற்சி
**யாழ்ப்பாணத்தில்** முதல் முறையாக
**பெப்ரவரி 22, 23 - வெள்ளி** மற்றும் **சனி**
ஆகிய 2 நாட்கள் நடைபெறுகிறது.

இடம் :
**TCT ஹால்,**
இலக்கம் 527, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்,

நேரம்:
காலை 10 மணி முதல்
மாலை 4 மணி வரை





இந்தியாவில் புகழ்பெற்ற ஆடைகளில் அச்சுக்கலை நிபுணர்
திரு. R. பரதராஜா அவர்களின் செய்முறைப் பயிற்சி பட்டறையில்
நீங்களும் கற்றுக்கொள்ள அரியதோர் வாய்ப்பு.

பிரிண்டிங் பற்றிய விபரங்களை தெரிந்து கொள்ள
உங்கள் VIJAY யில்
திங்கள் காலை 9:30 மணிக்கும்
DD. பொதிகை டிவியில்
மதியம் 1:30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்.

இலங்கையில் ரூபவாஹினி - நேத்ரா டிவியில் செவ்வாய் காலை 10:30 மணிக்கும்
வசந்தம் டிவி யில் ஞாயிறு காலை 11.00 மணிக்கும் காணத்தவறாதீர்கள்.

**பெயர்கள் முன் பதிவு மற்றும் விபரங்களுக்கு**
ஸ்ரீ நதியா டிஜிடல் கலர்லேப், இலக்கம் 108, லக்ஷன் பிளாசா பில்டிங்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
**077 77 22 181, 077 77 22 818, 075 61 52 434**

Since1989 Archanah ACADEMY
TEXTILE PRINTING INSTITUTION

Branches in India:- பயிற்சி கட்டணம்: ரூ. 3,500/- மட்டும்.
CHENNAI, TIRUVANANTHAPURAM, MUMBAI, HYDERABAD, BANGALORE, COCHIN & CALICUT, COIMBATORE, TRICHY.

Email: artsnframes@gmail.com Web: www.archanahacademy.com


## மரண அறிவித்தல்



### பொன்னையா நடராசா(சோதிடர்)

தாவடி தெற்கு, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நடராசா(சோதிடர்) (18.02.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-பார்வதி தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகர்-பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பாக்கியலட்சுமியின் கணவரும் இராசேந்திரம், மகேந்திரன், கணேஸ்வரி(இலண்டன்), யோகேந்திரன்(சுவிஸ்), அன்பரசி(சோதிடர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோன்மணி, ஜெகதீரன்(இலண்டன்), வித்தியானந்த நங்கை(சுவிஸ்), இராகவன்(நல்லூர் பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கிரிகரன்(சுவிஸ்), கிருபாளினி, கிரிராஜ்(இலண்டன்), கிரிசாளினி(சுவிஸ்), ஜெயவாணி(இலண்டன்), சந்திரவாகினி(இலண்டன்), ஜெயரதன்(இலண்டன்), இந்துஜா(சுவிஸ்), மாதவன், ஹரிணி, கௌதமன் ஆகியோரின் அன்புப் பேரனும் கீர்த்திகா, கிரிசனா, நர்த்தனன், அங்கவி, தர்சி, பிரிஸ்ஹா, துர்க்கா, துளசி, ஜெகநிஸ்கா, ஏனோக், நிகிஷா, வைஷ்ன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக மு.ப. 10.00 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தானை வீதி, தாவடி தெற்கு,
கொக்குவில்.

(28900)(8.14.15)

தகவல்:
குடும்பத்தினர்.
0212052708

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.